www.gnanam.info www.gnanam.lk

ISSN 2478-0340
ஜூன் 2020

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

கொரோனா
விழிப்புணர்வு இதழ்

விலை :
ரூபா 100/=

241



## மணிவிழா நாயகர்
## வவுனியூர் இரா. உதயணன்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்

ஞானம்
ஒளி: 21
சுடர்: 01
241

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

## தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்புபவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)
சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

# இதழினுள்ளே.....

⊙ **கவிதைகள்**

*மெய்யன் நடராஜ்* 06
*புசல்லாவை கணபதி* 10
*தமிழ் நேசன்* 15
*ஜின்னாஹ் ஷரிபுத்தீன்* 23
*கண்ணன்* 31
*அம்பலவன் புவனேந்திரன் (ஜேர்மனி)* 39
*யசோதா பத்மநாதன் (அவுஸ்திரேலியா)* 44
*பத்மா இளங்கோவன் (பிரான்ஸ்)* 46
*ரஷீத். எம். இத்தியாஸ்* 48

⊙ **சிறுகதைகள்**

*குரு அரவிந்தன் (கனடா)* 07
*நவஜோதி ஜோகரட்னம் (லண்டன்)* 16
*பொலிகை ஜெயா (சுவிஸ்)* 29
*கீதா கணேஷ்* 33

⊙ **கட்டுரைகள்**

*தி. ஞானசேகரன்* 03
*பேரா. சோ. சந்திரசேகரம்* 11
*ஞானம் பாலச்சந்திரன்* 24
*ஹரிணி ராம்சங்கர் (தில்லி, இந்தியா)* 32
*எஸ். சத்தியதேவன்* 35

⊙ **டயறிக் குறிப்பு**

*பேரா. ஆசி கந்தராஜா (அவுஸ்திரேலியா)* 21

⊙ **பத்தி**

*தமிழ்மணி மானா மக்கீன்* 38
*பேராசிரியர் துரை மனோகரன்* 42

⊙ **நூல் விமர்சனம்**

*நடேசன் (அவுஸ்திரேலியா)* 40

⊙ **வாசகர் பேசுகிறார்** 47

# ஆசிரியர் பக்கம்

## சமூக மட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பான விழிப்புணர்வு அவசியம்

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து உலகம் விரைவில் விடுதலைபெறும் என்ற அறிகுறி தென்பட வில்லை; தடுப்புமருந்து கண்டுபிடிப்பதும் இப்போதைக்குச் சாத்தியமில்லை என உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை செய்துள்ளது. இந்நிலையில் நாம் கொரோனாவுடன் இன்னும் எவ்வளவு காலத்துக்கு வாழப் போகிறோம் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இந்த வைரஸ் மனிதரை அசுர வேகத்தில் தொற்றிப் பிடித்து இலட்சக்கணக்கில் உயிர்களைக் காவுகொள்வது மட்டுமன்றி நாட்டின் அரசியல், பொருளாதாரம், சமூக உறவு, தனிமனித செயற்பாடுகள் என அது ஊடுருவாத இடமே இல்லை.

இந்நிலையில், பொதுமக்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை என்பதை நாட்டில் இடம்பெறும் நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. அரசின் சட்டங்களைமீறி ஊரடங்கு காலத்தில் வெளியே சுற்றுதல், சமூக இடைவெளி பேணாது முண்டியடித்து நிவாரணம் பெறுதல், கூட்டங்கூடுதல், கோவில் திருவிழாக்கள் நடத்துதல், வெற்றி விழாக்கள் கொண்டாடுதல் போன்ற செய்திகளை ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

கொழும்பு மாளிகாவத்தையில் ஒரு தனவந்தர் ஏழைகளுக்கு பண உதவி செய்தபோது அதனைப் பெற்றுக்கொள்ள முண்டியடித்தவர்கள் ஏற்படுத்திய சனநெரிசலில் மூன்று அப்பாவிப் பெண்கள் அகப்பட்டு உயிரிழந்த சம்பவமும் சமீபத்தில் நடந்து முடிந்திருக்கிறது. இச்சம்பவம் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தவேளையில் இடம்பெற்றது என்பது சோகத்திலும் சோகம்.

இத்தகையோர் சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்ட சுகாதார முறைகளைத் தமது வீடுகளில் பின்பற்றுவார்களா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. இவையாவும் மக்களிடையே கொரோனா பற்றிய விழிப்புணர்வு போதாமையையே காட்டுகிறது.

எவ்வித நோய் அறிகுறிகளும் காட்டாது சுகாதார அதிகாரிகளின் பரிசோதனைக்கு அகப்படாது, தான் ஒரு கொரோனா நோய்காவி என்பது தெரியாது சமூகத்தில் தொற்று நோயாளர்கள் இருக்க வாய்ப்புகள் உள்ளன. யாராவது ஒரு சிலர் கவனயீனமாகவோ அல்லது சுகாதார விதிமுறைகளைப் புறக்கணித்தோ செயற்பட்டால் அது அதிகமான மக்களைப் பாதிக்கும் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

கொரோனா வைரஸ் கிருமிக்கெதிரான நோய்த்தடுப்பு மருந்துகள் கண்டு பிடிக்கப்படாத நிலையில் இதனுடைய இரண்டாவது அலைத் தாக்கம் ஜூன், ஜூலை மாதங்களில் உலகளாவிய ரீதியில் ஏற்படலாம். அதற்கான சந்தர்ப்பம் இருப்பதாக வைத்திய நிபுணர்கள் எதிர்வு கூறுகிறார்கள். அப்படி கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட்டால் அது பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். தற்போது இறந்தவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமானோர் இறக்க நேரிடலாம் எனக் கூறுகிறார்கள். எனவே தற்போது அறிவிக்கப் பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை குறைந்தது ஒருவருட காலத்துக்காவது பின்பற்ற வேண்டியிருக்கும் என்பது வைத்திய நிபுணர்களின் கணிப்பாகும்.

கொரோனாவுடன் வாழப்பழகுதல்தான் இன்று மனிதகுலத்துக்கு கிடைத்த ஒரே மார்க்கம். ஊரடங்கு காலத்திலும் ஊரடங்கு தளர்வு காலத்திலும் மக்கள் மனதளவில் கொரோனாவுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் அதாவது உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருக்கும் தனிநபர் சுகாதாரம் பேணல் முகக் கவசம் அணிதல், அடிக்கடி சவர்க்காரம் போட்டுக் கைகழுவுதல், சமூக இடைவெளியை பேணுதல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும். கூடியவரை வெளியே செல்வதைத் தவிர்க்கவேண்டும். கொரோனாவுக்கு முன்னர் வாழ்ந்த வாழ்க்கையை நாம் இனிமேல் வாழமுடியாது. எமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே யதார்த்தம்.

இந்த இதழில் கொரோனா தொடர்பான **நான்கு சிறுகதைகள், நான்கு கட்டுரைகள், ஒன்பது கவிதைகள்** வெளிவருகின்றன. இவற்றை நாம் கேட்டுப் பெறாமலே உலகெங்கும் பரந்துவாழும் எழுத் தாளர்கள் இந்த ஆக்கங்களை எமக்கு அனுப்பியுள்ளனர். அவர்களுடைய சமூகச் சிரத்தையையும் ஞானம் இதழில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் மதிப்பையும் கருத்தில்கொண்டு இந்த இதழை **கொரோனா விழிப்புணர்வு இதழா**க வெளியிடுகின்றோம்.

○○○




ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான வவுனியூர் இரா. உதயணன் 29-04-2020இல் தனது மணிவிழா அகவையை எய்தினார் என்பது ஈழத்து இலக்கிய உலகின் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். புலம்பெயர் எழுத்தாளர்களில் அதிக நாவல்களை எழுதி அவற்றிற்கு தமிழகத்திலும் ஈழத்திலும் பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்றவர் இவர். இவரது நான்கு நாவல்கள் சிங்களத்திலும் மூன்று நாவல்கள் ஹிந்தி, மலையாளம் ஆகிய இருமொழிகளிலும் ஒரு நாவல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பது இவரது எழுத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டுபவை.

இரா. உதயணன் வவுனியா குடியிருப்பில் ஸ்ரீ இராமகிருஷ்ணா அவர்களுக்கும் கமல நாயகிக்கும் 29-04-1960 அன்று மகனாகப் பிறந்தார். இவரது தந்தையார் புகையிரத நிலைய அதிபராகக் கடமை புரிந்தவர். இவர் மலையகத்து ஹட்டன் சென் ஜோன்ஸ் பொஸ்கோ, வவுனியா தமிழ் வித்தியாலயம், யாழ். பரியோவான் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைப்பெற்றவர். 1985 அளவில் வெளியூரில் (ஓமான்) கணக்காளராகப் பணி புரிந்து பின்னர் லண்டன் சென்று அங்கு கணக்கியல் துறையில் M.ACC முதுமாணிப் பட்டத்தை University of Undee - Scotland இல் பெற்றார். அத்தோடு University of Manchesterஇல் முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் (MBA.) பெற்றார். லண்டனில் கைத் தொலைத் தொடர்பு நிறுவனத்தில் நிதிப் பணிப்பாளராகத் தொழில் புரிகின்றார்.

உதயணன், பாடசாலைக் காலத்திலேயே தனது ஒன்பதாவது வயதில் அன்றைய ஆங்கிலப் பத்திரிகைகளில் 'எனது சுய சரிதை', 'எனது பேனா நண்பர்' போன்ற சிறு ஆக்கங்களை எழுதியவர். அத்தோடு கல்லூரியின் வருடாந்த இதழில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதியவர்.

1979இல் தனது 19ஆவது வயதில் ஈழநாடு பத்திரிகையில் எழுதிய ***அந்த இரண்டு பைத்தியங்கள்*** என்ற சிறுகதை மூலம் இவர் இலக்கிய உலகில் காலடி எடுத்துவைத்தார். ஆரம்ப காலத்தில் சசிபாரதி என்று அழைக்கப்பட்ட சபாரத்தினம் அவர்களே இவரைப் படைப்பாளியாக உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியவர். ஈழகேசரியில் இருபதுக்கும் மேற்பட்ட இவரது சிறுகதைகள் வெளிவந்தன. ஈழநாடு, தினகரன், வீரகேசரி, தினக்குரல், தமிழன், ஈழகேசரி, புதினம், ஞானம், மீட்சி, கொழுந்து, இனியநந்தவனம், மகாகவி முதலிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளிவந்தன. உதயணன் இதுவரை 70க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவரது **மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள் (2009), *வன்னிவலி* (2015)** ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவற்றுள் 'வன்னிவலி' என்ற சிறுகதைத் தொகுப்பு போருக்குப்பின் வன்னியில் நடந்த, உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதைகளாகும். 1979 முதல் 1983 வரையிலான காலகட்டத்தில் இவரால் எழுதப்பட்ட கதைகள் பல இனக் கலவரத்தின்போது எரியுண்டுவிட்டன.

இவரது முதலாவது நாவல் ***ஒரு அத்தியாயம் முடிவடைகிறது*** தினகரன் நாளிதழில்

1985ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதன்பின் 1987ஆம் ஆண்டில் **இடைவெளிகள்** என்ற தொடர் கதையும் வெளியாகியது. 1988இல் **ஒரு வேங்கை இரை தேடுகிறது** என்ற நாவலும் 1990-1991 காலப்பகுதியில் **உதட்டுப் பூச்சுகள்** என்ற நாவலும் 'இலண்டன் தமிழன்' என்ற பத்திரி கையில் வெளிவந்தன. 2009இல் **நூலறுந்த பட்டங்கள்**, என்ற நாவலும் 2011இல் **சிற கொடிந்த வண்ணத்துப் பூச்சிகள்** என்ற நாவலும் இலண்டன் புதினம் பத்திரிகையில் வெளிவந்தன. இவரது நூலுருப்பெற்ற முதலாவது நாவல் **சுருதி பேதமடைகிறது** 2008இல் வெளிவந்தது.

இவரது **விதிவரைந்த பாதையிலே** (2008) என்ற நாவல் அரச தேசிய விருதினைப் பெற்ற நாவலாகும். போர்க்காலத்தில் வெளிநாட்டுக் குச் செல்லப் புறப்பட்ட சைந்தவி என்ற பெண், ஏஜென்சிக்காரனால் ஏமாற்றப்பட்டு, கர்ப்பமாகி அவன் தலைமறைவாகிவிட்ட நிலையில் வெளிநாடு சென்று அங்கு அவள் எதிர்கொண்ட கஷ்டங்களையும் ஏமாற்றங் களையும் விபரிக்கும் நாவல் இது. இந்த நாவலுக்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற விருதும் கிடைத்தது.

2009இல் இவர் எழுதிய 'நூல் அறுந்த பட்டங்கள்' போருக்குப் பின்னரான சூழ் நிலையை நேரடி வர்ணனை செய்யும் நாவலாகும். மக்களின் துன்பங்களும் வேதனைகளும் இழப்புகளும் இந்நாவலில் பதிவாகியுள்ளன. இந்த நாவல் தமிழ்நாடு இலக்கியப் பெருமன்ற விருதினைப் பெற்றுக் கொண்டது.

அடுத்து 2010இல் வெளிவந்த **பனி நிலவு** கொடகே விருது மற்றும் தமிழக சின்னப்ப பாரதி அறக்கட்டளை விருது ஆகிய வற்றைப் பெற்றுக் கொண்டது. ஓர் இலங்கைத் தமிழ்ப் படைப்பாளியின் படைப்பு முதன்முதலில் இந்தி மொழியில் வெளி வந்த சிறப்பு இந்த நாவலுக்கு உண்டு. அத்தோடு இந்நாவல் சிங்களம் மலையாளம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இந்த நாவல் இறுதிக்கட்டப் போரில் தன் கணவனையும், முழங்கால்வரை தனது இடதுகாலையும் இழந்து, சின்மயி என்ற பதினொரு வயதுப் பிள்ளையுடனும் நிவேதா என்ற எட்டுவயதுப் பிள்ளையுடனும் வாழ்க்கையே போராட்டமாகிவிட்ட போதும் பீனிக்ஸ் பறவை போன்று மீண்டும் எழுந்து நின்று சுயநலமில்லாமல் தனது சமூகத்தைப் பற்றி நினைத்து விதவைகளின் மறுவாழ்வுக்கு வழிசமைக்கும் வைதேகி என்ற ஆசிரியையின் கதையை விபரிக்கிறது. "இது ஒரு உண்மைக் கதை. இதற்கு சிறிது அழகூட்டி மெருகு சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நாவலின் கதாநாயகி இன்னமும் ஆசிரியையாக முல்லைத்தீவில் கடமையாற்றுகிறார்" என்று ஞானம் சஞ்சிகைக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார் உதயணன்.

அடுத்து வெளிவந்த **உயிர்க்காற்று** நாவல், பல்கலைக்கழகத்தில் படிக்கும் ஒரு மாணவனுக்கும் பத்தொன்பது வயதை எட்டிப் பிடிப்பதற்கு முன்பே, திருமணம் முடித்து நான்கே மாதங்கள் வாழ்ந்து விதவையாக் கப்பட்ட ஒரு இளம் மாணவிக்கும் ஏற்படும் காதல் பற்றியும் எமது சமுதாயம் அவர்களை நோக்கும் விதம் பற்றியும் காலத்திற்கேற்றவாறு 'கற்பு' என்பதற்கான வரைவிலக்கணத்தையும் மீளாய்வு செய்யும் நாவல்.


**வலியின் சுமைகள்** என்ற நாவல் 54 வாரங்கள் வீரகேசரி வார வெளியீட்டில் தொடராக வெளிவந்து நூலுருப்பெற்றது. இந்த நாவல் போருக்குப் பின்னரான அவலங்களைக் கூறுவதோடு புலம்பெயர் சமூகம் போரின் பின்னரான ஈழச்சமூகத்தின் மீள் கட்டுமானத்தில் எவ்வாறு உதவமுடியும் என்ற சிந்தனையை எழுப்புகிறது. இந்த நாவல், தமிழக திருப்பூர் இலக்கிய விருதினையும் ராஜபாளையம் மணிமேகலை மன்ற விருதினையும் பெற்றுக் கொண்டது.

ஜவர்கர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் இந்தி மொழித்துறை பேராசிரியர் எச்.பாலசுப்பிரமணியம் அவர்களே இவரது மூன்று நாவல்களை இந்தி மொழிக்கு மொழிமாற்றம் செய்தவர். "இந்தி மொழியில் இந்த மூன்று நாவல்களும் வந்த பின்புதான், வட இந்திய மக்களுக்கு இலங்கைப் பிரச் சனை குறித்த சரியான புரிதல் ஏற்பட ஆரம் பித்தது எனவும் இந்த நரசம்ஹாரம், 'நியூ ரம்பர்க்' விசாரனைக்கு உரியது எனவும் மூத்த இந்தி எழுத்தாளர் மஸ்தாரம் கபூர் தெரிவித்திருக்கிறார்.


மூன்று நாவல்களிலும் பெண்ணினத்தின் மாண்பை எடுத்துக் காட்டியுள்ள பாங்கையும் நனவோடை உத்தியைக் கையாண்டுள்ள திறனையும் தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பஜ்ரங் திவாரி வெகுவாகப் பாராட்டியுள்ளார். கேரளம் காலடியைச் சேர்ந்த பேராசிரியர் எச். பத்மநாபன் அவர்களே இவரது மூன்று நாவல்களை மலையாள மொழியில் மொழிபெயர்த்தவர். இவர் காலடி ஸ்ரீ சங்கராச்சார்யா, சமஸ்கிருத

பல்கலைக்கழகத்தில் மலையாள மொழித்துறை பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இந்த நாவல்களை கோழிக்கோடு ப்ரியாதா பதிப்பகம் வெளியிட்டு வைத்தது.

"ஒரு காலத்தில் வணிகப் போக்குவரத்து நிமித்தமாக கேரளத்துடன் நெருங்கிய தொடர்பிலிருந்த ஈழத்திலிருந்து, இலக்கியப் படைப்புக்கள் எதுவும் மலையாளத்தில் வந்திருக்கவில்லை. இனங்களுக்கிடையே நல்லிணக்கத்துக்காக விழையும் இந்த நூல்கள் ஈழத்தின் உண்மையான வரலாற்றினை நமக்கு அளிக்கின்றன" என்று ஸ்ரீ சங்கராச்சாரியா சமஸ்கிருத பல்கலைக்கழகத்தில் *2012* அக்டோபர் மாதம் நடைபெற்ற நூல் வெளியீட்டுவிழாவில் பிரபல நடிகரும் திரைக்கதை எழுத்தாளருமான மதுபால் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டிருக்கிறார்" என அறிய முடிகிறது.




இலங்கையில் பிரபல எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமாக விளங்கிய உபாலி லீலாரத்தின அவர்களே உதயணனின் நான்கு நூல்களை சிங்கள மொழிக்கு எடுத்துச் சென்றவர். நான்கு நூல் களும் கொடகே பதிப்பாளர்களினால்தான் வெளியிடப்பட்டன. இந்த நாவல்கள் சிங்கள சாதாரண வாசகர்கள் மட்டத்தில் போருக்கான உண்மைக் காரணத்தை அறியாதவர்களுக்கு ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த உதவியுள்ளதாக மொழிபெயர்ப்பாளர் உபாலி லீலாரத்தினா தெரிவித்துள்ளார்.



தற்பொழுது இவரது **பாசிபடிந்த கல்லறை வாசல்** என்ற நாவல் விரகேசரி வாரவெளியீட்டில் *130* அத்தியாயங்களையும் தாண்டி வெளிவந்து கொண்டிருப்பது ஒரு சாதனை!


கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் திரு. புஸ்பராசா பிரசாந்தன், 'வவுனியூர் இரா. உதயணனின் நாவல்கள்: ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டு *2018*ஆம் ஆண்டில் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.

உதயணன் இலக்கியச் செயற்பாடுகளிலும் சமூகச் செயற் பாடுகளிலும் ஈடுபாடுகொண்டு இயங்கிவருபவர். எழுத்தாளர்களை ஊக்குவிக்கும்வகையில், அவர்களின் நூல்களை பதிப்பித்து வெளியிட்டு வைக்கும் பணியிலும் இவர் ஈடுபட்டுவருகின்றார். கலாநிதி முல்லைமணி அவர்களின் கவிதைகளை **முல்லைமணியின் கவிதைகள்** என்ற பெயரில் நூலாக்க உதவியது போன்று வேறும் சில எழுத்தாளர்களது நூல்கள் வெளிவர உதவியுள்ளார். அத்தோடு எழுத்தாளர்கள் பலருக்கும் பல தரப்பட்ட உதவிகளை நல்கி வருகிறார்.




இலங்கையில் ***தாயக ஒலி*** சஞ்சிகையை வெளிக்கொணர்வதில் இவரின் பங்களிப்பு அளப்பரியது.

கொழும்பு, வவுனியா, இலண்டன் ஆகிய நகரங்களில் இலக்கிய, கலைவிழாக்களை நடத்தி கலைகளை வளர்த்தும் கலைஞர்களை ஊக்குத்தும் வருகிறார். இலங்கை எழுத்தாளர்கள் உட்பட புலம்பெயர்ந்து வாழும் பலருடைய நூல்வெளியீட்டு விழாக்களை தமது சொந்தச் செலவில் இலண்டனில் நடத்தி அவர்களைக் கௌரவித்துவரும் பணியிலும் ஈடுபட்டுவருகிறார் ஞானம் சஞ்சிகையின் 'ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழு'க்கு லண்டன் மாநகரில் பெரிய அளவில் அறிமுகவிழா நடத்தி பெருமைப் படுத்தியவர், இவர்.



சிறந்த தமிழ் அறிஞர்களுக்கு மட்டக்களப்பு 'எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்' வழங்கி வந்த ***தமிழியல் வித்தகர்*** விருதினை சிலகாலம் தனது பெற்றோர் பெயரில் இவர் வழங்கிவந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

***இரா உதயணன் இலக்கிய விருது*** என்ற அமைப்பின் மூலம் இலங்கை லண்டன் இலக்கிய நிறுவகம் உருவாக்கப்பட்டு சிறந்த நூல்களுக்கு விருதும் பணப்பரிசும் வழங்கும் ஒரு பெரும் கைங்கரியத்தை

வருடாவருடம் செய்து வருகிறார். ஏறத்தாழ பதினைந்து துறைசார்ந்த நூல்களுக்கு விருதுகள் வருடாவருடம் வழங்கப்படுகின்றன. அத்தோடு மூத்த எழுத்தாளர்களைக் கௌரவித்து வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கின்றார். இந்த அமைப்பின் ஆலோசகர்களாக இரு பேராசிரியர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

இந்த அமைப்பு லண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவனத்தினூடாக பல உதவிகளை, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் செய்து வருகிறது. பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்று வன்னிப் பகுதியிலிருந்து செல்லும் ஏழை மாணவர்கள் பலருக்கு மாதாந்த செலவிற்கான பணத்தை வழங்குதல், வவுனியா மாவட்டப் பாடசாலை நூலங்களுக்கு நூல்களை அன்பளிப்பாக வழங்கல், முல்லைத்தீவு மாவட்ட கஷ்டப்பட்ட பாடசாலைமாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல் போன்றவை அவரது கல்விப்பணிகளுக்குச் சான்று பகருகின்றன.

விதவைகளின் வாழ்வாதாரம் மேம்பட பணம் கொடுப்பது, தையல் மெசின் வாங்கிக் கொடுப்பது, வசதிகள் செய்துகொடுப்பது, 'ரியூப்வெல்' அடித்துக் கொடுப்பது போன்ற மீள்கட்டுமானப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

இவரது பணிகளைப் பாராட்டி மல்லிகை சஞ்சிகை 2011 மே இதழும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வெளியிட்ட 'மாருதம்' சஞ்சிகை சித்திரை- ஐப்பசி 2012 இதழும் இவரது படத்தை அட்டையில் வெளியிட்டு கட்டுரையும் எழுதிக் கௌரவித்தன. தமிழ் இலக்கிய நிறுவகம் வெளியிடும் இரு திங்கள் இதழாகிய 'தாயகஒலி' பங்குனி சித்திரை 2016 இதழ் இவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தது.

உதயணனின் குடும்பம் மகிழ்ச்சியானது. மனைவி தயாளினி யாழ். பல்கலைக்கழக B.A பட்டதாரி. மகள் நிரோஷி BA, ACCA பட்டதாரி, சிரேஷ்ட முகாமைத்துவ கணக்காளராகத் தொழில் புரிகிறார். மகன் மதனன், BSC Hons. Forensic Science முடித்துவிட்டு MSC Cyber Security பட்டதாரியாகி தொழில் புரிகிறார்.

மணிவிழா நாயகர் இரா உதயணன், மேலும் பல்லாண்டு வாழ்ந்து இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் தனது சேவைகளைத் தொடர வேண்டும் என வாழ்த்துகிறோம்.

❍❍❍

# மனவலி தீர்க்கும் மருந்து



மெய்யன் நடராஜ்

தடுத்திட விலையெனில் தவிப்பது நிசமென
  தனிமையை மருந்தென அருந்திடக் கூறும்
கொடுத்துத வுதற்கென கிருமியின் வடிவினில்
  கொடியவர்க் குணர்த்திடு மிதுவொரு பாடம்
படுத்தவ ரெழுவது படைத்தவன் செயலெனப்
  படுத்திடு மிதுகொடும் படைக்கள மாகும்
வடுக்களை வலிகளை விதையென விதைத்திட
  வருமிதன் வழிதனை அடைப்பது வீரம்

அகப்படு மெவரொடு மடைக்கல மடைந்திட
  அணுகிடும் கிருமிய ரருகிலி ராது
முகத்தொடு கவசமு மணிவத னவசிய
  முணர்ந்திடு முனையது அணுகுவ தேது
சுகத்துட னிருந்திட வழிபல விருப்பினும்
  சிரந்தினி லிருத்திட மறுத்திடும் போது
நகத்தொடு சதையென நமதுட னிருந்தெமை
  நசுக்கியப் படிவிடு மதுசுடு காடு.


அறைகளி லடைபடு வதுமொரு வதையென
  அறிவது முனதொரு அனுபவ மாகும்
சிறைகளி லிருப்பவர் துயரதை யுணர்கிற
  சிறுவழி யிதுவென புரிந்திடு போதும்
கறையுள மனத்தொடு கவலைகள் வளர்ப்பதைக்
  கடந்திட இதுவொரு படிப்பினை காலம்.
முறையொடு பயிலென முடக்கிய நிலைதனை
  முறையிடு இறையொடு மனவலி தீரும்.



# கொரோனாவே சொல்லு, யாருக்காக அழுவது..?

சிறுகதை

குரு அரவிந்தன்



('எனக்கொரு ஆசை இருக்கு, என்னவென்றால் உங்களைப் போலவே நானும் படிச்சு ஒரு வைத்தியராக வரவேணும்!')

டாக்டர் உமாவின் கண்கள் பனித்தன. தேசம் விட்டுத் தேசம் வந்து இந்த மண்ணிலே ஊர்பேர் தெரியாத யாரோ எல்லாம் வந்து நன்றி செல்லிவிட்டுச் சென்றபோது, அப்படியே உறைந்து போய் சற்று நேரம் வாசலில் நின்றாள்.

அப்பொழுதுதான் கடமை முடிந்து களைத்துப்போன நிலையில் வீட்டுக்கு வந்திருந்தாள். சிறிது ஓய்வெடுக்கலாம் என்று நினைத்த போதுதான் அந்தத் செல்பேசி அழைப்பு வந்தது. எடுத்துப் பார்த்தாள், மெடிக்கல் சுப்பிரிண்டனிடம் இருந்துதான் அந்த அழைப்பு.

"சொல்லுங்க சார்" என்றாள்.

"டாக்டர் நீங்கள் ரெஸ்ட் எடுக்கிற நேரத்தில தொந்தரவு செய்வதற்கு மன்னிக்க வேண்டும். உங்க அயலவர்களும், நகரமக்களும் சேர்ந்து உங்களுக்கு நன்றி சொல்ல விரும்புறாங்க, அதனாலே ஆறு மணிபோல உங்க வீட்டுக்கு முன்னால் வண்டிகளில் வந்து நன்றி சொல்ல இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலை காரணமாக, நேரடியாக சந்திக்க வாய்ப்பு இல்லாதபடியால் இதை உங்களுக்கு அறிவிக்கச் சொன்னார்கள்." என்றார் அவர்.

சற்று நேரத்தால் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதியிடம் இருந்து அதே செய்தி வந்தது. மறுக்க முடியவில்லை, எனவே அவள் உடை மாற்றி அதற்குத் தயாராக இருந்தாள்.

அவர்கள் சொன்ன நேரத்திற்கு அவள் வீட்டு வாசலில் வந்து நின்றாள். முதலில் பொலீஸ்வண்டி ஒன்று நீலமும் சிகப்பும் கலந்த வர்ணவிளக்குகள் போட்டபடி மெதுவாக வந்தது, தொடர்ந்து ஆம்புலன்ஸ் வண்டி, தீயணைப்பு வண்டி, பொதுமக்கள் வண்டி என்று ஒவ்வொன்றாக மெதுவாக நகர்ந்தன. 'நன்றி டாக்டர்' என்று சிலர் வண்டிக்குள் இருந்தபடியே பதாதைகளைப் பிடித்திருந்தனர். சிலர் வண்டியின் யன்னலைத் திறந்து அதற்குள்ளால் உரக்கக் கத்தி 'உங்கள் தன்னலமற்ற சேவைக்கு நன்றி' என்று சொன்னார்கள். வண்டியில் வந்த எல்லோரும் கொரோனா முகக் கவசம் அணிந்திருந்தனர். சுயதனிமைப்படுத்தல் இடைவெளியைக் கடைப்பிடித்திருந்தனர். ஒரு பிக்கப் வண்டியில் வந்தவர்கள் நன்றி தெரிவித்து அவளுடைய பெயரைத் தாங்கிய பெரியதொரு பதாதையை வீட்டுக்கு முன்னால் உள்ள புற்றரையில் தடி ஒன்றை நன்றாக ஊன்றி, அதில் பதாதையை இணைத்து வைத்து விட்டுச் சென்றார்கள். 'தாங்யூ டாக்டர் உமா' என்று பெரிதாக எழுதப்பட்டிருந்தது.

மனிதரிடம் இருந்து மனிதருக்குத் தொற்றக் கூடிய கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, அருகே செல்ல முடியாது, கை குலுக்க முடியாது எனவே எட்ட நின்றபடியே அவர்களது நன்றியைக் கையசைத்து ஏற்றுக் கொண்டாள் டாக்டர் உமா.

கொரோனா வைரஸின் பாதிப்பு அதிகமாக இருந்த இடத்தில்தான் அவள் வேலை செய்த வைத்தியசாலை இருந்தது. அந்த வைத்திய சாலையில் சில வைத்தியர்களும், தாதிகளும் ஏற்கனவே பாதிப்புக்குள்ளானதால் இவள் அதிக நேரம் கடமையாற்ற வேண்டி வந்தது. தன்னுயிரைப் பற்றிக் கவலைப்படாமல், எந்த ஒரு தயக்கமும் இன்றி அவள் கடினமாக உழைத்தாள். அவள் மருத்துவக் கல்வியை இந்தியாவில்தான் கற்றிருந்தாள். திருமணம் செய்ததால் கணவருடன் அமெரிக்கா வரவேண்டி இருந்தது. இந்த வைத்திய சாலையில் மருத்துவராக வேலைகிடைத்ததால் எல்லோருடனும், நட்பாகவும், அன்போடும் பழகினாள். கல்வி கற்கும்போது, ‘எந்த விருப்பு வெறுப்பும் இல்லாமல் ஒரு வைத்தியராக உனது கடமையைச் செய்ய எப்பொழுதும் தயாராக இரு’ என்று அவளது ஆசான் சொன்னதையே கடமையின்போது தேவவாக்காக இதுவரை ஏற்றிருந்தாள்.

வரிசையாக மெதுவாக வந்த எல்லா வண்டிகளும் மெதுவாக நகர்ந்திருந்தன. வண்டிகளில் இருந்த தெரிந்த, தெரியாத முகங்களை அவளால் அவதானிக்க முடிந்தது. கடைசியாக வந்த பொலீஸ் வண்டி மட்டும் வெளிச்சவிளக்கோடு வீதியில் வந்து வீட்டு வாசலுக்கு நேரேநின்றது.

அந்தப் பெண் பொலீஸ் அதிகாரி தனது காரில் இருந்து இறங்கி இவளை நோக்கி நடந்து வந்தாள். இவளை நோக்கி விறைப்பாக நடந்து வந்தவள், சுமார் பத்தடி தூரத்திற்கு அப்பால் சட்டென்று நின்றாள். மறுகணம் தனது வலது கையை உயர்த்தி இவளை நோக்கிச் சலியூட் ஒன்று அடித்தாள், அப்புறம் தனது தொப்பியைக் கழற்றி, நெஞ்சுக்கு நேரே வைத்தபடி ஒரு கணம் தலைகுனிந்து மௌனமாக நின்றாள். என்ன நடக்கிறது என்று புரியாமல், இமை மூடாது டாக்டர் உமா அவளையே பார்த்தபடி அப்படியே வாசலில் உறைந்து போய் நின்றாள்.

அழுதிருக்கலாம், இங்கிருந்து அந்த ஆபிஸரின் கண்களைத் தெளிவாகப் பார்க்க அவளால் முடியவில்லை. ஆனால் ஆபிஸ ரின் உடம்பு மெல்லக் குலுங்கியதில் இருந்து அவள் அழுதிருக்கலாம் என்று இவள் ஊகித்தாள். அப்புறம் ஆபிஸர் திரும்பி தனது வண்டியை நோக்கி நகர்ந்தபோதும் இவள் அசையாமல் அப்படியே நின்றாள்.

பொலீஸ் அதிகாரி லாவொன்றியா அழு தாளோ இல்லையோ, அதை அவதானித்த டாக்டர் உமா மெல்ல விசும்பினாள். அந்த நிகழ்வு அவளைக் கண்கலங்க வைத்தது. எத்தனையாயிரம் உயிர்களைக் கொரோனா பலியெடுத்த இந்த நிலையில் யாருக்காக அழுவது என்று தெரியாமல் அவள் அழுதாள். ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒரு காரணமாவது இருக்கும், இரண்டு வாரத்திற்கு முன் நடந்த அந்த சம்பவம் சட்டென்று அவளுக்கு நினை வில் வந்தது.

கொரோனா வைரசின் தாக்கத்தால் உலகமே அதிர்ச்சியில் இருந்தது. எழுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். ஏற்கனவே வேறு நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தவர்களும் அதிகம் பலியாகினார்கள்.

இளம் பிள்ளைகள் எவருமே அந்த நேரத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டதாகத் தகவல் இருக்கவில்லை. ஆனால் அந்த ஐந்து வயதுச் சிறுமியைக் கொண்டு வந்தபோது, வேறு ஏதாவது சாதாரண ஜுரம் என்றுதான் டாக்டர் உமா நினைத்தாள். சிறுமி அடிக்கடி தலைவலி இருப்பதாகச் சொன்னாள்.

“இரண்டு நாளாகத் தூக்கமில்லை டாக்டர், அடிக்கடி தலையிடிப்பதாகச் சொல்லி அழுகிறாள்.” என்றாள் தாயார்.

“டாக்டரிடம் காட்டினீங்களா?” என்று கேட்டாள்.

“ஆமா காட்டினோம், ஆண்டிபயட்டிக் என்று சொல்லி உயிரியெதிர்ப்பி தந்தாங்க, அது வேலைசெய்ய 48 மணித்தியாலம் எடுக்கும் என்றும் சொன்னாங்க, ஆனால் இவளால தாங்க முடியல்லை. அதுதான் அவசர சேவைப்பிரிவுக்குக் கொண்டு வந் தோம்” என்றாள் தாய்.

சிறுமியைச் சோதித்துப் பார்த்தபோதுதான் தொண்டை வரண்டிருந்தது மட்டுமல்ல, கொரோனா வைரஸின் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதும் தெரிந்தது. காய்ச்சலும், தலை யிடியும் கொரோனா வைரஸின் பக்க விளைவாக இருக்கலாம் என்று நினைத் தார்கள்.

சிறுமியின் தந்தைக்கும் கொரோனா வைரஸின் பாதிப்பு இருந்தது. அவருக்கும் இருமலும், சுவாசிப்பதற்குக் கஷ்டமாகவும் இருந்தது. எனவே அவரையும் சுயதனிமைப் படுத்தி இருந்தனர். அவர்கள் குடியிருந்த பகுதி மிகவும் மோசமாகக் கொரோனா வைரஸின் தாக்கத்திற்கு உள்ளாகியிருப்பது தெரியவந்தது. உலகிலேயே கொரோனா வைரஸின் தாக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்காதான் இருந்தது.



**“என்னாச்சு டாக்டர்..?”**
**“ஐயாம் சொறி..!” அதைத் தவிர வேறு எந்த சமாதானமும் சொல்ல அவளுக்கு வாய் வரவில்லை.**
**காலனோடு போராடியதில் அந்தச் சிறுமி மட்டுமல்ல, இவளும் தோற்றுப் போயிருந்தாள்.**

மருந்து கொடுத்ததில் தலையிடி குறைந்திருந்தது. இரண்டு மூன்று நாட்களில் உடல் நிலையில் முன்னேற்றம் தெரிந்தது. கொரோனா வைரஸின் பாதிப்பில் இருந்து அவளைக் காப்பாற்றி விட்டதாக மகிழ்ந்த போது, அவளுடைய உடல் நலத்தில் திடீரென வேறு பல சிக்கல்கள் ஏற்பட்டன. சோதித்துப் பார்த்த போது மூளைப்படல அழற்சி ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது. மூளைப் பகுதியில் வீக்கம் இருந்தது. அதற்கு மாத்திரை கொடுத்த போது மூளையில் இரத்தம் உறையத் தொடங்கியிருப்பது தெரிந்தது. செயற்கை முறையில் பிராணவாயு செலுத்திப் பார்த்தார்கள். முன்னேற்றம் எதுவும் தெரியவில்லை. கொரோனா வைரஸின் பாதிப்பால், மூளைப்பகுதி செயலிழந்து போயிருந்தது. மருந்தே இல்லை என்ற நிலையில், இத்துறையில் உள்ள விசேட வைத்தியர்களாலும் எதுவும் செய்ய முடியவில்லை. எதிர்பாராமல் எல்லாமே டாக்டர் உமாவின் கையை மீறிப்போனது.

“என்னாச்சு டாக்டர்..?”

“ஐயாம் சொறி..!” அதைத் தவிர வேறு எந்த சமாதானமும் சொல்ல அவளுக்கு வாய் வரவில்லை. காலனோடு போராடியதில் அந்தச் சிறுமி மட்டுமல்ல, இவளும் தோற்றுப் போயிருந்தாள்.

ஒரே ஒரு பெண்ணை இழந்து விட்ட தாயாரின் அதிர்ச்சியும், அதன்பின் அவள் வீரிட்டு அழுததும் டாக்டர் உமாவின் கண்ணுக்குள் அப்படியே நின்றன. ஐந்து வயதுச் சிறுமியைக்கூட கொரோனா வைரஸ் விட்டு வைக்கவில்லை.

தாயாரின் பரிதாப நிலையைப் பார்த்துக் கலங்கிய கண்களைக்கூடத் துடைக்க முடியாமல் தவித்த அவளுக்கு, அதை மறைப்பதற்கு முகத்தில் அணிந்திருந்த மாஸ்க்தான் அன்று உதவிசெய்தது.

ஏப்ரல் மாதம் வெளிவந்த தொற்று நோய்களுக்கான சர்வதேச மருத்துவ இதழில் கொரோனா வைரஸின் பாதிப்பால், பாதிக்கப்பட்ட சிலரது மூளையோடு தொடர்புடைய நரம்புகள் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது பற்றிய ஆய்வுகளின் முடிவோ அல்லது கொரோனா வைரசுக்கான மருந்துகளோ, தடுப்பு மருந்துகளோ ஆறு மாதங்களாகியும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்பது பெரிய குறையாக இருந்தது. புதிய ஆட்கொல்லி வைரஸ் என்பதால், தடுப்பு மருந்துகள் எப்போது கிடைக்கும் என்று உலகமே ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

இதற்கான மருந்துகள் இருந்திருந்தால் அந்தச் சிறுமியைக் காப்பாற்றி இருக்கலாம் என்று டாக்டர் உமாவின் உள்மனசு தவித்தது. அந்தச் சிறுமியோடு கடைசியாக நடந்த உரையாடலை நினைத்துப் பார்த்தாள்.

“உன்னுடைய பெயர் என்னவென்று சொன்னாய்?” கிளவ்ஸ் அணிந்த கைகளால்

அந்தச் சிறுமியின் கைகளைப் பற்றிக் கொண்டு டாக்டர் உமா கேட்டாள்.

“ஸ்கைலர் ஹேபேர்ட்” என்றாள் சிறுமி.

“ஓ, மிஸ்டர் எபி ஹேபேர்ட் அவர்களின் மகளா?”

“ஆமா, எங்க அப்பாதான் இந்த சிற்றி தீயணைப்புப் படைக்குப் பொறுப்பாக இருக்கிறார், உங்களுக்கு அவரைத் தெரியுமா?” என்றாள் பெருமையாக.

“தெரியுமே! உங்கப்பா எபி 18 வருடமாய் தீயணைப்பு பிரிவில் இங்கே எமக்காகச் சேவையை செய்கிறார். உங்கம்மா லாவொன்றியா அதற்கும் மேலாய் 25 வருடமாக பொலீஸ் ஆபிஸராக எமக்காகச் சேவை செய்கிறார். இக்கட்டான இந்த நேரத்தில் தளத்தில் நின்று பாடுபடும் இந்த இரண்டு பேரும் எங்களுக்கு எவ்வளவு முக்கியமானவங்க தெரியுமா, அவங்களை நினைச்சா எங்களுக்குப் பெருமையாக இருக்கின்றது?”

பெற்றோரைப் பற்றி உயர்வாக டாக்டர் சொன்னதைக் கேட்ட சிறுமி ஸ்கைலருக்குப் பெருமையாக இருந்தது. வேதனையிலும் அவளது உதடுகள் விரிந்து சின்னதாய் ஒரு புன்சிரிப்பு வெளிப்பட்டது.

“ஆமா, உனக்கு என்னவாக வரணும் என்று ஆசை?” என்றாள் டாக்டர் உமா.

“எனக்கா, எனக்கொரு ஆசை இருக்கு, என்னவென்றால் உங்களைப் போலவே நானும் ஒரு வைத்தியராகப் படிச்சு வர வேணும். அப்புறம்..!” அணையப்போகும் தீபம் கடைசி நேரத்தில் பிரகாசிப்பதுபோல, அந்தச் சிறுமி சொல்லிக் கொண்டே வேதனை தாங்க முடியாது மெல்ல மெல்லக் கண்களை மூடினாள். அவள் எதிர்காலம் குறித்த கற்பனையில் மூழ்கி விட்டாள் என்றுதான் டாக்டர் உமா முதலில் நினைத்தாள். ஆனால் ஸ்கைலர் பேசிய கடைசி வார்த்தைகளும் அவைதான்!

○○○

---

# இதுவும் கடந்து போகக்கூடாது



வீதிகளில் விலங்கு
இராச்சியம்

⊙

மனித அரவமற்ற
வனாந்தரங்களில்
பசுமை களியாட்டங்கள்

⊙

கொரோனாயணத்தில்
சீதைகள் மட்டுல்ல
இராமர்களும் சிறைவாசத்தில்

⊙

கௌரவம் புகழ் மேல் கீழ் எல்லாம்
சமப்படுத்திவிட்ட இயற்கை

⊙

விடாப்பிடியாய் ஒன்றிலும்
மாறாத நாம்
நன்றாகவே மாறியிருக்கிறோம்
இருப்பவர்கள் கொடுப்பவர்களாக

⊙

நாளை நிச்சயம்
இதுவும் கடந்து போகும் – ஆனால்
நாம் மட்டும்
வலுக்கட்டாயமாய் தத்தெடுத்துக்கொண்ட மனிதாபிமானத்தை
கடந்துபோக விடாமல் காப்பாற்றிக்கொள்வோம்...

⊙

***புசல்லாவை கணபதி***



பேராசிரியர்

சோ. சந்திரசேகரம்



# கல்வித்துறை மீதான கொரோனாவின் தாக்குதல்

தீவிரமான கொரனா தொற்றின் உலகளாவிய பரம்பல் காரணமாக, சர்வதேசரீதியாகப் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. மக்கள் தொழில் செய்யும்முறை, பிள்ளைகள் கல்விகற்கும்முறை, பொழுதுபோக்கு முறைகள், பயண ஏற்பாடுகள், முதலாக நாடுகளின் பொருளாதார முறைகள், உலக ஒழுங்குகள் எல்லாமே மாற்றத்துக்கு உள்ளாகி வருகின்றன. 1980களில் தொடங்கிய கோளமயமாக்கம், அதனைத் தொடர்ந்து வந்த நவதாராளவாதம் என்பன பின்னடைவுக்கு உள்ளாகி வருகின்றன இக்கோட்பாடுகளின் காரணமாக முக்கியத்துவம் இழந்துவந்த 'அரசு' இன்று கொரொனாவை ஒழிக்கும் பணியில் தலைமை தாங்கவேண்டியுள்ளது. முன்புபோல வெளிநாட்டு மூலதன பாய்ச்சல்களையும் உதவிகளையும் எதிர்பார்க்க முடியாத நிலையில், பழைய பாணியிலான பாதுகாக்கப்பட்ட தேசியப் பொருளாதார முறையொன்று உருவாகும் போக்கும் தென்படுகிறது. உலகநாடுகள் பாதுகாப்புக்கும் இராணுவச் செலவுகளுக்கும் வழங்கிய முக்கியத்துவம் குறைந்து பொதுச் சுகாதாரத்துறைக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. இராணுவத்திற்குப்பதிலாக மருத்துவர்களையும் சுகாதார ஊழியர்களையும் போற்றும் காலம் உருவாகி வருகிறது. இவ்வாறு பொதுப்படக் கூறினாலும், உலகளாவிய கல்வி முறையில் சொல்லப்பட்ட கட்டாயக் கல்விபோய், இன்று கோடிக்கணக்கான பிள்ளைகள் கட்டாயமாக வீட்டிலிருக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது. இவ்விடயம் பற்றி மேலும் சற்று விரிவாக நோக்கலாம்

யுனெஸ்கோ புள்ளி விபரங்களின்படி தற்போது 189 நாடுகளில் கல்வி பயிலும் 157 கோடி மாணவர்களின் கல்வி கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளது. (10-04-2020) இலங்கையில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் தொகை 45 இலட்சம். உயர்கல்வி பயிலும் மாணவர்கள் (தேசிய பல்கலைக்கழகங்களில்) 90000 பேர். இவர்களைவிட தனியார் உயர்கல்வி பயிலும் மாணவர் தொகையும் இவ்வாறே பல ஆயிரக்கணக்கில் உள்ளது. உலக மாணவர்கள் தொகையில் 91 சதவீத மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

மருத்துவ சிகிச்சை தவிர்ந்த எனைய வழிமுறைகளான தனிமைப்படுத்தல், சமூக இடைவெளி போன்ற உபாயங்கள் காரணமாகவே விரிவான முறையில் கல்வி நிலையங்கள் உலகெங்கும் மூடப்பட்டன. கணித ரீதியான நுட்ப முறைகள், நோய்த் தொற்றைத் தாமதப்படுத்த முடியும் எனத் தெரிவித்தன. எவ்வாறாயினும், பாடசாலைக்கு வராத பிள்ளைகள் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகளையும் பொறுத்தே, பாடசாலை கதவடைப்பு பலன் தரும். நோய் பரவிய பின்னர் இந்தக் கதவடைப்பு பலன்தராது என்ற கருத்து உண்டு. சில சந்தர்ப்பங்களில், மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டதும் நோய்த் தொற்றுக் கூடியுள்ளது.

## 1918–1919 – காய்ச்சல்

இதன்போது ஐக்கிய அமெரிக்காவில் பாடசாலைகள் மூடப்பட்டன. மக்கள் கூடுவதும் தடுக்கப்பட்டது. இதனால் இறப்பு வீதம் குறைந்தது. 1957-1658 இல் ஆசியக் காய்ச்சல் (Flu) பரவியபோது பாடசாலைகள் மூடப்பட்டு இறப்பு வீதம் 90 சதவீதத்தால் குறைந்தது. 2004-2008 இல் இவ்வாறு மூடப்பட்டமையால், காய்ச்சல் காரணமாக இறப்போர் விதம் 50ஆல் வீழ்ச்சியுற்றது என அமெரிக்கப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

**தாக்கம்**

உலகப் பொருளாதாரத்தளம் (Forum) எனும் அமைப்பு கொரோனா நோயின் தாக்கம் பற்றி மூன்று கருத்துக்களைக் கூறுகின்றது

1) கொரோனா நோயானது உலகெங்கும் வாழும் பிள்ளைகள் கல்விபெறும் முறையை மாற்றியமைத்துள்ளது.

2) கல்வி தொடர்பான புதிய தீர்வுகள், தேவையான புத்தாக்கங்களைக் கொண்டு வரும்

3) உலகில் நிலவும் 'எண்ம இடைவெளி' யானது, - Digital Gap (கணினி அறிவில் மக்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வு) கல்வி தொடர்பான புதிய அணுகுமுறைகள் கல்வித் துறையில் காணப்படும் ஏற்றத் தாழ்வு களை மேலும் விரிவடையச் செய்யும்

மார்ச் 13 அன்று 39 நாடுகளில் 42 கோடி பிள்ளைகள் பாடசாலைகள் மூடப்பட்டமையால் பாதிக்கப்பட்டனர். 22 நாடுகள் ஓரளவு மூடப் படுவது பற்றி அறிவித்தன.

கொரனாவின் தாக்கம் காரணமாக கல்வித் துறையில் மூன்று போக்குகளை இனங்காண முடியும்:

1) ஆச்சரியமான புத்தாக்கங்களின் எழுச்சி: பழைமையான வகுப்பறைக் கற்பித்தலுக்கு அப்பால், குறைந்த காலப்பகுதியில் புதிய நுட்ப முறைகள் கண்டறியப்படும்

பிப்ரவரி தொடக்கம் ஹொங்கொங் மாண வர்கள் வீட்டிலிருந்தபடி இணைய வழியில் (Interactive apps) கற்கின்றனர். 12 கோடி சீன மாணவர்கள் தொலைக்காட்சி வழியில் கற்று வருகின்றனர்.

நைஜீரியாவில் கூகுள் வகுப்பறைவழியில் கற்றல் சாதனங்கள் வழங்கப்படுகின்றன. லெபனானில் உடற்கல்வி பாடமும் இணைய வழியில் நடாத்தப்படுகின்றது. பிள்ளைகள் தமது விளையாட்டுத் திறன்களை வீடியோ வாக்கி ஆசிரியர்களுக்கு அனுப்புகின்றனர். (விளையாட்டுப் பயிற்சிக்கு ஐந்து நிமிடம் என்றால் அதனை வீடியோவில் செம்மைப் படுத்தி ஏற்றிவிட மூன்று மணிநேரமாகும்)

2) அரசாங்க - தனியார் துறை கூட்டு முயற்சிகள் எதிர்காலத்தில முக்கியத்துவம் பெறும். அரசாங்கம், நூல் வெளியீட்டாளர்கள், கல்வித்துறை நிபுணர்கள், தொழில் நுட்ப நிறுவனங்கள், தொலைத் தொடர்பு வலைத்தொகுதி நிறுவனங்கள் எனப் பலரும் இணைந்து இன்று நாடுகள் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகளைக் கையாள வேண்டும். அரசாங்கம் கல்வித்துறையில் ஏகபோக அதிகாரம் பெற்றிருக்கும் நாடுகளிலும் இவ்வாறான கூட்டு முயற்சி தேவைப்படும்.

சீனாவில் கல்வி அமைச்சு இவ்வுபாயத் தைக் கையாண்டு, கல்விக்கட்டமைப்பைப் புனரமைக்க பல்வேறு அமைப்புகளை நாடியுள்ளது. ஹொங்கொங் அரசாங்கமானது, 60 கல்வி நிறுவனங்கள், நூல் வெளி யீட்டாளர்கள், ஊடக நிறுவனங்கள், பொழுது போக்குத் தொழில் நிபுணர்கள், ஆகியோரைப் பயன்படுத்தி வீடியோக்கள், பாடநூல்கள், மதிப்பீட்டுக் கருவிகள், ஆலோ சனைச் சேவைகள் என்பவற்றை உருவாக்கி வருகின்றது. கொரோனா பிரச்சினை முடி வடைந்த பின்னரும் இவை பயன்படுத்தப் படும் எனத் தெரிகின்றது.

வழமையாகக் கல்வித்துறை என்பது இலாப நோக்கமற்ற ஒரு சமூகச் செயற்திட்டம். இதற்கு அரசாங்கமே நிதி வழங்கி வந்துள்ளது. ஆனால் தற்போது இதனைக் கடந்து கல்வித்துறைப் புத்தாக்கங்கள் இடம் பெற்று வருகின்றன. அண்மைக்காலங்களில், (கொரோனாவுக்கு முன்) ஐக்கிய அமெரிக்கா வில் மைக்ரோசொப்ட், கூகுள், தென் கொரியாவில் சம்சுங், சீனாவில் அலிபாபா போன்ற நிறுவனங்களின் உதவி நாடப்பட்டது. இத்தகைய முயற்சிகள், கொரோனா காரண மாக மேலும் வலுப்படுத்தப்பட்டு பெரிய அளவில் ஒரு பொதுவான கல்வி இலக்கைக் கொண்டு இயங்கியுள்ளதாகத் தெரிகின்றது.

இலங்கையில் தேசிய கல்வி நிறுவனம் தொலைக்காட்சி நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்பத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற தனியார் உயர்கல்வி நிலையங்களுடன் இணைந்து, மாணவர்களுக்கான இணையவழிப் பாடங் களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிகின்றது.

3) கொரோனா தொற்று உலகெங்கும் தீவிரமாகப் பரவியுள்ள நிலையில் நாடுகள், முற்றாக மூடப்பட்டுள்ளன. இதனால் அரசாங்க நிறுவனங்கள், தனியார் துறைக் கம்பனிகள் முக்கியமாகப் பாடசாலைகள் இன்று இணையவழியில் இயங்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வகுப்புகள் இணைய




**இணையவழிக் கல்வி வசதியற்றவர்களைச் சென்றடைவதற்கில்லை. இணையவழிக் கல்வி காரணமாக வசதிகளைப் பெற்றுள்ளவர்களே பயனடைவர். பின்தங்கிய சமூகங்களைச்சேர்ந்த மாணவர்களும் அதிக நிதி வசதியற்றவர்களும் கல்வியில் பின்னடைவைக்காணும் நிலை ஏற்பட்டுள்ளது.**

வழியில் நடைபெறுகின்றன. மருத்துவர்கள் அதேவழியில் நோயாளிகளுக்கு ஆலோசனை களை வழங்குகின்றனர். அரசியல் வாதிகள் அவ்வழியில் பரப்புரைகளைச் செய்வதாகத் தெரிகிறது.

இவ்வகையில் நாடுகளுக்கிடையேயும் நாடுகளில் உள்ள பிராந்தியங்களுக்கிடையிலும் (நகரம், கிராமம், பெருந்தோட்டம்) ஒரு 'எண்ம இடைவெளி' நிலவுவதாகக் கூறப்படுகின்றது. இது கணினியைக் கையாள்வதில் இருக்க வேண்டிய பயிற்சித்திறன் தொடர்பான இடைவெளியாகும். கணினியின் வருகையின் பின்னர் ஏற்கனவே இந்த இடைவெளி இனங்காணப்பட்டுவிட்டது.

ஆனால் கொரோனாவின் காரணமான இந்த இடைவெளி ஒரு முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கூறப்படுகின்றது. எண்ம தொழில் நுட்பத்தில் யாவரும் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையால் இன்று மேற்கூறிய எண்ம இடைவெளி ஒரு முக்கிய பிரச்சினையாகிவிட்டது. எண்மப் பயிற்சியற்றவர்கள் மேற்கூறிய பணிகளில் ஈடுபட முடியாதுள்ளது. வளர்ச்சியடைந்த செல்வந்த நாடுகளில் வாழும் முதியவர்கள், கொரோனா தொடர்பான சரியான தகவல்களைப் பெறுமளவுக்கு எண்மப் பயிற்சி பெற்றவர்கள் அல்லர் என ஐ. நா. வர்த்தக அபிவிருத்தி சபையின் எண்மப் பொருளாதாரத்தலைவர் பிரடரிக்சன் எடுத்துக் கூறுகின்றார். இலங்கை இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட மக்களும் மாணவர்களும் மேலைநாடுகள் பயன்படுத்தும் இணையவழிக் கருவிகளைப் பயன்படுத்திக் கொரோனாவை எதிர்கொள்ள முடியாதுள்ளது. இணையவழி வகுப்பறைகளில் பங்கு கொள்ள முடியா துள்ளது. அவ்வழியில் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது.. இந்நாடுகளில் இணையவழித் தொடர்புகள் முழுமையாக அமைக்கப்படவில்லை என்ப தோடு மாணவர்களுக்கும் அதில் சரியான பயிற்சியில்லை. எவ்வாறாயினும் இன்று சமூக இடைவெளி மற்றும் பயணத்தடைகள் பெரிதும் நடைமுறைப்படுத்தப்படுவதால் சகல மக்களும் எண்மத் தொழில்நுட்பத்தைக் கற்றேயாகவேண்டும் என்ற நிலை ஏற்பட் டுள்ளது. பொருளாதார முறை மீண்டும் புனரமைக்கப்படும் பொழுது, வளர்முக நாடுகளின் சமூகமும் பொருளாதாரமும் அதிக அளவுக்குக் கணினி மயமாக்க வேண்டும். இதனைச் செய்ய முடியாத நாடுகள் அதன் காரணமாக மேலும் பின்னடைய நேரிடும் என இவ்வறிஞர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. தரவுகளின்படி உலக மக்களில் 50 சதவீதமானவர்கள் இணையவழித் தொடர் புடையவர்கள். வளர்முக நாடுகளில் 20 சதவீதமானவர்கள் மட்டுமே இணையத் தளத்தைப் பயன்படுத்துகின்றனர். செல்வந்த நாடுகளில் 60-80 சதவீதமானவர்கள் இணைய வழியில் கொள்வனவு செய்கின்றனர். வறிய நாடுகளில் 5 சதவீதமானவர்களே இதனைச் செய்கின்றனர். பெரும்பாலான மக்கள் எண்ம வழியைத் தவிர்த்து ரொக்கப்பணம் செலுத்தியே பொருள் வாங்குகின்றனர். சமூக இடைவெளியைப்பேண இவ்வாறான கொடுக்கல் வாங்கல் பொருத்தமற்றது என ஐ. நா. அமைப்பு கூறுகின்றது.

கொரோனாத் தொற்றானது கல்வித்துறை யில் நிலவும் எண்ம இடைவெளியை வெளிப்படையாக எடுத்துக் காட்டுவதாக

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்தது. சீனா மட்டுமன்றி வேறு பல நாடுகளிலும் இணைய வழியில் மாணவர்கள் தொலைக்கல்வியைப் பெறமுடியாதுள்ளது. குறிப்பாகக் கிராமப்புற மாணவர்களுக்கு இணைய இணைப்புகளும் வன்கல சாதனங்களும் இல்லை. கடந்த பல தசாப்தங்களாக ஏற்பட்ட பாரிய பொருளாதார வளர்ச்சி கிராமப்புற மாணவர்களுக்கு இவ் வசதிகளை இன்னும் வழங்கவில்லை எனத் தெரிகிறது.

ஐ.நா. தரவுகளின்படி இன்று 150 கோடி மாணவர்கள் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதில்லை. வறியவர், செல்வந்தர், நகரம், கிராமம் என்ற வேறுபாடின்றி சகலரும் பாதிப்புக்குள்ளாகி உள்ள நிலையில் இன்று இணையவழிக்கல்வி முக்கியத்துவம் பெற்றுள்ளது. செல்வந்த நாடுகளுக்கு அப்பால் இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளிலும் இணையவழிக் கல்வி தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கல்வியின் பயன்கள், இணையவழி வசதியற்றவர்களைச் சென்றடைவதற்கில்லை. இதன் காரணமாக வசதிகளைப் பெற்றுள்ள வர்களே பயனடைவர். பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும் அதிக நிதி வசதியற்றவர்களும் கல்வியில் பின்னடைவைக்காணும் நிலை ஏற்பட்டுள்ளது. இம்மாணவர்கள் நூல் நிலையங்களையும் ஏனைய கற்றல் சாதனங்களையும் கொண்ட கல்வி நிறுவனங்களிலிருந்து அகன்று தொலை தூரம் சென்றுவிட்டனர்.

இணையவழிக் கல்வியை பாடசாலை மட்டங்களில் விரிவாக நடைமுறைப்படுத்தப் படும்போது கிராமப்புற, தோட்டப்புற மாண வர்கள், கல்வியில் பின்னடைய நேரிடும்.

ஏனெனில் இலங்கையில் இவ்விரு பிரதேசங்களில் கணினிப்பயன்பாடு குறைவு (பார்க்க அட்டவணை : 1,11)

சிறந்த கல்வி முறைகளுக்கான தகுதிவிதி (Criterian) கல்வியின் பண்புத் தரத்துடன் (Quality) மாணவர்களுக்கு வழங்கப்படும் சமசந்தர்ப்பமாகும். இதன் காரணமாகவே பின்லாந்தின் கல்விமுறை உலகில் சிறந்ததாகப் புகழப்படுகின்றது. நான்கு வகைப் பாடசாலைகளைக் (1AB, 1C, 2, 3) கொண்ட இலங்கையின் கல்விமுறையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுக்கு, அதனுடன் எண்ம இடைவெளியும் ஏற்றத்தாழ்வினைக் கூட்டிக் காட்டுகின்றது.

**கணினியை வைத்திருக்கும் குடித்தனங்கள் – பிரதேசவாரியாக (2015–2017)**
**(அட்டவணை : 1)**

| | மேசைக்கணினி | | | மேசைக்கணினி / மடிக்கணினி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2015 | 2016 | 2017 |
| இலங்கை | 15.3 | 13.1 | 12.1 | 24.4 | 22.5 | 23.5 |
| நகர்ப்புறம் | 23.0 | 19.6 | 19.9 | 41.5 | 35.3 | 39.9 |
| கிராமப்புறம் | 14.4 | 12.2 | 11.5 | 21.9 | 20.7 | 21.0 |
| தோட்டப்புறம் | 4.1 | 5.0 | 3.5 | 5.6 | 6.4 | 5.1 |

ஆதாரம் : தொகை மதிப்பீட்டு புள்ளிவிவரத் திணைக்களம் இலங்கை (2017)

House hold – குடித்தனங்கள்

**கணினி எழுத்தறிவுவீதம் பிரதேசவாரியாக (2017)**
**(அட்டவணை : 2)**

| | கணிணி எழுத்தறிவுவீதம் (%) |
|---|---|
| பிரதேசம் | 2017 |
| இலங்கை | 28.3 |
| நகர்ப்புறம் | 41.1 |
| கிராமப்புறம் | 26.5 |
| தோட்டப்புறம் | 9.9 |

ஆதாரம் : தொகை மதிப்பீட்டு புள்ளிவிவரத் திணைக்களம் இலங்கை (2017)

இத்தகைய எண்ம இடைவெளியைக் குறைப்பதற்கான வழி முறைகள் பற்றிய பட்டியல் ஒன்றுண்டு:

* கணினி மற்றும் இணையத்தள வசதி களை மலிவாகக் கிடைக்கச் செய்தல், தகவல் தொழில்நுட்பம் செலவு மிக்கது. இதற்குக் காரணம் வரிகள், உரிமக்கட்டணம், மின்சாரச் செலவு போன்றன. அரசாங்கம் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு உதவ உரிய மானியங்களை வழங்கி, இவற்றைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தலாம்.

* பயன்படுத்துவோரை வலுப்படுத்தல், இணையத்தளங்களைப் பயன்படுத்துவோர் யாவரும் அதன் உபயோகத்தை அறிந்தவ ரல்லர். தகவல்களைப் பெறுதல், அவற்றைப் பயன்படுத்தி நன்மை பெறல், போன்றன பற்றி பொதுமக்களின் புரிந்துணர்வு வளர்க்கப்படல் வேண்டும்

* ஆய்வு முடிவுகளின்படி பின்தங்கிய மக்கள் தமது மொழிகளில் தகவல்களைப்பெற விரும்புவர்.

* வளர்முக நாடுகளின் ஒரு பிரதான பிரச்சினை போதிய இணையத்தள வலு இல்லாமை. இதனால் இணையத்தளத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாது அல்லது தொடர்புகள் தெளிவாக இருக்காது. அரசாங்கங்கள் தாம் இக்கட்டமைப்பு மேம்பாட்டில் அக்கறை செலுத்த வேண்டும்

* பாலின ஏற்றத்தாழ்வைக் குறைத்தல்: 2016ஆம் ஆண்டுக்குரிய தரவுகளின்படி 25 கோடி பெண்கள் இணையத்தளத் தொடர் பின்றி இருந்தனர். இப்பெண்களின் பெரும் பாலானவர்கள் ஆபிரிக்காவையும் மேற்காசியாவையும் சேர்ந்தவர்கள். எனவே எண்ம இடைவெளியைக் குறைக்கப் பெண் கல்வியில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்

பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் பின்னடைவைச் சுட்டிக்காட்டும் ஒரு குறிகாட்டியே எண்ம இடைவெளி. இது செல்வந்த நாடுகளிலும் காணப்படுகின்றது. எண்ம இடைவெளியை இல்லாதொழிக்க குறைந்த கல்விமட்டம், கட்டமைப்பு வசதிக் குறைவு, குறைந்த வாழ்க்கைத்தரம் போன்ற பிரச்சினைகள் முதலில் ஒழிக்கப்படல்வேண்டும்.

ooo

# மீண்டும் துளிர்க்கும் வசந்தம்




**இப்போதெல்லாம்**
**நட்சத்திரங்கள் பூத்த இரவுகளும்**
**அனல் கக்கும் பகல் பொழுதுகளும்**
**நீண்டே கிடக்கின்றன**

**சாவு அரக்கனின்**
**அரவம் கேட்டுவிடுமோ**
**என்ற அச்சம்**

**மானிடர் முடங்கிய**
**அந்தப் பொழுதுகளில்**
**உலகத்து உயிரினங்கள்**
**விடுதலைக் காற்றைச் சுவாசித்தன**

**கந்தகம் கலந்த காற்று மண்டலம்**
**களங்கமற்றுக் கிடந்தது.**

**அழுக்குகள் அற்று**
**வெளுத்துக் கிடந்தன ஆறுகள்**

**பூரித்துப் பறந்தன புள்ளினங்கள்**
**மகிழ்ந்து துள்ளின மிருகங்கள்**

**வானூர்திகளற்ற வானங்கள்....**
**வாகனமற்ற வீதிகள்....**
**கப்பல்களற்ற கடல்கள்....**

**இன்னும் எத்தனை எத்தனையோ**
**நன்மைகளாம்!**

**காலனின்**
**உயிர்குடிக்கும் பெருந்தாகம்**
**இன்னும் தீர்ந்தபாடில்லை!**

**மருண்டு நிற்கும்**
**மருத்துவ விஞ்ஞானத்திடமிருந்து**
**இதுவரை நல்ல செய்தியில்லை!**

**மலிவாகிப்போன மரணச் செய்திகள்**
**காற்றில் கலந்து**
**இதயத்தை கனக்கச் செய்கின்றன!**

**மூளையின் ஒரு மூலையில்**
**ஓர் அசரீரி மெலிதாய் ஒலிக்கிறது**
**"மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" என!**

**எ**ன் கன்னத்தில் காற்றுப்பட்டது. அது உன் மூச்சுக் காற்று என்று நினைத்தேன். கனவில் உன்னைக் கண்டதும் நீயே இங்கே இருப்பதுபோல் இருக்கின்றது.

பிரான்சின் துலுஸ் பகுதியில் குழந்தையோடு சிறு குடும்பமாகி வாழ்கிறாள் வனஜா. பாரிசில் தன் பெற்றோருடன் வாழ்ந்து கல்வியை முடித்துப் பாச முடிச்சுகளோடு சற்றுப் பிரிந்து தன் குடும்ப வாழ்வைப் பின்னுவதும் சகஜம்தானே! தினமும் தொலைபேசி மூலம் வனஜாவுடன் தொடர்புகொண்டு பாசக் கடலில் மகிழுவார் வனஜாவின் தந்தை. சுகம் விசாரித்து பேரக்குழந்தையுடன் செல்ல மொழி பேசி மகிழ்வதும் சுகமான அனுபவம் தானே! வனஜாவின் அம்மா சகோதரிகளும் பேசி மகிழ்வதும் அழகானது. அழகு என்றால் என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரை ஒன்றின் நினைவே சுகமளிக்கிறது என்றால் அது மிகவும் அழகாகத்தான் இருக்க வேண்டும். மூன்று வருடங்கள்தான் வனஜா துலுசில் வாழ்ந்தாலும் தன் பெற்றோர் சகோதரர்களுடன் வாழ்ந்த பள்ளிக்காலங்களும், இனிமையான சுற்றுலாக்களும் குடும்பக்கொண்டாட்டங்களும் நினைப்பதற்கே அழகான அனு பவங்களாகி மனத்திரையில் அவளுக்கு காட்சிகளாகிவிடும்.

உலகத்தை தீயைவிட வேகமாகப்பற்றி உயிர்களை அழித்துக் கொண்டிருக்கும் கொரொனா வைரசின் செய்திகள் சகல வழிகளிலும் பரிமாறிக்கொண்டிருக்கிறார்கள். இது என்ன கொடுமை! சைனாவில் வூஹான் என்ற இடத்தில் ஆரம்பித்த இந்த வைரசு உலகை உலுப்பிக் கொண் டிருக்கிறதே! வனஜா மட்டுமன்றி மனிதநேயமுள்ள அத்தனை உயிர்களையும் தூக்கத்திலும் இச்செய்தி இதயத்தை அழ வைக்கிறதே!

தொழில்நுட்பம் பெருகிய காலம் இன்றையது. படக்காட்சிகளுடன் அருகில் இருப்பது போன்ற உணர்வுடன் வட்ஸ்அப், வைபர், ஸ்கைப் என்று கைத்தொலைபேசியை உருமாற்றிமாற்றி உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நேரம் இதுபோல் இருக்கிறது. வனஜாவின் குடும்பமும் தினமும் இப்படித்தான் கதைத்துக் கலகலப்பாக இருப்பார்கள். வனஜாவின் தந்தை எல்லோரும் கவனமாக இருக்கவேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் அவர் வாயிலிருந்து அடிக்கடி உதிரும். மகிழ்வில் அழகுகாட்டி சுகம் கொடுக்கும் அற்புதக் குடும்பம் அது.




நவஜோதி
ஜோகரட்னம்
(லண்டன்)

உயிர்களை அழித்துவிட ஆயுதங்களை உருவாக்கி வைத்திருக்கும் திமிர்பிடித்த மனிதனுக்கு இயற்கையின் ஒரு சின்னச் செய்தியா இது? ஐயோ விசித்திரமான உலகத்தில், நிஜமற்ற இந்த உலகத்தின் பிரமையா என எண்ணத் தோன்றுகின்றது வனஜாவுக்கு. சுறுசுறுப்பாக இயங்கும் பாரிசில் இப்போ மரண பயம் உறைந்து உப்பிக் கிடக்கிறதே!. மனிதனை உலுப்பி வேட்டையாடும் கொரோனா உலக வரலாறாகிறதா? நெஞ்சு குமுறு கிறது வனஜாவுக்கு.

கொரோனா வைரஸ் சமத்துவக் கொள்கையை அல்லவா மீண்டும் தீவிரமாக நினைவு படுத்துகிறது. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எல்லோரையும் குறிவைத்துத் தாக்குகிறதே! ஐயோ இது என்ன கொடுமை! மதவாதிகளால் கொரோனா வராமல் வரமளிக்க வேண்டுமென ஜெபித்தவர்களையும் கொரோனா குறி வைத்துவிட்டுதாம். முற்போக்குவாதியான அப்பாவின் வாயிலிருந்து வந்தபோது,

வனஜா சிரித்துக்கொண்டே சொன் னாள் : “அப்பா இப்போ

எங்களுக்குக் கடவுள்மாதிரி இருப்பது உலக மெல்லாம் சேவை செய்யும் வைத்தியர்களும் தாதிமார்களும் அங்கு மனிதநேசத்தோடு பணிபுரிவர்களும்தான். அவர்களுக்கு கைதட்டி நன்றிக்கடனை மக்கள் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள்தான் தெய்வங்கள்" என்றாள் வனஜா.

உலக மகா யுத்தங்களின் அனுபவங் களைக் கடந்து வந்த பிரெஞ்சுப் பெரியவர் தொலைக்காட்சியில் சொல்லிக் கொண்டிருக்கிறார் : "எல்லா யுத்தங்களையும் மடக்கி மனிதரை வீட்டுக்குள் முடக்கிவிட்டதே இந்தக் கொரோனா வைரஸ். தான் அறிந்தவரை உலகத்து மக்களை மனமுடைந்து துடிக்க வைக்கும் கண்ணுக்குத் தெரியாத இக்கிருமியை இன்றுதான் நான் அறிகிறேன். இறந்தவர் உடலை உறவினருக்கே காட்டாமல் அடக்கம் செய்கின்ற பெரும் கொடுமையை இன்றுதான் பார்க்கிறேன்" என்று. பாவங்கள் நிறைந்த பூமியைப் படம் போட்ட அந்தப் பெரியவரின் ஆன்மா திரவமாகி கண்ணீர் ரேகைகளால் வழிந்தோடியது. இதனைப் பார்த்துக்கொண்டிருந்த வனஜாவின் நெஞ்சு குமுறிக்கொண்டிருந்தது. இந்தக் கொடுமை எந்த எதிரிக்கும் நிகழக்கூடாது. இந்த வைரசால் பாதிக்கப்பட்டவர்கள் நல்ல சுகம் பெற்று வாழ்க்கையைத் தொடரவேண்டுமென நெஞ்சுக்குள் அவள் வாழ்த்தும்போதே உலகம் பூராகவும் உயிரிழந்தவர்களின் தொகையால் வனஜா அதிர்ந்து உடைந்துபோனாள்.

மீண்டும் வனஜாவின் அப்பாவின் தொலைபேசி.

பிள்ளை வீட்டில் கவனமாக துணைவரோட இரு. பேரனை வீட்டுக்குள் விளையாடவிடு. சத்துள்ள சாப்பாடுகளை வேண்டிக் கொஞ்சம் வைத்துவிடு. நல்ல நூல்களை எடுத்து வாசி பிள்ளை. வனஜாவுக்கு அப்பாவின் அறிவுரைகள் அவளை உற்சாகப்படுத்தின. அப்பா நல்ல கலை ரசிகன் மட்டுமல்ல ஒரு புத்தகப் புழு. உலகம் தெரியாது அவருக்கு. அவருக்கு வாழ்க்கை இன்பங்கள் புத்தகமும் பிரசங்கமும்தான். பிரெஞ்சு நாட்டின் எமில் ஷோலா, மாப்பசான், விக்டர் ஹியூகோ மற்றும் ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய் போன்ற தலைசிறந்த எழுத்தாளர்களை தனது சிறு வயதில் அப்பா அறிமுகப்படுத்தியிருந்ததும் அவரின் வீட்டு நூலகத்தில் இத்தகைய நூல் களையே பார்த்த அனைத்தும் அவள் நினை வில் சுழன்றன. அறிவுரைகளை இடை மறித்து

"அப்பா நீங்களும்தான் கவனமாக இருங்கோ. நல்ல சுகதேகிகளாக இருந்த வர்களே இந்த கொரோனாவால் திடீரென மறைவது சொல்லமுடியாத வேதனையாக விருக்குது. நீங்கள் நல்ல சுகதேகி என்று நினைத்துக் கொண்டு வெளியில் போய்த் திரியாதையுங்கோ அம்மா தங்கைகளுடன் கவனமாக வீட்டுக்குள்ளே இருங்கோ அப்பா.

அவள் வீட்டின் மூத்த பெண். அவளுக்கு அப்பாவில் தான் கூடுதலான கரிசனை என்று வனஜாவின் அம்மா பாசங்கலந்த மகிழ்வோடு குறும்பாகப் பேசுவார். அப்பாக்கேற்ற மகள். கலைகளை ரசிப்பதிலும், இயற்கையை நேசிப் பதிலும், சினிமாப் படங்களைப் பார்ப்பதிலும், எல்லா இடங்களுக்குச் சுற்றித் திரிவதிலும், குடும்பங்களோடு கொண்டாடி மகிழ்வதிலும், நண்பர்களோடு உறவாடுவதிலும் இருவரும் ஒரே அச்சுத்தான் என்று சொல்லிச் சிரிப்பாள் அம்மா.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சுகங்களை பாதுகாக்கவேண்டிய நேரமிது அம்மா. இந்தக் கொரோனா அசுர வேகத்தில் பரவி ஆட்களைக் கொல்லுது என்று தொடர்ந்து கொண்டேயிருந்தாள் வனஜா.

பேரன் இப்போ ரசனையில் ஆழ்ந்து மகிழ்கிறான் அப்பா. அவனுக்கு பறவைகளில் அதிக நாட்டம் என்று உங்களுக்குத் தெரியும்தானே. விமானங்களின் இடைவிடாத ரீங்காரம் தடைப்பட்டதால் பறவைகள் கூட்டம் பயமின்றி வட்டமிடுகின்றன. பறவை களும் இப்போ உச்சஸ்தாயியில் பாடித் திரிகின்றன. உங்கள் பேரனைச் சொல்ல வும் வேண்டுமா? வீட்டுக்குள் இருந்து ஜன்னலூடாகப் பார்த்து ரசித்து பரவசத்தில் இருக்கிறான் அப்பா. துலூஸில் ஆட்கள் நடமாட்டம் இல்லாததால் வாத்துக்கள் எல்லாம் வீதிகளில் நடை பயில்கின்றன. ஆச்சரியமாகத் தானிருக்கிறது. மனிதர்கள் வீட்டுக்குள் இருக்க இப்போ பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் கொண்டாட்டமாயிருக்குது. மாயாஜால வித்தைகளினால் உலகம் புரண்டுகொண்டிருக்கிறதுபோல மனம் ஏங்கு கிறது அப்பா என்று மனக்கிடக்கைகளை அசட்டுத்தனமாகக் கொட்டிக்கொண்டேயிருந் தாள் வனஜா.

வனஜாவுக்கு வீட்டுக்குள்ளே அடங்கி யிருப்பது விலங்குகளைப் பூட்டி வைப் பதுபோலிருந்தது. வீட்டில் சினிமாப் படத்தைப் போட்டால் அநுபவிக்க ரசித்துப் பார்க்க முடியுமா? மனிதர்களின் மரணக் குவியல்களின் தகவல்கள் அவளையும் மரணதண்டனையை அனுபவிப்பது போன்ற உணர்வுக்குள்ளாக்கியது. தொலைக்காட்சி, வட்சப் பிரசங்கங்களைக் கேட்க உடல் என்னவோ ஒரு மாதிரியாக சொல்லமுடியாதபடி சோகம் நெஞ்சை அடைத்தது. அவளுக்கு. வாழ்க்கை என்பது ஒரு நாள் சங்கிலியா? என எண்ணத் தோன்றுகின்றது.

பணம் பணமாக சேமித்து பாங்கில ரொக்கமாகக் காசும், வீடு வீடாக வேண்டி வாடகைக் காசுகளும் எக்கச்சக்கமாக இருப்ப வர்களுக்கும் இப்ப என்ன வாழ்க்கை அந்தகாரந்தானே! என்னென்ன அட்டகாசம் செய்தினம் இந்த மனிதர்கள்? இரக்கமற்ற சடலங்கள். மனிதரை மனிதர் நேசித்தார்களா? சிங்கம் நரிபோன்ற மிருகங்களின் குணம்தானே மிஞ்சிக் கிடந்தது இந்த மனிதருக்கு. இப்போ அதுகள் சுதந்திரமாகத் திரியுதுகள். இப்ப மிருகங்கள் கூட்டுக்குள்ள இருக்குமாப்போல வீட்டுக்குள்ள கிடக்கினம் மனிதர்கள். யாருக்குத் தெரியும் இனிமேலாவது மனிசர் மாதிரி யோசிக்கினமோ என்று முற்போக்குவாதியான அப்பா கூறிக்கொண்டிருந்தார். சரியம்மா வனஜா காலத்திடம் நாம் பயப்பிடத்தான் வேண்டியிருக்கிறது. பொழுதுகளை நல்லதாக நினைத்துக்கொண்டு வாழப்பழகுவோம். எல்லாம் விரைவில் நல்ல நிலைமைக்கு வரும்.



**என்னென்ன அட்டகாசம் செய்தினம் இந்த மனிதர்கள்? இரக்கமற்ற சடலங்கள். மனிதரை மனிதர் நேசித்தார்களா? சிங்கம் நரிபோன்ற மிருகங்களின் குணம்தானே மிஞ்சிக் கிடந்தது இந்த மனிதருக்கு. இப்போ அதுகள் சுதந்திரமாகத் திரியுதுகள். இப்ப மிருகங்கள் கூட்டுக்குள்ள இருக்குமாப்போல வீட்டுக்குள்ள கிடக்கினம் மனிதர்கள்.**

வானத்தைக் கௌவிக் கொண்டது இருட்டு. வனஜாவின் நினைவுகள் இன்பத்தின் முன்னொளிபோல வருஷங்களை முன்னோக்கி ஓடியது. பாரிசில் சுற்றித்திரிந்த இடங்கள், வெயிலைக் கண்டால் அப்பாவோடு சேர்ந்து சயிக்கிளோட்டமும், ஆற்றில் வாடகைக்கு வள்ளம் எடுத்து வலித்து ஓடுவதும், இசை நிகழ்ச்சிகள், தேசிய விழாக்கள் என்று குடும்பமாக அப்பாவின் வழிகாட்டலில் ஓடித்திரிந்தது. வாழ்க்கை இன்பத்தில் துரிதமாகித் துலங்கிய நாட்கள் மகிழ் வானவை. ஏன் இத்தகைய நினைவுகள் எல்லாம் வருகின்றன என்று அவளுக்கே புரியவில்லை. தனிமை நல்ல தெறிப்புக்களை வெளிப்படுத்துகின்றன போலிருக்கிறது என்று எண்ணிக்கொண்டாள். அவளைச் சுற்றி யிருக்கும் எல்லாப்பொருட்களுமே கண் சிமிட்டிச் சிரிப்பன போலிருக்கிறது. இந்த இருட்டைப்போல உள்ளமற்றிருந்தால், தேக மற்றிருந்தால் என்ன சுகமாக இருக்கும்?

விடிந்ததும் விடியாததுமாக இருக்கும் போதே அப்பாவின் அழைப்பு வந்துவிடுமே! இன்னும் என்ன என்ர அப்பாவின் தொலைபேசி அழைப்பைக் காணவில்லை என்று எண்ணும்போதே தொலைபேசி அலறிக்கொண்டது. பிள்ளை வனஜா அம்மா கதைக்கிறேன். குரல் தழுதழுத்தபடி அப்பாவுக்கு இரவு திடீரென மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டது. காய்ச்சலும் உடனடியாக அதி வேகமாகி உடல் நடுங்கத் தொடங்கியது. உடனடியாக பிரான்ஸ் அவசரசேவைக்கு *(SAMU)* அறிவித்தோம். உடனடியாகவே வைத்தியசாலைக்கு கொண்டு போய்விட்டார்கள். இப்போ

அவர் பரீஸ் பத்திலுள்ள லறிபொவாசியர் *(Lariboisiere)* வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார். அங்குள்ள வைத் தியர்கள் தாதிமார்கள் மிகமிகக் கவன மாகவே அப்பாவைக் கவனிக்கிறார்கள். ஒன்றுக்கும் யோசிக்காதே வனஜா விரைவில் அப்பா குணமாகி வீட்டிற்கு வந்திடுவார்.

அம்மா என்று அலறிய வனஜா, பாரிசுக்கு உடனேயே புறப்பட வேண்டும் என்று மனதை உறுதிப்படுத்திக்கொண்டாள். அவசர அவசர மாக விமான ஒழுங்குகளைச் செய்தாள். இன்னும் போக்குவரத்துச் சேவைகள் முற் றாகத் தடுக்கப்படவில்லை என்ற ஆறுதல் கொஞ்சம் அவள் பதட்டத்தைத் தேற்றியது.

பாரீசில் அவளின் பெற்றோரின் இல்லத் திற்கு அன்று மாலையே வனஜா குடும்ப மாக வந்துவிட்டாள்.

வனஜாவின் அம்மா கதவைத் திறந்து கொண்டே கூறினாள் பிள்ளை வனஜா எனக்கும் உடல்நிலை சற்று வலித்து வித்தியாசமாக இருக்கிறது. பேரனை என்னிடம் நெருங்க விடாதேயம்மா, நீயும் சற்று விலகியிரு. அப்பாவை நாங்கள் சென்று பார்க்க முடியாது செல்வமே! அவர் விரைவில் தேறி வீட்டிற்கு வருவார். முழு நம்பிக்கையோடு இருப்போம். அவர் இந்த கொரோனாவை வென்று நிட்சயம் வருவார். அவரின் நல்ல இதயத்திற்கு எதுவுமே தீயவை யாக நடக்காதம்மா.

வனஜாவுக்கு அப்பாவின் ஆசைமுகத்தைப் பார்க்கவேண்டுமென்றுதான் படுகின்றது. மார்பு வெடித்துவிடுவதுபோலத் துடிக்கிறது. இதுதானா இருளில் இருந்து சுகம் கண்டேன்? காதைப் பொத்திக்கொண்டு படுக்கையில் பொத்தென்று விழுந்து அழுது புரண்டாள் வனஜா. அம்மாவுக்கும் இப்படியான நிலை மையா?. கட்டி அணைத்து முத்தமிட்டு வரவேற்கும் எங்கள் கலாச்சாரம்கூட அறுந்துபோய்விட்டதா? எங்களுக்கு, என்ன கொடுமை இது? இயற்கை ஈட்டி முனையில் எம்மை நெருப்பில் போட்டுப் பொசுக்குவது போலல்லவா இருக்கிறது.

இருபத்தியொராம் நூற்றாண்டில், நவீன யுகத்தில் வயது வந்தவர்கள் சுகதேகிகளாக மகிழ்ந்து வாழ்வை வாழுவதற்கு இத் தனை தடையா? இது என்ன உலகம் இப்படி நாசம் செய்கிறது? உலகமாவது மண்ணாங்கட்டியாவது. வனஜாவின் உடல் படபடத்தது. எண்ணங்கள் பேய்க்கூத்தாடி ஒன்றோடொன்று மோதின. ஒவ்வொரு நிமிடமும் அவள் அப்பாவின் நினைவால் நெஞ்சு நெருப்பால் தகித்துக்கொண்டிருந்தது.

தொலைபேசி இடைவிடாமல் கேட்கிறது. வைத்தியசாலையிலிருந்து வந்த செய்தியால் அம்மாவின் முகம் இளஞ்சிவப்புத்தோய்ந்து கண்ணீர்த்துளிகள் தொங்குவதை அவதானித் துக் கொண்டிருந்தாள் வனஜா. அடர்ந்த காற்று மெல்லியதாக இழைக்கிறது.

அம்மா பிள்ளைகளுக்குச் செய்திகளைச் சொன்னார். அப்பாவின் நிலை மோசமாகிக் கொண்டு வருவதால் அவசர சிகிச்சைக்குக் கொண்டு செல்கிறார்களாம். வைத்தியர்களும் தாதிமார்கள் பணியாளர்கள் எல்லோரும் கண்ணயராது கடின முயற்சி செய்து கொண்டிருக்கிறார்களாம். எங்களை எதற்குமே அனுமதிக்க முடியாதாம் என்றுசொல்லி அந்தத் தாதி என்னிடம் மன்னிப்புக் கேட்கிறாள். எங்கள் வேதனையைப் பார்த்தவள்போல் அந்தத் தாதி அழுகிறாள். கண்ணுக்குத் தெரியாத தொற்றினால் எங்களுக்கும் ஆபத்து வரலாம் என்று பதறுகிறாள். அவள் என்ன பிறவியோ!...

பூரண அமைதியும் ஓய்வும் அடைந்த மனங்களைப் புரட்டி அலச விரும்பாது இப்போ களைப்போடு இருக்கின்றனர். எங்கள் அப்பாவை நாங்கள் இனிப் பார்க்கவே முடியாதா? மேகங்கள் பாதத்தில் இடிப்பது போல் உணர்கின்றாள் வனஜா. விழிகளுக்குள் நிறக்கீற்றுகள் மோதுகின்றன.

மீண்டும் தொலைபேசி அழைப்பு மெல்லிதாக அழுத்தமாக இடைவிடாமல் கேட்கிறது.

வனஜாவின் உடல் பாரமின்றி காற்று பறந்து வந்து முட்டித் துழைத்து ஊடுருவி உழைகின்றன. இதுதான் என் அப்பாவின் இறுதிச் செய்தியாகக் கலகலக்கும் ஒலியா..?

பறவையின் சிறகு நிழல் படுக்கைமீது அசைவற்று விழுந்திருந்தது

இயற்கை அற்புதமானது. இயற்கை புதிரானது. ஆனால் இயற்கை இரக்கமற்றது என எண்ணத் தோன்றுகின்றது. காலங்கள் அழகானவை. காற்றே இதமான குளிரோடு வருவாயா! வாழ்வை வெல்வோம்!.

❍❍❍

# POOBALASINGHAM BOOKDEPOT

Importers, Exporters, Sellers & Publishers of Books, Stationers and News Agents

## புதிய வரவுகள்

| நூலின் பெயர் | ஆசிரியர் | வெளியீடு | விலை |
|---|---|---|---|
| • லண்டன் 1995 ( சிறுகதைகள்) | இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் | River themes Publication- | 962.50 |
| • JPயின் காரட்டூன்கள் | சுப்பையா ஜெயபாலன் | மாணிக்கவள்ளி பதிப்பகம் | 850/= |
| • தென்பொதிசைச் சந்தனமே | செ. லோகராஜா | - | 225/= |
| • நிலவே முகங்காட்டு | செ. லோகராஜா | | 250/= |
| • செந்தமிழாய் வந்தவளே | செ. லோகராஜா | | 310/= |
| • நினைவோ ஒரு பறவை ராவனன் | | Ravanan Distributors | 400/= |
| • சமாதானத்தின் கதை | ஜேகே | ஆதிரை வெளியீடு | 663/= |
| • குப்பி | வெற்றிச் செல்வி | டிஸ்கவரி புக்பலஸ் | 390/= |
| • தூவல் | ஹட்டன் பிரவீனா | | 300/= |
| • மோகத்திரை | உமா வரதராஜன் | | 936/= |
| • மேகலை கதா | தேவகாந்தன் | | 550/= |

## பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை: இல. 202, செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2422321. தொ.நகல்: 2337313 மின்னஞ்சல்: pbdho@sltnet.lk

கிளைகள்:

340, செட்டியார் தெரு, கொழும்பு - 11. தொ.பே: 2395665

இல. 309 A-2/3, காலி வீதி, கொழும்பு - 6. தொ.பே: 4-515775, 2504266

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

## ஆசி கந்தராஜாவின் டயறிக் குறிப்பு – 2

# வைரஸ் புராணம்



எங்கள் சிட்னி வீட்டில், ஒரு எலுமிச்சை நின்றது. வருடம் முழுக்கக் காய்க்கும்; விதைகள் இல்லை, நல்ல புளி. திடீரென அதன் இலைகள் வெளிறிச்சுருண்டு, பட்டை வெடித்து, காய்ப்பதை நிறுத்திக்கொண்டது.

எலுமிச்சைக்கு வைரஸ்நோய் (CTV) என்பதை உறுதி செய்துகொண்டேன். தாமதிக் காது மரத்தை வேருடன் பிடுங்கி எரித்து விட்டேன். மனைவிக்கோ அது பெரும் கவலை. அது அவள் ஆசை ஆசையாக, பண்ணையில் வாங்கி, நட்டுவளர்த்த மரம்.

எல்லாத்துக்கும் மருந்தடிக்கிறியள் எலுமிச்சைக்கு மருந்தடிக்கேலாதோ? எனப் புறுபுறுத்தாள் மனைவி.

தாவரத்தையோ அல்லது மனிதர் உட்பட விலங்குகளையோ தாக்கும் வைரஸ் கிருமிகளுக்கு மருந்தில்லை என்றேன் மொட்டையாக.

என்ன சொல்லுறியள்? உலகமே கொரோனா வைரஸுக்கு மருந்து கண்டுபிடிக்க, கங்கணம் கட்டிக்கொண்டு ஆராய்ச்சியில் இறங்கியிருக்குது. நீங்கள் வைரஸ் கிருமிக்கு மருந்தில்லை என, புதுக்கதை சொல்லுறியள் என்றவாறே என் முன் வந்தமர்ந்தாள் மனைவி.

உயிருள்ள ஒரு ஜீவனைத்தான் கொல்லலாம். ஜடப்பொருளைக் கொல்லலாமோ? என ஆரம்பித்த என்னை இடைமறித்த மனைவி, அண்டிபயாட்டிக் மருந்து, வைரஸ் கிருமியைக் கொல்லாதோ? என அடுத்த கேள்வியையும் என்முன் வைத்தாள்.

அவள் அப்படித்தான், எப்பொழுதும் ஒரு அவசரக்குடுக்கை.

பக்டீரியா ஒரு உயிருள்ள ஜீவன். ஆனால் வைரஸ் ஒரு ஜடப்பொருள். அதற்கு உயிர் இல்லை.

ஓ...!

அண்டிபயாட்டிக் மருந்து, உயிருள்ள பக்டீரியாவைத்தான் கொல்லும். உயிரற்ற வைரஸ்ஸைக் கொல்லாது. இதையே சற்று விரிவாகச் சொன்னால், ஒரு உயிரைக் கொல்ல வேண்டுமாயின் அந்த உயிரின் ஏதோவொரு பாகத்தைச் சிதைக்க வேண்டும். அண்டிபயாட்டிக் மருந்து செய்வதும் இதைத்தான். அதாவது, அது பக்டீரியாக் கலத்தின் சவ்வையோ (Membrane) அல்லது அதன் உட்புறத்தேயுள்ள ஒரு அமைப்பையோ தாக்கி அழிக்கும்.

ம்...!

பலவகை பக்டீரியாக்களைக் கொல்லும் அமொக்ஸ்ஸிலின் (Amoxicillin) போன்ற பொதுவான அண்டிபயாட்டிக் மருந்துகள் இருந்தாலும், சில அண்டிபயாட்டிக் மருந்துகள் குறிக்கப்பட்ட வகை பக்டீரியாவையே கொல்லும். அதனால்தான் நூற்றுக்கணக்கான அண்டிபயாட்டிக் மருந்துகள் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பெடியளுக்கு விரிவுரை நடத்திறமாதிரிச் சுற்றி வளைச்சுச் சொல்லாமல், நான் கேட்ட வைரஸ் விஷயத்துக்கு வாங்கோ.

கவனமாய்க் கேள். வைரஸ் கிருமியால் தனக்குத் தேவையான சக்தியை சுயமாக உற்பத்தி செய்யமுடியாது. அதுமட்டுமல்ல அது இனப்பெருக்கம் செய்துகொள்ள இன்னு மொரு உயிரில் தங்கியிருக்க வேண்டும்.

என்னப்பா புதுசு புதுசாய்க் கதை சொல்லுறியள். அப்போ எப்படி கொரோனா வைரஸ் டக்கெண்டு பரவி உலகத்தையே ஆட்டிப் படைக்குது?

சரி, நீ கேட்ட கொரோனா வைரஸை உதாரணமாக வைத்துக்கொண்டே விஷயத்துக்கு வாறன். ஆனால் இது எல்லா வைரஸ்ஸுக்கும் பொதுவானதுதான்.

வெளியிலை இருக்கிற கொரோனா வைரஸ் மனித உடம்புக்குள் போனால், அது தனக்கு வசதியான ஒரு இடத்தில் ஒட்டிக் கொள்ளும். ஈரலிப்புத் தன்மையான சுவாசக்குழாய், சுவாசப்பை போன்றவை இதற்குத் தோதான இடங்கள்.

ஓஹோ, அதாலைதான் மூச்சுத் திணறல் வாறதாச் சொல்லுறாங்கள்? என்றபடி, சுந்தரி அக்காவும் எமது உரையாடலில் கலந்து கொண்டார்.

நான் தொடர்ந்தேன். மனித உடலில் ஒட்டிக்கொண்ட கொரோனா வைரஸ், கலத்தினுள்ளே (Cell) சென்று இனப்பெருக்கம் செய்ய ஆரம்பிக்கும்.

அதெப்படி? வெளியிலை பெருகாத வைரஸ் கிருமி, உடம்புக்குள் எப்படிப் பெருகுது? இப்படி நியாயமானதொரு கேள்வியை முன்வைத்தாள் மனைவி.

மனித உடல், கலங்களினால் (Cells) ஆனது. கலத்துக்கு உள்ளே இருக்கும் கருவுடன் ஒட்டிக்கொள்ளும் வைரஸ், அதன் டிஎன்ஏ-யைத் தூண்டி தனது இனப்பெருக்கத்துக்குத் தேவையான நொதியத்தைச் சுரக்கச் செய்து, தன்னைப் பெருக்கிக் கொள்ளும். இப்படி ஒரு வைரஸ் ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்காக வைரஸ் கிருமிகளை உற்பத்தி செய்யும்.

இதை இப்படிச் சொன்னால் என்ன?

எப்படி?

உங்கடை வீட்டுக்கு வந்திருக்கிற நான், உங்களைத்தூண்டி உங்கடை சாமான்களையே பாவித்து, உங்கள் உதவியுடன் எனக்குத் தேவையான சாப்பாட்டைச் சமைத்துக்கொள்வது என உதாரணம் சொல்லிச் சிரித்தார் சுந்தரியக்கா.

ஒருவகையில் அப்படித்தான் என நானும் சுந்தரியக்காவுடன் சேர்ந்து சிரித்தேன்.

கருமத்தில் கண்ணாயிருந்த மனைவியோ அடுத்த கேள்வியை எடுத்துவிட்டாள்.

மருந்து கண்டுபிடிக்கிறன், இந்தா மருந்து கண்டுபிடிக்கிறன் எண்டு சொல்லுறாங்களே, இந்த மருந்து என்ன செய்யுது?

மருந்துகளால் வைரஸ் கிருமியை அழிக்க முடியாவிட்டாலும் அதன் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாமல்லவா?

எப்படி?

வைரஸின் இனப்பெருக்கத்துக்கு உதவி செய்யும் நொதியத்தின் தொழிற்பாட்டை, மருந்துகள் கட்டுக்குள் கொண்டுவந்து வைரஸின் இனப்பெருக்கத்தை நிறுத்தும்.

என்ரை சமையலை நிறுத்த, உன்ரை மனுசியைக் கொண்டு நீ அடுப்பை நூத்தமாதிரி, என மீண்டும் ஒரு நகைச்சுவை வாணம் விட்ட சுந்தரி அக்கா, மறுகணம் சீரியஸாகி, உள்ளுக்கை போன ஒறிஜினல் வைரஸ் கிருமிக்கு என்ன நடக்கும்? எனக்கேட்டார்.

கலத்துக்கு உள்ளேயிருக்கும் ஒறிஜினல் வைரஸைக் கொல்லும் சக்தி எமது இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களுக்கு மாத்திரம்தான் உண்டு. இதையே வேறுவிதமாகச் சொன்னால் உடம்பிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியால் மட்டுமே முடியும். நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாத ஒருவர் வைரஸ் கிருமியின் இனப்பெருக்கத்தை தடுக்க அதற்கான மருந்தை தொடர்ந்து எடுக்க வேண்டும்.


வக்சீன் எனப்படும் தடுப்பூசி என்ன பங்களிப்பைச் செய்கிறது?

வருமுன் காப்பது. அதாவது வைரஸ்





**தாவரங்களையோ, விலங்கு மற்றும் மனிதர்களையோ தாக்கும் வைரஸ் கிருமிகள் உயிரற்ற ஜடப்பொருள்கள். அவற்றை அழிக்க மருந்தில்லை. எதிர்காலத்தில் வைரஸ் கிருமிகளுடன் வாழப் பழகவேண்டியதுதான்....**




கிருமிக்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தியை உடம்பில் உருவாக்குவது.

சரி, இனி எலுமிச்சை மரத்தை ஏன் வேரோடை புடுங்கி எரிச்சனீங்கள் எண்டு சொல்லுங்கோ. மரத்தை அடியோடை வெட்டி விட்டால், அடிக் கட்டையிலை இருந்து தழைக்காதோ?

நான் ஆரம்பத்தில் சொன்னமாதிரி தாவரங்களையோ, விலங்கு மற்றும் மனிதர் களையோ தாக்கும் வைரஸ் கிருமிகள் உயிரற்ற ஜடப்பொருள்கள். அவற்றை அழிக்க மருந்தில்லை. அதேவேளை தாவரங்களுக்கு இமுயூன் (Immune) எனப்படும் நோய் எதிர்ப்புச்சக்தியும் இல்லை. அதுமட்டுமல்ல தாவரங்களில், வைரஸ் கிருமிகள் நீரைக் கடத்தும் ஈரப்பிடிப்புள்ள காழ் (Xylem) கலங்களில், நுனிக் குருத்து முதல் அடி வேர் வரை இருக்கும்.

வெட்டின மரத்தைக் குப்பைக்குள் போடா மல் ஏனடா தம்பி எரிச்சனி? - இது சுந்தரி அக்கா.

வைரஸ் பரம்பலைத் தடுப்பதற்கான ஒரே வழி, தாவரங்களைப் பிடுங்கி எரிப்பதுதான். மண்ணுள் புதைத்தாலும் அவை நிலத்தடி நீர் மூலம் மற்ற தாவரங்களின் வேர்களில் தொற்ற வாய்ப்புண்டு.

அப்போ, வைரஸ் கிருமியில் இருந்து தப்ப என்னதான் வழி? எனப் பரிதாபமாகக் கேட்டார் சுந்தரி அக்கா. அவர் பாவம். ஒரு கலியாணத்துக்கென லண்டனில் இருந்து சிட்னிக்கு வந்தவர், கொரோனா பிரச்சனை யால் திரும்பிப் போக முடியாமல் எங்களுடன் நிக்கிறார்.

எதிர்காலத்தில் வைரஸ் கிருமிகளுடன் வாழப் பழகவேண்டியதுதான், எனச் சாட்டுக்கு ஒரு பதிலைச் சொல்லி வைத்தேன் நான்.

அவரவர் கவலை அவரவருக்கு!

○○○

---

ஜின்னாஹ் ஷரிபுத்தின்




### கொரோனா 1

**சாதிமதம் இல்லை சமமாகும் மக்களெனும்**
**நீதிதனைச் சொல்வதற்கோ நீவந்தாய் – போதுமினிக்**
**கொன்றொழித்தல் தாங்காக் கொடுமை கொரோனாவே**
**நன்றாய் உணர்ந்தோம் நகர்**

### கொரோனா 2

**உலகத்துச் சண்டியனும் ஊனமுற்றான் சாவால்**
**கலங்கியழச் செய்தாய்நீ கைகள் – விலங்கிட்ட**
**வாகாகிப் போயினனே வானோன் பழிதீர்த்தான்**
**சோகந்தான் மக்கள் நிலை**



### கொரோனா 3

**தப்பிழைத்த மாந்தருக்குத் தண்டனையோ இப்பெருநோய்**
**அப்பப்பா கொள்ளை அழிவு – இப்புவியில்**
**வேண்டாம் இதுபோன்றாம் வேதனைகள் ஏகனேநாம்**
**வேண்டிப் பணிந்தோம் விலக்கு.**

### கொரோனா 4

**பாலூட்டும் மாக்களைநீ பாதுகாத் த:.தினைப்போல்**
**பாலூட்டும் மக்கள் புலன்கொள்ள – மேலவனே**
**வேற்றுமையில் காட்டினையுன் வல்லமையைத் தோற்றனம்நாம்**
**சீற்றம் தவிர்த்தருள்நீ காப்பு**

### கொரோனா 5

**குண்டுக் கலாச்சாங் குன்றியின்று "கோவிற்"றின்**
**நண்டுப் பிடிக்குள்ளே நாடெல்லாம் – ஒன்றாகத்**
**திண்டாடும் கேடுதனைச் செப்புவது யாரிடத்தே**
**உண்டில்லைத் துன்பம் பொது**



# கொரோனா அரக்கன் முடுக்கிவிட்டுள்ள சைபர் குற்றங்கள்



-ஞானம் பாலச்சந்திரன்

**பின்புலம் :**

கொரோனா எனும் கண்ணுக்குத் தெரியாத அரக்க-வைரஸ் 2020ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து உலகத்தை ஆட்டிப்படைத்து வருகிறது. இக்கொரோனாவானது விட்டுச் செல்லப்போகின்ற தனிமனித, குடும்ப, சமூக, பொருளாதார, மொழி, கலாசார, பண்பாட்டு, விழுமிய தாக்கங்கள் எத்தகையன? என்பது இன்னமும் கல்வி அடைப்படையிலான எதிர்வு கூறல்களாகவே (Educated Guesses) உள்ளன. இதற்கு முன்னர் இதுபோன்ற தொற்று நோய்கள் ஏற்பட்டுள்ளபோதும், உலகமானது கொரோனா ஏற்படுத்தியுள்ள இத்தகையொரு நிலையினை இதற்கு முன்னர் சந்திக்காமையினால் அவ்வெதிர்வுகூறல்கள் அநுபவம் சார்ந்தவையாக அமையவில்லை என்பதை நினைவில்கொள்ளல்வேண்டும்.

1990களின் பின்னர் ***கணினி***யும் 2000களின் பின்னர் ***இணைய***மும் 2010களின் பின்னர் ***ஸ்மார்ட் கைபேசி***களும் தனிமனிதனின் அன்றாட வாழ்க்கையில் நெருக்கம் கொள்ளத்தொடங்கியதை நாம் அறிவோம். ஆனால் 2019இல் வந்த இந்தக் கொரோனாவானது இங்கு குறிப்பிடப்பட்டவற்றை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் சென்றுள்ளது. தனிமனிதனின் அன்றாட வாழ்க்கையிலே ***தவிர்க்கமுடியாத அத்தியாவசிய இடத்தை*** கொரோனாவானது கணினிக்கும், இணையத்துக்கும், ஸ்மார்ட் கைபேசிகளுக்கும் வழங்கியுள்ளது.

**எண்ணிம பயன்பாட்டின் ஆர்முடுகல் :**

கொரோனாவானது எண்ணிம பயன்பாட்டின் அத்தியாவசியத்தை ***ஆர்முடுகலாக்கியுள்ளது*** (Accelerated Digitization). இது சாதாரண எதிர்வுகூறலுக்கு அப்பாற்பட்ட ஆர்முடுகலாகும்.

மனித வாழ்க்கையிலே கணினி, இணையம், கைபேசி போன்ற எண்ணிம விடயங்கள் தற்போது பெற்றுக்கொண்டுள்ள தவிர்க்கமுடியாத அத்தியாவசிய இடமானது 2050களில் எத்தகைய விளைவுகளைத் தரும்? 2100களில் எத்தகைய விளைவுகளைத் தரும்? என்பவற்றை முறையாக எதிர்வுகூறமுடியாத நிலையிலே அறிவுலகம் நின்றுகொண்டுள்ளது.

கையினால் பணத்தினைத் தொட்டுப் புழங்கிய இறுதித் தலைமுறைகளாக நாம் அமைவோம் என பொருளாதார அறிஞர்கள் எதிர்வுகூறுகின்றனர். உலகத்திலே ஆங்காங்கு மூலைமுடுக்கிலே ஏதோ பரிசோதனை முயற்சியாக தற்போதுள்ள ***எண்ணிம பணமானது*** (Bitcoin - Digital Money) உலகத்தின் ஒரேயொரு தனித்த பண அடிப்படையாக அமைய வாய்ப்புள்ளது. தனித்தனியாக அமெரிக்க டொலர், இங்கிலாந்து பவுண்ட், இலங்கை ரூபாய் என்கிற தற்போதைய நாட்டுக்குரிய பணம் எனும் அடிப்படைகள் விரைவிலே மறைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சோழர் காலத்து வெள்ளி நாணயம், யாழ்ப்பாண ஆரிய சக்கரவர்த்தி காலத்து செப்பு நாணயம் என நாம் இன்று மார்தட்டிக் கொள்ளுவதுபோன்று 2300,2400 நூற்றாண்டுகளில் பிரதேச - தேசிய அடையாளங்களைக் குறித்து மார்தட்டிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படலாம்.

தற்பொழுதுள்ள கொரோனாவின் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள சமூக இடைவெளிப் பேணல் காரணமாக எதிர்காலத்திலே மின்வடிவ தமிழ் நூல்களின் வெளியீடுகள் அதி




**எண்ணிம பணம்** – Digital Currency

கரித்து அச்சுவடிவம்பெறும் நூல்களின் வெளியீடுகள் அற்றுப்போக வாய்ப்புண்டு. நூல் வெளியீட்டு விழாக்கள், அரங்கேற் றங்கள் என்பவற்றின் அடையாளங்கள் எதிர் காலத்திலே மறைந்துபோகலாம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடை பெற்றதாகக் கூறப்படும் சேக்கிழாரின் திருத்தொண்டர்புராண நூல் அரங்கேற்றத்தின் சிறப்பினை நாங்கள் வாசித்து அறிந் துள்ளோம். அவரை யானைமீது ஏற்றிச் சென்று அரங்கேற்றம் செய்துள்ளனராம். பல நூற்றாண்டுகளாக கடத்தப்பெற்றுவந்த இந்த பண்பாட்டு அம்சத்தை நாம் 1960களிலும் கண்டுள்ளோம். ஈழத்து பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எழுதிய கந்தபுராண தக்ஷ்ணகாண்ட உரை நூலினை யானைமீது கொண்டுவந்து அரங்கேற்றம் செய்த நிகழ் வினை கண்களால் கண்டோர் இன்னமும் எம்மத்தியிலே வாழ்க்கின்றனர்.

ஆனால் இதுபோன்ற கந்தபுராணத்துக்கு உரை நூல்கள் இனிமேல் எழுதப்பெறுமா? அதுவும் பல நூற்றுக்கணக்கான பக்கங்களில் எழுதப்பெறுமா? அவை அச்சுவாகனம் ஏறுமா? எத்தனை பிரதிகள் அச்சுவாகனம் ஏறும்? அரங்கேற்றம் நடைபெறுமா? வெளியீட்டு விழாக்களுக்கு மக்கள் வருவார்களா? கந்த புராணம் தெரிந்தோர் வருவார்களா? அரங் கேற்றத்துக்கு யானை வருமா?

போன்ற கேள்விகள் மாத்திரமே கோவை யாக வருகின்றன... விடைகளை பொறுத் திருந்துதான் அறியவேண்டியுள்ளது.

## எதிர்மறையான தாக்கங்கள் :

அதிகப்படியாகக் கணினித் திரைகளைத் தொடர்ந்து பார்ப்பதால் மனிதக் கண்களுக்கு என்ன நடைபெறும்? எமது கண்கள் இத்தகை கணினித் திரைகளின் ஒளிகளையும் குறுகிய கைபேசித் திரைகளையும் மணித்தியாலக் கணக்காகத் தொடர்ந்து பார்க்கும் வல்லமை கொண்டவையா? இவ்வாறு தொடர்ந்து பார்ப் பதால் எதிர்வரும் 10-20 ஆண்டுகளின் பின்னர் எமது விழிகளுக்கு எத்தகைய தாக்கங்கள் ஏற்படும்?

கைபேசிகளை நாம் அனைத்து நேரமும் எம்முடன் வைத்துள்ளமே.. அவற்றுக்கு வரு கின்ற மின்காந்த அலைகள் எமது உடலை ஊடறுத்துச் செல்கின்றனவே.. தொடர்ந்து அவ்வாறு மின்காந்த அலைகள் எமது உடலை ஊடறுப்பதால் எமது உடலுக்கு எதிர்வரும் 10-20 ஆண்டுகளின் பின்னர் என்ன நடைபெறக் கூடும்?

அதிகாலையிலே நாம் எழுந்தவுடன் பேஸ்புக், வாட்ஸ்அப் என்பவற்றைப் பார்க்க முடியாமல் இருக்கமுடியாதுள்ளதே. பேஸ் புக்கில் எமக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு லைக்கும் (Like) எமது உடலிலே டோபமின் (Dopamine) என்கிற ஹோர்மோனைப் **போதை** யாகத் தூண்டிக்கொண்டுள்ளதே... இவ்வாறு டோபமின் ஹோர்மோனின் போதை எத்த கைய தாக்கத்தை எமது மனதிலே ஏற்படுத்தி வருகின்றன. எதிர்வரும் 10-20 ஆண்டுகளின் பின்னர் எமது மனதளவிலே இந்த டோபமின் ஹோர்மோன் ஏற்படுத்தக்கூடிய நிரந்தரத் தாக் கங்கள் எத்தகையதாக அமையும்?

இவ்வாறு தொடரும் கேள்விகளுக்கு எந்தவொரு அறிஞர்களாலும் ஆதாரபூர்வமாக விடையளிக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூறலாம்.

காரணம், கணினி, இணையம், ஸ்மார்ட் கைபேசி என்பன எம்மிடையே 1990கள் தொடங்கி முப்பது வருடங்களுக்கு உள்ளதாக வந்து சேர்ந்தவை. இவற்றைப் பயன்படுத்திய மனிதர்களுக்கு ஏற்பட்ட விளைவுகளையும் - தாக்கங்களையும் ஆவணப்படுத்துமளவுக்கு இன்னமும் ஒருதலைமுறையேனும் முழுமை யாகக் கடந்துபோகவில்லை. ஆக, தரவுகளை நிலைநிறுத்தி எத்தகைய தாக்கங்கள் நடை பெறப் போகின்றன என ஆதாரபூர்வமாகக் கூறமுடியாதுள்ளது.

ஆனால், இவையெல்லாம் ஏதோவொரு ***எதிர்மறையான தாக்கங்களைத்*** தனிமனித, குடும்ப, சமூக, பொருளாதார, மொழி, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களில் ஏற்படுத்தியுள் ளன, ஏற்படுத்துகின்றன, ஏற்படுத்தப் போகின் றன என ஒட்டுமொத்தமாகப் பலரின் உள் ளுணர்வுகளும் கூறிக்கொண்டுள்ளன.

இவையெல்லாம் கொரோனா தற்பொழுது ஏற்படுத்தியுள்ள அத்தியாவசிய எண்ணிம பயன்பாட்டின் ***ஆர்முடுகலால் விரைந்து*** நிகழக் கூடியவை.

**அதிகரிக்கும் சைபர் குற்றங்கள்**
(Cyber attacks) **:**

கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் போன்று சைபர் குற்றங்களும் கண் ணுக்குப் புலப்படாதவை. கடந்த சில ஆண்டு களாகச் சைபர் குற்றங்கள் பாரியளவில் பெருகிவருகின்றன.

கொரோனா வருவதற்கு முன்னர் 2021ஆம் ஆண்டளவில் உலகம் ஏறத்தாழ 6 டிரில் லியன் அமெரிக்க டொலர்களை சைபர் குற்றங்களால் செலவழிக்கவேண்டிவரும் என எதிர்வுகூறப்பெற்றது. இந்தத் தொகையின் பெறுமதியைப் புரிந்துகொள்ளுவதற்கு இலங் கையின் கடந்த ஆண்டு மொத்த ஜி.டி.பி. (GDP) ஏறத்தாழ 90 மில்லியன் மாத்திரமே என்பதுடன் ஒப்பிட்டு நோக்கினால் புரியும்.

ஆனால் கொரோனாவின் தாக்கத்தினால் சைபர் குற்றங்களுக்குச் செலவழிக்கவேண்டிய தொகையானது இன்னும் பல மடங்குகளால் அதிகரிக்கும் எனத் துணிந்து கூறலாம்.

இலங்கை, இந்தியா, தென்னாசிய நாடுகள் உட்பட உலகளாவிய ரீதியிலே கொரோனா தாக்கம் ஏற்படத் தொடங்கியதிலிருந்து எதிர் பார்க்காதளவு சைபர் குற்றங்களும் பெருகி யுள்ளன.

*Barracuda Networks* என்கிற நிறுவனத்தின் தரவுகளின்படி 2020 பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது 2020 ஏப்ரல் மாதத்திலே உலக ளாவிய ரீதியிலே மின்னஞ்சலின் வாயிலாக அதிகம் பரவும் பிஸ்ஸிங் (Phishing) சைபர் தாக்குதல்கள் மாத்திரம் 600 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக கணிக்கப்பெற்றுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக நிறுவனங்களை மாத்திரமே குறிவைத்துத் தாக்கிய சைபர் குற்றங்கள், தற்பொழுது கொரோனா ஏற் படுத்தியுள்ள நிலையின் காரணமாக ***தனி மனி தனை நோக்கிய சைபர் குற்றங்களாகவும் பெருகத் தொடங்கியுள்ளன***.

கொரோனாவானது எண்ணிம பயன்பாட் டின் அத்தியாவசியத்தை ஆர்முடுகலாக்கி விட்டுள்ளதால் சைபர் குற்றங்களும் ஆர்முடு கலாகிப் பெருகுகின்றன.


***கண்ணுக்குத் தெரியாத கொரோனா அரக்கன், கண்ணுக்குத் தெரியாத சைபர் குற்றங்கள் என்னும் இராட்சதனை முடுக்கி விட்டுள்ளான்.***

ஒவ்வொருவரும் தமது கல்வி, தொழில், வங்கி கணக்குவழக்கு, உறவினர்களின் தொடர்பாடல் எனத் தமது அன்றாட தேவைகள் பலவற்றுக்கும் கணினி, இணை யம், ஸ்மார்ட் கைபேசி ஆகியவற்றை அதிகள வில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். ஆனால், இந்தப் பயன்பாடு முறையாக உள்வாங்கப்பெற்றது அல்ல. எமது தென் னாசியக் கல்வியானது இன்னமும் முறை யாக இணையத்தின் தாக்கங்கங்களை மாண வர்களுக்கோ சமூகத்துக்கு அறிமுகப்படுத்த வில்லை.

**உதாரணங்கள் :**

ஓர் உதாரணத்தை நோக்குவோம்.

ஒரு 20 வயதுத் தமிழ்ப் பெண் முதன் முறையாக விமானத்தில் செல்கின்றாள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவளுக்கு அருகிலே ஓர் ஆஜானபாகுவான மனிதன் அமர்ந்துள்ளான். அவனின் தலைமுடி நன்றாக




**கொரோனாவின் தாக்கத்தினால் அதிகரித்துவரும் சைபர் தாக்குதல்கள். இணையத்தளங்களில் இருந்து பெறப்பட்ட செய்திகளில் சில.**




வளர்ந்து குடுமி கட்டப்பட்டுள்ளது. காதுகளிலும் மூக்கிலும் தோடுகள் குத்தப்பெற்றுள்ளன. கரங்களிலும் புயங்களிலும் பற்பல புரியாத உருவங்கள் பச்சை குத்தப்பெற்றுள்ளன.

அவ்விருவரும் அப்பொழுதுதான் முதன் முறையாக விமானத்தில் சந்திக்கின்றனர். அந்த அறிமுகமற்ற மனிதன் பின்வரும் கேள்விகளை அப்பெண்ணிடம் கேட்பதாக வைத்துக்கொள்வோம்.

உன் பெயர் என்ன?
உன் பிறந்த நாளை எனக்குக் கூறு
உன் பிறந்த மாதம் - வருடம் எவை?
நீ வசிக்கின்ற முகவரி யாது?
உன்னுடைய அம்மாவின் பெயர் யாது?
உன்னுடைய தொலைபேசி எண்ணினை எனக்குக் கூறு?

இத்தகைய கேள்விகளை அறிமுகமற்ற அந்நிய மனிதனொருவன் அப்பெண்ணிடம் கேட்கும்போது அப்பெண்ணுடைய உணர்வோட்டத்தை எண்ணிப்பாருங்கள்.

அப்பெண் தன்னுடைய பெயரைக்கூட அவனிடம் கூறத் தயங்குவாள். ஏன் பேச்சு கொடுக்கவே யோசிப்பாள். தொலைபேசி எண்ணினை நிச்சயமாக அறிமுகம் இல்லாத அவனிடம் கேட்டவுடனேயே கொடுக்க மாட்டாள் எனலாம்.

இந்தப் புரிதலுடன் நாம் இணையத்துக்குச் செல்லுவோம். இணையத்திலே பல இடங்களில் எமது பெயர், பிறந்த நாள், தொலைபேசி போன்ற பல ***தனிப்பட்ட விபரங்களை*** தெரியாத - அறிமுகமற்ற மனிதர்களிடம் (சேவர்கள் - Servers) எவ்வாறு தயங்காமல் கொடுக்கின்றோம்?

சிலர், தமது கடன் அட்டை விபரங்களைக்கூட தயங்காமல் முன்பின் அறிமுகம் இல்லா, தெரியாத இணையத்தளங்களுக்குக் கொடுப்பதற்குத் தயக்கம் காட்டுவதில்லை. ஆனால் நடை பாதையிலே யாரும் அவர்களை நிறுத்தி கடன் அட்டையின் விபரத்தைக் கேட்டால் விபரங்களைக் கொடுக்க மாட்டார்கள்.

நிஜவாழ்விலே தனிப்பட்ட விபரங்களை அந்நிய மனிதனிடம் கொடுக்கத் தயங்குவோர் அறிமுகமற்ற இணையத் தளங்களிலே விபரங்களைக் கொடுக்கத் தயங்குவதில்லை. இணையத்தில் கொடுக்கப்பெறுகின்ற விபரங்களும் ஏற்றப்பெறுகின்ற படங்களும் எந்தெந்த இடங்களுக்கு பரிமாறப்பெறுகின்றன என்பதை விபரங்களைக் கொடுப்பவர்கள் அறிவதில்லை.

இதற்குக் காரணம் கணினி, இணையம், ஸ்மார்ட் கைபேசி, எண்ணிம பயன்பாடு என்பன முறையாக தென்னாசிய மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. எமது கல்வியானது இவற்றை இன்னமும் படிமுறையாக அறிமுகப்படுத்தவில்லை.

இன்னுமொரு உதாரணத்தை நோக்குவோம். ஒருவன் காலையில் எழுந்து எந்த பாதையிலே வேலைக்குச் செல்கின்றான், எவ்வளவு நேரம் வேலைத்தளத்திலே இருக்கின்றான், எந்தக் கடையிலே உணவு வாங்குகின்றான், எந்தப் படமாளிகைக்கு படம் பார்க்கப் போகின்றான், எந்த மதுக்கடையிலே மது வாங்குகின்றான்... போன்ற அவனது அனைத்து இயக்கங்களையும் பிற மனிதன் ஒருவன் அங்குலம் அங்குலமாகப் பதிவுசெய்கின்றான்

என்பதை எண்ணிப் பார்க்கவும். இந்நிலையிலே கண்காணிக்கப்படுபவன் மிகுந்த மனவுளைச் சலுக்கும் பதகளிப்பு நிலைக்கும் உட்படுவான்.

தற்பொழுது ஸ்மார்ட் கைபேசி வைத் துள்ளவர்களின் 90சதவீதமானவர்களின் நிலை மையும் இதுதான். அவர்களின் இயக்கங்கள் அங்குலம் அங்குலமாக கூகுள் போன்ற நிறு வனங்களால் பதியப்பெறுகின்றன.

இதனைப்பற்றி அறிந்தவர்களில் பலரும் கூட அனைவருக்கும்தானே இந்த நிலைமை.... அனைவரும்தானே இணையத்தை இவ்வாறு பயன்படுத்துகின்றார்கள்.. நாங்கள் பயன் படுத்தினால் எமக்கு மாத்திரம் என்ன நடக்கப் போகின்றது என்று தம்மைத் தாமே தேற்றிக் கொண்டு தாண்டிச் சென்றவண்ணம் உள்ளனர்.

கூகிள், பேஸ்புக், வாட்ஸ்அப் போன்ற மென்பொருட்கள் பெற்றுக்கொள்ளுகின்ற மற்றும் சேகரித்துக்கொள்கின்ற விபரங்கள் அந்நிறுவனங்களில் மாத்திரம் மட்டுப்படுத்தி இருக்கும் என்று கூறமுடியாது. அந்நிறு வனங்கள் தமது வேலைகளை பகுதிபகுதி யாகக் பிரித்து பிற சிறுசிறு நிறுவனங்களுக்கு (3rd Party) வழங்கும். அச்சிறுநிறுவனங்கள் இலகுவில் தவறுகளைச் செய்ய பல சந்தர்ப் பங்கள் உள்ளன.

2018ஆம் ஆண்டில் பேஸ்புக் மற்றும் 2019ஆம் ஆண்டு கூகிள் நிறுவனங்கள் தரவுகளை முறையாக வைத்துக் கொள்ளவில்லை என்ப தற்காக அந்நிறுவனங்கள் உலகளாவிய பிரச் சினைகளுக்கு முகம் கொடுத்ததை பலர் அறிந்திருக்கலாம்.

தற்பொழுது சைபர் குற்றங்கள் என்பது மிகவும் இலாபத்தை ஈட்டித் தருகின்ற ஒரு தொழிற்துறையாக மாறியுள்ளது. பல்லாயிரக் கணக்கான ஹக்கர்கள் (Hackers) தமது அன்றாடத் தொழிலாக சைபர் குற்றங்கள் செய் கின்றனர். சைபர் குற்றங்களைச் செய்வதைத் தொழிலாக செய்யும் பல நிறுவனங்கள் உள்ளன. இதனை ஓர் உதாரணத்தின் மூலம் விளங்கிக்கொள்ள முயற்சி செய்வோம்.

வாகனங்களை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனம் இருப்பதாக எண்ணிக் கொள்வோம். இந்த நிறுவனத்தின் போட்டி நிறுவனம் ஒன்றி னால் முன்னர் குறிப்பிட்ட நிறுவனத்தை முறையாக தொழிலிலே வெற்றிகொள்ள முடியவில்லை. ஆக, பின்னர் குறிப்பிட்ட போட்டி நிறுவனமானது சைபர் குற்றங்களைச் செய்வதற்கு பல ஹக்கர்களை அமர்த்துவர். அந்த ஹக்கர்கள் முன்னர் குறிப்பிட்ட நிறுவனத்தின் கணினிகளை தாக்கி அந்த நிறுவனத்தின் முக்கிய தரவுகளைத் திருடுவர் (Data Theft), அல்லது அவர்களின் கணினிகளை வேலை செய்யமுடியாத வகையிலே செய்வர் (Denial of Service Attack), அல்லது அவர்களின் இணையத்தளத்தைத் தாக்கி இணையத்தள மானது ஊடுருவப்பெற்றதாக மாற்றிவிடு வர் (Repudiation Attack). இதனால் முன்னர் குறிப்பிட்ட நிறுவனம் பாரிய தாக்கத்துக்கு உட்படும். இந்தத் தாக்கத்தை போட்டி நிறுவன மானது தனது வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளும்.

நிறுவனங்களைத் தாக்குவதைவிட தனி மனிதர்களைத் தாக்குவது மிகச் சுலபமானது.

தனிமனிதர்களின் கணினிகளை ஊடுருவு தல், தனிமனிதர்களின் கணினிகளிலுள்ள தரவு களை - படங்களைத் திருடிப் பின்னர் அவற் றைக் காட்டி பணம்பறித்தல் போன்றன மிகச் சாதாரணமாக நடைபெறுகின்றன.

ஒருவருக்குத் தெரியாமல் அவருடைய கணினியிலுள்ள கமெராவை தொடக்கி (On செய்து) ஹக்கர்களால் படம் எடுக்கமுடியும் - அவர்களைக் கண்காணிக்க முடியும்.

**நிறைவாக :**

இந்நிலைமை காரணமாக நாம் கணினி, இணையம், மற்றும் கைபேசியின் பயன் பாடுகளை நிறுத்திவிடமுடியாது என்பதும் உண்மை. அது சாத்தியமும் இல்லை. ஆனால் நாம் தேவையான பின்புல அறிவுடன் இவற்றை முறையாகப் பயன்படுத்தி பலனைப் பெறுதல்வேண்டும்.

எமது பாடசாலைகள், கல்விச்சாலைகள், தொழில் நிறுவனங்கள் போன்றவை முதல் சில நாட்களுக்கு கணினி - இணைய பயன் படுத்தல் அடிப்படைகளை அறிமுகப்படுத்தல் வேண்டும். இவையனைத்தும் தெரிந்திருக்கும் தானே என்ற எடுகோளை எடுத்தல் கூடாது.

உரிய பின்புலம் தெரிந்து, கணினி, இணைய, கைபேசி போன்றனவற்றின் அடிப் படைப் பாதுகாப்பு முறைகள் தெரிந்துபின்னர் அவற்றைப் பயன்படுத்தி பயன்பெறுதல் வேண்டும்.

❍❍❍

# தாய் மனதை மாற்றிய கொரோனா



சிறுகதை

பொலிகை ஜெயா (சுவிஸ்)



அவள் ஒரு சுவிஸ் நாட்டுப் பிரசை. புகைவண்டியில் இருவர் அமரும் இருக்கையில் அமர்ந்தவண்ணம், தனது இரு கண்களையும் மூடியவாறு ஏதோ சிந்தனை யோட்டத்துக்குள் தன்னை உட்புகுத்தியவாறு பயணித்தாள். அவள் பயணமான புகை வண்டியோ பயணிகளின் பார்வைக்கு இதமான விருந்தளிக்கும் வண்ணம் அழகிய மலைகள், காடுகள், பூந்தோட்டங்கள், அதியுயர்ந்த கட்டிடங்கள், சாலைகள் என்பனவற்றை கடந்து வளைந்து, நெளிந்து பீல் (Biel) என்ற தரிப்பிடத்தில் தரித்து நின்றது.

அதிக பிரயாணிகள் தமது அலுவல்களுக்கும், பள்ளிமாணவர்கள் தமது பள்ளிகளுக்கும் செல்வதற்காக புகைவண்டியைவிட்டு இறங்கிச் சென்றார்கள். அவர்கள் எல்லோருமே முகக் கவசம் அணிந்திருந்தார்கள். அதேநேரம் பயணிகள் இறங்கும்வரை புகைவண்டியில் ஏறிப்புறப்பட இருந்தவர்கள் மிக ஒழுங்காக புகையிரத மேடையில் சமூக இடைவெளி பேணிக் காத்திருந்தனர். புகையிரதம் நகர ஆரம்பித்ததும், உள்ளே வந்த ஒரு வேற்று நாட்டுப் பெண்மணி, அந்த சுவிஸ்நாட்டு பெண் அமர்ந்திருந்த ஆசனத்தின்முன் இருக்கை காலியாக இருந்ததை அவதானித்துவிட்டு "காலியாக இருந்த இருக்கையில் நான் அமரலாமா? அம்மா" எனக் கேட்டாள். சுவிஸ் நாட்டில் புகையிரதத்தில் காலியான இருக்கையின் முன்னால் இருப்பவரின் அனுமதி கேட்டுப்பெற்ற பின்பே அமருவது சுவிஸ் மக்களின் வழமை.

அந்த வேற்றுநாட்டுப் பெண்ணின் குரல் சுவிஸ் பெண்ணின் செவியில் ஒலித்ததும், அவள் தனது சிந்தனையோட்டத்தைக் கலைத்து மெதுவாக நிமிர்ந்து பார்த்தாள். பார்த்ததும் தன் நிலைமறந்து, கண்கள் இரண்டும் சிவந்திட, அழகிய வதனத்தில் கோபம் கொப்பளிக்க,

"நீ சீனாக்காரிதானே...?" என ஆவேசமாகவும், சிறிது உரக்கவும் கேட்டாள்.

இக்கேள்வியை சற்றும் எதிர்பாராத அந்த வேற்று நாட்டுப்பெண் ஒருகணம் திகைத்து சற்றுமுற்றும் தனது பார்வையைச் செலுத்தி விட்டு எதோ கூற முனைந்தபோது, அவளைப் பேச இடங்கொடாது தானே முந்திக்கொண்டு,

"நீங்கள் எல்லாம் ஏன் எமது அமைதியான நாட்டுக்கு வருகின்றீர்கள்? ஏன் எங்கள் வாழ்வியலில் குறுக்கிட்டு, எமது இனிமையான வாழ்வுக்கு கேடுசெய்து, தீமையும் விளைவிக்கின்றீர்கள்?" என பிரயாணிகள் மத்தியில் அவள் பொரிந்துதள்ளினாள்.

"அம்மா, நான் சீனாக்காரியல்ல. நான் ஒரு இந்தோனேசியப் பெண்" எனக் கூறியபோதும் அவள் ஆத்திரம் அடங்குவதாக இல்லை.

அந்த சுவிஸ் பெண்ணின் ஒரே மகளுக்கு உயிர்குடிக்கும் நோயான கொரோனா தொற்று ஏற்பட்டு உயிருக்காக போராடிக்கொண்டு இருக்கும் நிலையில், பேர்ண்இன்செல் (Bern Insel) வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறாள். இனிக்கும் வாழ்வு கசந்திடும்

நிலையைத் தொடும்போது மனித இயல் பாக்கங்களில் மாறுதல் ஏற்பட்டுவிடுகின்றன.

தனது ஒரேமகளின் உயிர்பிரியும் நேரத்தில் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இப்போது மகளுக்கு வயது பன்னிரண்டு. அவளைக் குழந்தைப் பருவத்தில் பாசத்தோடு மார்பில் அணைத்து பாலூட்டிய தருணங்கள், அவளது பிஞ்சுக் கரம் தனது மார்பிலே அளைந்து விளையாடிய மென்பரிச பூரிப்புகள், வீட்டிலே செய்த குறும்புகள் நினைவில் வந்தன. பாடசாலைவிட்டு வீடுதிரும்பியதும் தன்னைக் கட்டியணைத்து "எண்ட பாசமான மம்மி" (Ich liebe dich mammi) எனக்கூறி அழகிய இருபக்க சொக்கிலும் குழிவிழ சிரிப்பாள், கண்ணையும் சிமிட்டுவாள். பாசமான மகளின் குழந்தைப்பருவக் குறும்புகளை அசைபோட்டு பெற்றதாயின் உள்ளம் பதறுகிறது, இதயமோ பலமாகத் துடிக்கிறது, கண்களிலில் நீர் முட்டி வழிகிறது.

சீனாவிலிருந்தே உலகம் பூராகவும் கொரோனா வைரஸ் அதிவேகமாகப்பரவியது. அதற்கான மாற்று மருந்தும் இதுவரையில் இல்லாத நிலையில் பல உயிர்களை அது காவுகொண்டு வருகிறது. அதனாலேயே தனது ஒரே ஒரு செல்ல மகளுக்கும் கொறோனா தொற்று ஏற்பட்டது என்று நம்பிய அந்தத் தாயுள்ளம் சீனாக்காரரை வெறுக்கும் நிலைக் குத் தள்ளப்பட்டது.

இருவரும் பேர்ண்இன்செல் வைத்திய சாலையடியில் புகையிரதத்தை விட்டு இறங்கி வைத்தியசாலை நோக்கி நடந்து வாகனப் போக்குவரத்து, பாதசாரிகளுக்கு உதவிடும் சிவப்பு விளக்கு சமிக்கைக்கு நின்று, பின்னர் பச்சைவிளக்கு ஒளிர்ந்ததும் நடந்து நேராக லிப்ற் நோக்கிச் சென்று லிப்ற் வரும்வரை காத்திருந்தவேளையில்,

"நீ என்கூட லிப்ற்றில் வரவேண்டாம். மாடிப்படிகளால் ஏறிப்போ" என வெறுப்புடன் கூறினாள் அந்தத் தாய். அதைக்கேட்ட இந்தோனோஷியப் பெண்மணியும் மிக அமைதியாக மாடிப்படிகளில் ஏறிச்சென்றாள்.

சுவிஸ் பெண்மணி வைத்தியசாலை 'றிசெப்சன்' சென்று அங்கு கடமையிலிருந்த பெண்ணிடம் "கொரோனா நோயாளிகள் வாட்டில் இருக்கும் எனது மகள் நற்றாசா எப்படி இருக்கிறாள்.? அவளை நான் ஒருதரம் பார்க்க தயவுசெய்து அனுமதியுங்கள்" என அழுதவாறு மன்றாடினாள்.

அவளது நிலையைப் பார்த்த அந்த றிசெப்சன் பெண்ணுக்கும் கண்கள் கலங்கின. கொறோனா தொற்று நோய்காரர்களை எவருமே பாதுகாப்பு காரணத்தை முன்னிட்டு பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை. இறந்தாலும் உடம்பு முழுவதும் கொரோனா வைரஸை எதிர்க்கும் மருந்து அடித்து, பாதுகாப்பு பொலித்தீன் உறைகள் மூலம் உடல் பூராக சுற்றியே உறவினர்களிடம் கையளிப்பார்கள்.

அந்த றிசெப்சன் பெண் நற்றாசாவின் பைலை எடுத்து அவளது தற்போதைய உடல்நிலை பற்றிய டாக்டரின் குறிப்பைப் பார்த்து தனது மண்ணிறமான புருவத்தை உயர்த்தினாள். என்ன ஆச்சரியம்! 'நற்றாசா ஆபத்தான கட்டத்தை தாண்டி பூரண சுகநிலைக்கு வந்துவிட்டாள். அவள் வீடு திரும்பலாம், ஆனால் இன்னும் பத்து நாட்கள் வீட்டிலே தனிமையில் இருப்பது மிகமிக அவசியம்'.

"அம்மா, நற்றாசா பூரணநலம். அவள் இப்போது கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறும் வார்ட்டில் இல்லை. குணமடைந்தோர் தங்கும் பதினைந்தாம் நம்பர் அறையில் இருக்கிறாள். நீங்கள் உங்கள் மகளைப் போய்ப் பார்க்கலாம். நீங்கள் வந்திருப்பதாக உங்களது மகளுக்கு வைத்தியம் செய்த டாக்டருக்குத் தெரியப்படுத்துகிறேன். டாக்டர் அங்குவந்து உங்களைச் சந்திப்பார். டாக்டரின் அனுமதியோடு உங்கள் மகளை வீட்டுக்கும் அழைத்துச் செல்லலாம்" எனக் கூறியபோது, தாயோ அவளுக்கு நன்றி சொல்ல மறந்து மகளின் றூம் நோக்கி ஓடினாள். மகள் இருக்கும் அறைக் கதவை அவசரம் அவசரமாகத் திறந்து மகளைக் கண்டதும்



**"நீ சீனாக்காரிதானே...?"**

**"நீங்கள் எல்லாம் ஏன் எமது அமைதியான நாட்டுக்கு வருகின்றீர்கள்? ஏன் எங்கள் வாழ்வியலில் குறுக்கிட்டு, எமது இனிமையான வாழ்வுக்கு கேடுசெய்து, தீமையும் விளைவிக்கின்றீர்கள்?" என பிரயாணிகள் மத்தியில் அவள் பொறிந்துதள்ளினாள்.**

ஓடிப்போய் அவளை கட்டியணைத்து, உச்சி முகர்ந்து, உடலெல்லாம் தடவியபடி புளகாங்கிதம் கொண்டாள்.

சிறிது நேரத்தில் கதவைத் தட்டிய ஒரு பெண் டாக்டர் புன்சிரிப்பை உதிர்த்தபடி உள்நுழைந்தாள். சில மணித்துளிகள் நற்றாசாவின் தாய் அந்த டாக்டரைப் பார்த்தபடி எதுவும் பேசாது திகைத்து நின்றாள்.

மௌனத்தைக் கலைத்த நற்றாசா வணக்கம் கூறி தனது தாயை டாக்டருக்கு அறிமுகம் செய்தாள். "மம்மி, இந்த டொக்டராலேயே நான் இன்று இந்தக் கொடிய கொரானா நோயிலிருந்து தப்பிப் பிழைத்து உயிரோடு இருக்கிறேன். இவவின் கடமை உணர்வு, நோயாளிகள்மேல் காட்டும் பாசம், அரவணைப்பு, தெம்பூட்டல் பற்றி இங்குள்ள எல்லோருமே பேசிக்கொள்கிறார்கள். அவவுக்கு நான் ஒரு வேற்றுநாட்டு பெண்ணாக இருந்த போதும், தனது பிள்ளைபோலவே என்னை அன்பாகக் கவனித்து வைத்தியம் பார்த்து என்னை சுகப்படுத்தியுள்ளா மம்மி. இவ எங்கள் இருவருக்குமல்ல இந்த கொரோனா நோய்காரர் அனைவருக்குமே தெய்வம்"

மகள் சொல்வதைக் கேட்டதும், ஏலவே தான் அந்தப் பெண்ணை புகைவண்டிக்குள்ளும், லிப்ற் ஏறும் இடத்திலும் பலர் முன்னிலையில் சீனாக்காரி என அவமானப்படுத்தியபோதும் அப்பெண் எதுவும் பேசாது மௌனமாக நின்றதை நினைத்து வெட்கித் தலைகுனிந்து அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள்.

"மம்மி, இவரின் கணவருக்கும் கொரோனாதான். அவர் இன்னும் மூன்று நாட்களுக்குள் இறந்துவிடுவாராம். சூறிச் (Zurich) வைத்தியசாலையில் இருக்கிறார் என இங்குள்ள தாதிமார் பேசிக்கொண்டார்கள். அப்படியான சோகத்தை தனது மனதில் தாங்கிக்கொண்டு எனக்கு வைத்தியம் பார்த்து என்னைக் காப்பாற்றியுள்ளார்" எனக் கூறியபோது! நற்றாசாவின் கண்கள் பனித்தன.

இதைக் கேட்ட டாக்டர் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது.

அதனைக் கண்ணுற்ற நற்றாசாவின் தாய், சுவிஸ் பண்பாட்டுக்கமைய அந்த டாக்டரைக் கட்டியணைத்து ஆறுதல்கூற எண்ணிய போதும் பேணவேண்டிய சமூக இடைவெளி நினைவில் வரவே, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விம்மிவிம்மி அழத் தொடங்கினாள்.

○○○

# சர்வதேசத்தில் கொரானா

கனகாலத்துக்கு முன்பு "கொலறா" அல்லது
**கோதாரி** என்றொரு தொற்று வந்தது - அதுவே
வயிற்றோட்டம்
பல்லாயிரவரைப் பலியெடுத்தது.
பிறகு -
**மலேரியா** காய்ச்சல் வந்தது, மருந்து
கண்டுபிடிக்க முன்
மரணித்தவர் பலப்பலர்
அதன்பின்
**அம்மை** சின்னம்மை என
அனல்காய் கொப்புளங்கள்
வெப்பம் தாங்காது வாழைமடலில்
படுத்தவர்கள் வேப்பம் பட்டைக்
கசாயம் குடித்தவர்கள்
ஏழாம்நாள் படியும் எனநம்பி
அம்மனுக்கு நேத்திவைத்தவர்கள்
பலனின்றிப் பரலோகம் போனார்கள்
அடுத்து -
**டெங்கு** வந்தது
அங்குமிங்கும் பாய்ந்து மனிதரை
கொன்றொழித்தது
குப்பையும் கொசுவுமே காரணம்
என்றது. கொரானா வந்ததும்
ஓய்வெடுத்தது.
நேற்று -
**கொரானா** என்றொரு
கொல்லி வந்தது என்பிறப்பிடம்
சீனா என்றது
கோடிக்கு மேலும் மக்கள் வாழும்
நாட்டை விட்டு
ஏழை எம்மிடம் வந்ததேன்
சொல் எனக் கேட்டேன்
பாம்பும் பல்லியும் தவளையும் சீனர்
சுவைப்பதால் நீ பிறந்தாயல்லவா?
எந்த இறைச்சியில் கொரானா கிருமி
உண்டென ஆராய்ந்தாயா?
சொல் உடன் என்றேன்.
நான் இப்போ சீனாவில் இல்லை
சர்வதேசத்தில் உள்ளேன்
என அது சொல்லி அழுதது.



**கண்ணன்**
(தென்மட்டுவில்)



# 21ஆம் நூற்றாண்டு உலகப்போர் – ஒரு கிருமிக்கு எதிராக!



ஹரிணி ராம்சங்கர்
(தில்லி, இந்தியா)

**1) எங்கு துவங்கியது?**

*COVID - 19* கொரோனா வைரஸ் எனப் பெயரிடப்பட்ட கொடிய கொடூரமான வைரஸ் சீனா நாட்டின் ஊகான் மாநிலத்தில் துவங்கியதாக உலகநாடுகள் குற்றம் சாட்டப்பட்டு குறிப்பாக, அமெரிக்காவால் திரும்பத் திரும்பச் சொல்லப்படுவதால் சீனாவில் இருந்துதான் வந்தது என்பதை உலக நாடுகள் ஏற்கின்றன. ஆனால் சீனாவோ தனக்கு சம்மந்தம் இல்லை என வாதிடுகிறது. இந்தப் பணக்கார வல்லரசு நாடுகளின் சண்டைகளாலும் அங்கிருந்து பறந்தோ? பரவியோ? நம் நாட்டிற்கு வந்து அப்பாவி ஏழை மக்களையும் கூலித்தொழிலாளர்களையும் அல்லோலப்பட வைக்கிறது.

**2) ஏன் மனிதர்களுக்கு மட்டும் எளிதில் ?**

இந்தக் கொடிய வைரஸ் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டது என உலகநாடுகளால் நம்பப்படுவதால் என்னவோ இது பெரும்பாலும் மனித இனத்தை மட்டுமே தாக்கிக் கொல்கிறது.

**3) என்ன மருந்து?**

ஒவ்வொரு நாடும் அந்த அந்த நாட்டு மக்களைப் பாதுகாக்க அவர்களது அரசியல் அமைப்பு சொல்கிறது. உலக நாடுகள் முழு முயற்சியில் தங்கள் மக்களின் உயிர்களைக் காக்க மருந்து கண்டு பிடிக்கத் தேவையானவற்றை தொய்வின்றிச் செய்கிறது. ஆனால் ஆங்கில மருத்துவம் பெரிதா? சித்தமருத்துவம் பெரிதா? என்ற சண்டையும், சர்ச்சைகளும் போய்க் கொண்டுதான் இருக்கின்றன. இஸ்ரேல், இத்தாலி போன்ற நாடுகள் மருந்து கண்டுபிடித்துவிட்டதாகக் கூறுகிறது. ஆனால் இன்றுவரை முடிவு எட்டப்படவில்லை. உலக சுகாதாரமையமும் நம் வள்ளலார் சொன்னதைப் போல் 'உணவே மருந்து' என்பதையும் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளும்படியும் சொல்கிறது. ஆனால் கொரோனாவோ ஏ.சி. யில் இருப்பவரையும் வெயிலில் வேலை செய்யும் ஏழைகளையும் ஒன்றும் அறியா பச்சிளம் குழந்தைகளையும் பாரபட்சம் இன்றி தாக்கிக் கொல்கிறது.

**4) எவ்வளவு காலம் ?**

*Covid - 19 - 2019*இல் வந்ததா? *2020*இல் ஜனவரியில் தொடங்கி ஒவ்வொரு மாதமும் மின்னல் வேகத்தில் பரவி உலக நாடுகளை அச்சுறுத்தும் இந்தக் கொரோனா எவ்வளவு காலம் இருக்கும் என்பதை யாராலும் உறுதி படச் சொல்ல முடியவில்லை.

**5) என்ன பாவம் செய்தோம்**

இப்படி உலக மக்களைக் கேள்விக்குறி யாக்கி வாழ்வாதாரத்தை இழக்கச்செய்து பொருளாதாரத்தை படுபாதாளத்தில் தள்ளி இந்த கொரோனா ஏன் நம்மைத் தண்டிக் கிறது. நாம் என்ன பாவம் செய்தோம் என எண்ணுபவர்கள் மிகக் குறைவே. தங்கள் பாவங்களைக் கழுவ, உதவிகள் செய்பவர்களும் மிகக்குறைவே. பாவம், புண்ணியம் என்ற விவாதங்களை விட்டுவிட்டு பாதுகாப்பை மட்டுமே பார்த்துக்கொண்டால் பரவாமல் தடுக்கலாம்.

**6) எல்லாம் அவன் செயலா?**

தெய்வ நம்பிக்கைகள், அறிவியல் ஆராய்ச்சிகள், ஜோதிடங்கள் இவற்றிற்கு எல்லாம் தண்ணிகாட்டும் இந்த கொரோனா கோவில்களையும், வழிபாட்டுத் தலங்களையும் மூடவைத்துவிட்டது. யார் செயல்? எங்கிருந்து வந்தது? எவ்வளவு காலம்? என்ன பாவம் செய்தோம்? என்பதைப் பற்றி எல்லாம் ஆராயாமல் முடிந்தவரை இல்லாதவர்களுக்கு உதவிசெய்து, கண்டிப்பாக பாதுகாப்புநலன் கருதி, பரவாமல் தடுத்து விழிப்புணர்வுடன் இருந்து இந்த கிருமிக்கு எதிரான போராட் டத்தை நம்பிக்கையாலும், ஒற்றுமையாலும் வெல்வதே சரியான அணுகுமுறையாகும்.

○○○

# வெளிச்சக் கூடு

சிறுகதை



ஏறக்குறைய நாற்பது, நாற்பத்தைந்து நாட்களைக் கடந்து அவன் வீட்டை விட்டுப் புறப்படுகின்றான். பள்ளியின் திடீர் விடுமுறையை அரசு அறிவித்ததன் பின்னரான அவனது முதற்புறப்பாடு இது.

அவன் நடையில் சற்றுத் தளர்வு இருந்தாலும் ஏதோவொரு ஒளிவட்டம் தென்பட்டது.

வழக்கம்போல் அவனது தனிப்பட்ட தேவைகளுக்கும் பயன்படும் பள்ளிக்காற் சட்டையே இன்றும் கைகொடுத்தது. பொத்தான் விட்டுவிடுதலையாகிப் புறப்பட்டதால் அம்மாவின் சட்டைப்பின் காற்சட்டையின் இருமுனைகளையும் இறுக்கிப் பிணைத்திருந்தது.

ஒருவேளை.............

அத்துமீறி நுழையும் பசியின் ஆக்கிரமிப்புக்கான அனுமதி மறுப்பாகக்கூட வயிற்றுக் கூடு இறுகக்கட்டப்பட்டிருக்கலாம்.

ஆறு ஐந்துக்கள் எத்தனை நாட்கள்தான் கஞ்சியும் சோறும் சம்பலுமாக ஒரு வேளை உணவுடன் காலத்தைக் கழிப்பது?

சுகாதாரத்துறையின் பணிப்புரையின் பேரில் அவனது முகக்கவசமும் மூக்கையும் வாயையும் பாதுகாத்தது. அவன் வரையில் அது எதையும் உண்ண எதிர்பார்க்காதே என வாயைக் கட்டிப் போட்டதாகவே தோன்றிற்று.

இரண்டு கைகளிலும் எட்டுக் கூடுகள்.

காலிவீதி நோக்கி அவன் கால்கள் புறப்பட்டன. அவன் வியாபாரியாகிவிட்டான் குட்டி வியாபாரி.



கீதா கணேஷ்

புகையிரதத் தரிப்பிடத்தில் சிற்றுண்டி, இடியப்ப விற்பனை செய்யும் தாய்.

காலி வீதியில் கல்ஹிசைப் பேருந்து தரிப்பிடத்திற்கருகாமையிலுள்ள விருட்ச நிழலில் அரை உயிரோடு ஓடோடி வரும் பாதணிகளைச் சரிப்படுத்திப் புத்துயிர் கொடுப்பதால் குடும்ப வருமானத்தைச் சரிசெய்யும் தந்தை.

இன்று இந்த இரு 'தொழில் ஸ்தாபனங்களும்' மூடுவிழாக் கண்டிருப்பதால் இம்முறை அவனாகவே வழிதேட வேண்டிய சூழ்நிலை.

வாகன வெள்ளம் வற்றி வரண்டதால் கருந்தார் வீதி வானத்தோடு பேசிக் கொண்டிருந்தது.

நீண்டு படுத்திருக்கும் தண்டவாளமே அவர்களுக்கான எல்லைக்கோடு.

சொகுசு வாகனம்

தொடர்மாடி வீடுகள்

மின்னொளி அலங்காரம் என்ற வர்ண ஜாலமாகவே கொழும்பைப் பார்த்து மகிழ்பவர்கள் புகையிரதத்தில் பயணித்தாலொழிய கொழும்பின் உட்பக்கத்தைப் பார்க்கும் அவசியமோ அவசரமோ இல்லை.

இரத்மலானையிலிருந்து கோட்டைக்குப் போய்ச் சேர்வதற்கிடையில் சுதந்திரப் பறவைகளின் இறக்கைகளாய் விரியும் கையசைப்பு வாய் நிறைந்த வஞ்சகமற்ற சிரிப்பு காலையில் தோன்றும் படபடப்பு, அவசரம், அந்தரம், எல்லாவற்றையும் மூட்டை கட்டி அவர்களிடம் இறக்கிவிட்டு புதிய உற்சாகத்தோடு அலுவலகம் நுழைவதாய் தோன்றும்.

**அத்துமீறி நுழையும் பசியின் ஆக்கிரமிப்புக்கான அனுமதி மறுப்பாகக்கூட வயிற்றுக் கூடு இறுகக்கட்டப்பட்டிருக்கலாம். ஆறு ஜந்துக்கள் எத்தனை நாட்கள்தான் கஞ்சியும் சோறும் சம்பலுமாக ஒரு வேளை உணவுடன் காலத்தைக் கழிப்பது?**

புகையிரதத்தேரில் சொர்க்கத்திலிருந்து தம்மைக்காண வந்த தேவதைகளுக்கும் தேவர்களுக்கும் நன்றியறிவிப்பதாய் கையசைத்து வழியனுப்பும் சிறுசுகள்.

இப்படி மாறுபட்ட எண்ணக்கோலங்களில் நாட்கள் உற்பத்தியாகி உருண்டு கொண்டிருக்கும். ஆனால் கடந்த நாற்பது நாட்களுக்கும் மேல் எல்லோரையும் கட்டிப் போட்டு இயற்கை தன்பாட்டில் தனக்கான சுத்தப்படுத்தலை நடாத்துகிறது.

உணவும் மருந்துமே அத்தியவசியமாக அறிவித்த பின்பும் உணவுக்கு வழியற்றுத் தவிக்கும் எண்ணற்றவர்களில் இவனின் குடும்பம் எம்மாத்திரம்?

எல்லோரும் வீடுகளில் சமைத்ததால் அம்மாவின் சிற்றுண்டி விற்பனை தடையாகியது.

இளைப்பாறும் வீதியில் அவசரத்தில் அறுந்துபோகும் பாதணிகளின் பூச்சியம் நிலை.

ஒட்டுமொத்தத்தில் ஆறு ஜீவன்களும் வயிற்றைப்பூட்ட வழி தேடித்திரிந்தன.

கொடுக்கப்பட்ட நிவாரணங்கள் தீர்ந்து போய் நாளாகிவிட்டது.

அம்மா, அப்பா இணைந்து செய்த வர்ணக்கூடுகளில் இரண்டினை விற்றுவிட்ட மகிழ்ச்சி தொடர்ந்தும் நடக்கிறான்.

இந்தக்கூடுகளையும் விற்றுவிட்டால் எப்படியும் இரண்டு மூன்று வேளைக்குப் போதும்.

சிறுமரக்கறி வியாபாரத்திற்குக்கூட முதலிட வழியற்ற கையறு நிலை

இம்முறை நஸார் நானா வீட்டு நோன்புக் கஞ்சியும் அளவீடு செய்தே வழங்கப்படுகிறது.

வெசாக் தானங்களையும் எதிர்பார்த்துப் பயனில்லை.

எல்லா வழிகளும் பூட்டப்பட்டபின்.

வெளிச்சக் கூடு மட்டுமே அவனுக்குள் ஒளிர்ந்தது. ஆனால் எத்தனை பேர் வாங்கத் தயாராக இருக்கிறார்கள்? உலகமே இருளாகி இருக்கும் நிலையில் செயற்கைத்தனமான இந்த வெளிச்சக் கூடு.......

கைமேற் பலன் தருமா?

தண்டவாளத்தைக் கடந்த சொர்க்கத்தில் இருப்பவர்கள் வாங்குவார்கள் என்பதில் அவனுக்கு ஆட்சேபனையற்ற உறுதி இருந்தது.

“டக்......டக்....” பலமான கை தட்டல் ஓசை வானிலிருந்து ஒலித்தது.

வெண்ணிறப் பூச்சுப் பூசி பளிங்காகக் காட்சியளித்த தொடர்மாடி மாளிகை. கீழே சிறு பூச்சியாய் நின்று அண்ணாந்து பார்க்கிறான்.

மேலே........உச்சியில் யாரோ மினுமினுப்புத் தோலுடன் கையசைக்க.......

அந்தத்தேவனின் கீழிறங்கலுக்காய் காத்து நிற்கிறான்.

என்ன ஆச்சரியம்? விலைபேசிய மறு கணம் ஆறு கூடுகளும் அவரின் கைகளுக்கு மாற்றலாகி விட்டன.

கையில் ஆயிரம் ரூபாய் பச்சைத்தாள்!!!

வாய் நிறைந்த சிரிப்பு - முகக்கவசம் மறைத்தாலும் கண்களில் நிரம்பியிருந்தது.

ஓ......வான தேவனே வந்து வாங்கியதைப் போல் ஆறு கூடுகளுடனும் நிற்கும் தேவனை மின்தூங்கி சுமந்து சென்றது.

இவர்கள் தேவர்களே தான் என்பதை நிரூபித்து விட்டார்கள். பிருஷ்டத்தில் குதிக் கால்கள் பட்டுத் தெறிக்க தண்டவாளம் தாண்டி ஓடுகிறான்.

சொர்க்கத்திலிருந்து வரும் அவனின் கைகளுக்குள் இருந்த பச்சைத்தாள் தந்தையின் கைகளுக்கு மாறுகிறது.

இரவு..........

மீன் பொரியல், மீன் குழம்பு, பருப்புக் கறி குழைத்துச் சாப்பிட்ட சூடான வெண் சோறு நீண்ட நாட்களின் பின் வயிற்றுக் கூடுகளை நிறைத்தது.

அவன் ஏப்பம் விட்டபடி வெளியே வந்து சொர்க்காபுரியின் அந்தத் தொடர்மாடி மாளிகையை நோக்குகிறான்.

பூரணை நிலவை விஞ்சியதாய் அந்த வெளிச்சக் கூடுகள் சிரித்துக் கொண்டிருந்தன.

ooo



# மோகனாங்கி மீள்பதிப்பு – மேலும் சில குறிப்புகள்

**[1]**

**ஞானம் 240**ஆவது (மே.2020)இதழில் நூலக வியலாளர் ***திரு.என்.செல்வராஜா*** அவர்கள் தமிழின் முதலாவது வரலாற்று நாவலான 'மோகனாங்கி' மீள்பதிப்பு தொடர்பில் 'மோக னாங்கி வெளிச்சத்திற்குவந்த எம்மவர் படைப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதிய திரு.என். செல்வராஜா அவர்களுக்கும் ஞானம் இதழின் ஆசிரியருக்கும் எமது நன்றிகள். மோகனாங்கி மீள்பதிப்பையொட்டி திரு. செல்வராஜா அவர்கள் பகிர்ந்த ஆவணமாக்கல் தொடர்பான அவசியமும் பெறுமதியும் மிக்க கருத்துக்கள் நம் அனைவரது கவனத்திற்கும் செயற்பாடுகளுக்கும் உள்வாங்கப்பட வேண்டும்.

மோகனாங்கி மீள்பதிப்பு மற்றும் வெளியீடு தொடர்பில் அக்கட்டுரை சுட்டிய விடயங்களுக்கு மேலதிக விடயங்களை பதிவுசெய்வது அவசியம் என்றவகையில் அது தொடர்பில் சிலவற்றை இங்கே பகிர்ந்துகொள்கிறேன்.

தமிழிலக்கிய வரலாற்றில் ஈழத்தவரின் பெருமைக்குரிய பங்களிப்புகளில் ஒன்றாக 'மோக னாங்கி' பலராலும் குறிப்பிடப்பட்டுவந்திருக்கின்றபோதிலும் அறிந்திருந்தும் மறைந்துபோன நூலாகவே நூற்றாண்டாக இருந்தது. 2013இல் ***தி.த.சரவணமுத்துப்பிள்ளை***யின் (1865-1896) படைப்புகள் சிலவற்றின் தொகுப்பான 'தமிழப்பாஷை' நூல் மீள்பதிப்பாக (எழுநா, நூலகம் இணைந்த வெளியீடு) வெளியிட்டபோது தி.த.ச.வின் மிகமுக்கிய படைப்பான 'மோகனாங்கி'யை வாசிக்கவேண்டும் என்பது பேராவலைத் தூண்டிய ஒன்றாகவும் அடைய சந்தேகத்திற் குரியகனவாகவுமே இருந்தது.

தேடலும், அர்ப்பணிப்பு மிக்க உழைப்பும் அதை மீள்பதிப்பாக்கவேண்டும் என்ற தளராத பேரார்வமும் இணைந்தே அம்மீள்பதிப்பைச் சாத்தியமாக்கியது. 'சொக்கநாதநாயக்கர்' என்ற பெயரில் தி.த.கனகசுந்தரம்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்ட சுருக்கபதிப்பு வெளிவந்து 100 ஆண்டுகள் கழித்து 'மோகனாங்கி' மீள்பதிப்பு ***கலாநிதி.க.சரவணபவன், ச.சத்யதேவன், மு.மயூரன்*** மூவரையும் பதிப்பாசிரியர்களாககொண்டு திருகோணமலை வெளியீட்டாளர்களினால் 2018ஆம் ஆண்டு வெளி யிடப்பட்டது. திருகோணமலையை தன் மனதாலும் செயலாலும் நேசித்து, ஈழத்து இலக்கியச்சோலை மூலம் திருகோணமலையின் பல நூல்களையும் மீள்பதிப்புகளையும் அயராமல் செய்த ***கலா விநோதன் சித்தி அமரசிங்கம்*** அவர்களுக்கு இம்மீள்பதிப்பு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.



**எஸ். சத்யதேவன்**

மீள்பதிப்பின் வெளியீட்டு நிகழ்வானது 2018.01.31ஆம் திகதி முழுமதி நாளன்று திருகோணமலை இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக்கல் லூரியின் சம்பந்தர் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வெளியீட்டு நிகழ்வை இந்துக்கல்லூரியின் பழையமாணவர் ஒன்றியம்

ஒழுங்கமைத்தது. திருகோணமலையினதும் ஈழத்தமிழ் இலக்கியத்தினதும் பெருமைமிகு அடையாளங்களில் ஒன்றின் நூற்றாண்டுக்கு பின்னரான வெளியீட்டு நிகழ்வு என்பதனால் திருகோணமலையின் அப்போதைய முதன் மைத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழத்தமிழ் அரசியலின் அதி உயர்பிரதி நிதித்துவமாக அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த இரா.சம்பந்தன் அவர்கள் முதன்மைவிருந்தினராக வெளியீட் டாளர்களாலும் ஒழுங்கமைப்பாளரினாலும் அழைக்கப்பட்டிருந்தார். இரா.சம்பந்தன் அவர்கள் தி.த.சரவணமுத்துப்பிள்ளை அவர் களின் குடும்பத்தவர்களோடு நெருக்கமான நட்புகொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர் என் பதும் அதற்கொரு உபகாரணம்.

தி.த.சரவணமுத்துப்பிள்ளை தொடர்பில் புலமைத்துவ ஆக்கங்களை தொடர்ச்சியாக எழுதி கவனப்படுத்திக் கொண்டிருக்கின்ற **பேரா.செ.யோகராசா** அவர்கள் சிறப்பு விருந் தினராக கலந்துகொண்டு மோகனாங்கி தொடர்பில் சிறப்புரையாற்றினார்.

தி / இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக்கல் லூரி அதிபர் ***திரு.செ.பத்மசீலன்*** அவர்களின் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு நிகழ் வில் ச.சத்யதேவன் அறிமுக உரையையும், மு. மயூரன் வெளியீட்டுரையையும், கலாநிதி. க.சரவணபவன் பதிப்பாசிரியர்கள் சார்பில் ஏற்புரையையும் நிகழ்தினார்கள். நிகழ்ச்சித் தொகுப்பை 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழின் ஆசிரியர் ***எஸ்.தனபாலசிங்கம்*** நிகழ்த் தினார்.

இங்கு பகிர்ந்துகொள்ள விரும்பாத காரணங்களினால் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறுவதற்கு சிலநாட்கள் முன்னராக அவசரமாக நூல் அச்சிடுதலையும் வெளியீட்டு நிகழ்வையும் செய்யவேண்டிய நிர்ப்பந்தங்கள் வெளியீட்டாளர்களுக்கு ஏற்பட்டன. தேர்தல் காலம் என்பதால் அச்சகங்களுக்கு இருந்த தாள், நேரநெருக்கடியில் மிகக்குறுகிய காலத்தில் பக்கவடிவமைப்பை ***தி.அனோஜனும்*** அச்சாக்கத்தை ***திரு.செ.நந்தமோகன்*** அவர்களும் செய்து தந்தார்கள். நாம் திட்டமிட்ட அளவில் பிரதிகள் அச்சிடமுடியாமைக்கு இது முக்கிய காரணமாயிற்று.

உள்ளூராட்சி தேர்கள் மிக நெருங்கிய வேளையில் ஓர் அரசியல் கட்சியின் உயர் தலைமை விருந்தினராக அழைக்கபட்டதால் இவ்வெளியீட்டு நிகழ்வு ஓர் அரசியல் பிரச்சார நிகழ்வு என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளும் பரவலான சந்தேகங்களும் வெளியீட்டாளர்களுக்கும் நிகழ்வு ஒழுங் கமைப்பாளர்களுக்கும் ஏற்படுத்திய நெருக் கடிகளும்கூட இவ்வெளியீட்டு நிகழ்வு தொடர்பில் பதிவுசெய்யவேண்டியவை. இவ் வெளியீட்டுநிகழ்வு தொடர்பில் ஒருங் கிணைந்து செயற்படவும் வெளியீட்டு நிகழ்வு தொடர்பில் செய்திகளோ பதிவு களோ செய்யப்படாமல் போவதற்கும் இது காரணமாகியது. ஆயினும் அந்நிகழ்வில் பிரதம விருந்தினர், ஏற்பாட்டாளர்களின் நோக்க மறிந்து தி.த.ச குடும்பத்தினர் தொடர்பில் பல தகவல்களையும் இம்முயற்சிக்கான அவசியத்தையும் பாராட்டுகளையும் மட்டும் பகிர்ந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

**[2]**

வரலாற்று சிறப்புமிக்க நூல்களின் பதிப்பின்போது ஒளிநகலச்சுப்பிரதியாக வெளியிடுவதன் பெறுமதியையும் முக்கியத் துவத்தையும் பதிப்பாசிரியர்களான நாம் அறிந்தே இருந்தோம். அதன்பொருட்டே மீள்பதிப்பு நூலின் ஆரம்பத்தில் மூலநூலின் முகப்புபக்கம் உட்பட முதல் 05 பக்கங்களை ஒளிநகலச்சு முறையில் பதிப்பித்திருக்கிறோம்.

ஆயினும் சமகால வாசக சூழலை கருத்தில் கொண்டு தற்கால எழுத்தமைதியில் மீள்பதிப்பை செய்யவேண்டியதும் காலக் கட்டாயமாகும். அதுபோலவே மூலநூலில் தமிழ் எண்களால் குறிக்கப்பட்டிருந்த அத்தி யாயங்கள் மீள்பதிப்பில் தற்கால நியம எண்களுக்கு மாற்றப்பட்டும் புணர்த்தி எழுதப் பட்டிருந்த நீண்ட வசனங்கள், வாசிப்பினை

**பல ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் மோகனாங்கியை ஒருதடவைகூட வாசிக் காமல் மற்றவர்கள் சுட்டும் மேற்கோள்களையும், அடிக்குறிப்புக்களையுமே திரும் பத் திரும்ப பயன்படுத்தி சலிப்பு விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் பல பேராசிரியர்களும், இலக்கியவாதிகளும் அடங்குகின்றார்கள்.**



வி. செல்வநாயகம்

**மோகனாங்கியை ஆங்கில நாவலின் தழுவல் என பேராசிரியர் வி.செல்வநாயகம் அவரது "தமிழ் இலக்கிய வரலாற்றில்" ஒற்றை வரியில் விமர்சித்திருப்பதும் தமிழ் வரலாற்று நாவல்கள் தொடர்பில் தனி ஆய்வை மேற்கொண்ட பேரா.க.அருணாசலம் அவர்கள் தனது ஆய்வு நூலில் மோகனாங்கி வரலாற்று நாவல் என்ற வகைக்குள் அடங்குமா? என சந்தேகக் கேள்வி எழுப்புவதும் அதிர்ச்சியளிக்கின்றது.**



க. அருணாசலம்

எளிதாக்கும் நோக்கோடு சிற்சில இடங்களில் சந்தி பிரிக்கப்பட்டுள்ளதுடன் அரிதாக சில இடங்களில் சொற்கள் புணர்த்தப்பட்டும் பதிப்பிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

பிரதாபமுதலியார் சரித்திரம் உட்பட பழைய நூல்களின் மீள்பதிப்புகள் சமகாலத்தில் அவ்வாறே செய்யப்படுகின்றதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆயினும் சில விடயங்கள் மாற்றமின்றி மூலத்தின்படியே விடப்பட்டுள்ளன. குறிப்பாக, தற்காலத் தமிழில் தரிப்புக் குறிகளின்பயன்பாட்டுக்கும் மூல நூலில் தரிப்புக்குறிகள் பயன்படுத்தப்பட்டுள்ள விதத்துக்கு மிடையே சிறிய அளவில் வேறுபாடுகள் உள்ளன. மூலநூலின் தரிப்புக் குறிகள் எந்த விதமாற்றமுமின்றி, புதிய பதிப்பில் அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளன. நூலில் இடையிடையேவரும் பாடல்கள் சொற்களிடையே இடைவெளியின்றி சந்தி பிரிக்காத நிலையிலேயே அச்சிடப்பட் டுள்ளன. இந்தப் பதிப்பில் அப்பாடல்கள் மூலநூலில் இருப்பதுபோன்றே எந்த மாற்றமுமின்றி சந்திபிரிக்கப்படாமல் அச்சிடப் பட்டிருக்கின்றன. அவ்வகையில் மூல நூலிருந்து விலகாமலே மீள்பதிப்பு செய்யப் பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்பு கிறேன்.

மோகனாங்கியின் செம்பதிப்பு பரவலான வாசகர்களை சென்றடைவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என் பதையும் இங்கு மகிழ்வுடன் பகிர்ந்து கொள் கிறேன்.

பிரதாபமுதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் போன்ற தொடக்ககால நாவல்கள் தற்காலம்வரை மீள மீளபதிப்புக்களாக வெளியாகின்ற இன்றைய தமிழக சூழலில் மோகனாங்கி தமிழகத்தில் கண்டுகொள்ளாமல் தவிர்க்கப்பட காரண மாக இருந்தது இலக்கிய அரசியலா அல்லது பிரதிகள் கிடைக்காமற் போனதா? மோகனாங்கி நாவலில் முதன்மை எதிராளியாக அழகிரிநாயக்கர் இருக்க, பார்ப்பனரான கோவிந்தாச்சாரியார் கதாபாத்திரம் வழி யாக தி.த.ச உருவாக்கும் பார்ப்பனிய விமர் சனங்களா? இந்த வினாக்கள் ஒரு புறமிருக்க, இலங்கை இலக்கியச் சூழலின் அலட்சியத்திற்கு காரணங்கள் என்ன? இலங்கையின் ஆய்வுச் சூழலில் பேரா.செ.யோகராசா, கலாநிதி. நா.சுப்பிரமணியன், சில்லையூர் செல்வராசன் ஆகியோர் தவிர்ந்த ஏனையோர்கள் மோகனாங்கி குறித்த ஆழமான குறிப்புக்கள் எதனையும் விட்டுச் செல்லவில்லை. பல ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் மோக னாங்கியை ஒருதடவைகூட வாசிக்காமல் மற்றவர்கள் சுட்டும் மேற்கோள்களையும், அடிக்குறிப்புக்களையுமே திரும்பத் திரும்ப பயன்படுத்தி சலிப்பு விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் பல பேராசிரியர்களும், இலக்கியவாதிகளும் அடங்குகின்றார்கள்.

மதுரை நாயக்க அரசரின் வரலாற்றை உண்மைக்கு நெருக்கமாக இருந்துபேசும் மோகனாங்கியை ஆங்கில நாவலின் தழுவல் என பேராசிரியர் வி.செல்வநாயகம் அவரது 'தமிழ் இலக்கிய வரலாற்றில்' ஒற்றை வரியில் விமர்சித்திருப்பதும் தமிழ் வரலாற்று நாவல்கள் தொடர்பில் தனி ஆய்வை மேற்கொண்ட பேரா.க.அருணாசலம் அவர்கள் தனது ஆய்வு நூலில் மோகனாங்கி வரலாற்று நாவல் என்ற வகைக்குள் அடங்குமா? என சந்தேகக்கேள்வி எழுப்புவதும் அதிர்ச்சியளிக்கின்றது. இவர்கள் மோகனாங்கியை முழுமையாக வாசிக்காமல் ஆங்காங்கே அறிந்துகொண்ட தகவல்களை தொகுத்திருக்கவேண்டும் என எண்ணமே உருவாகின்றது.

என்று மோகனாங்கி மீள்பதிப்புரையில் சுட்டிய விடயங்கள் எம் உரையாடல்களுக்குள் உள்வாங்கப்படவேண்டியது அவசியம்.

○○○

# நினைவில் நிழலாடும் இலக்கியச் செல்வர்கள்



தமிழ்மணி, தேசத்தின் கண்
மானா மக்கீன்

## வட இந்திய கங்கையுடன் கலந்த தலாத் ஓயா ஓடை!

மிகச் சரியாக பதினாறு ஆண்டுகளுக்கு முன் (05-06-2004) இதே மாதம் ஐந்தாம் திகதி நிரந்தர ஓய்வுறக்கம் சென்றவர் திருச்சி தத்தமங்கலம் சித்திவிநாயகம். செல்லாதிருப்பின் இந்த ஆண்டு மார்ச்சில் நூற்றாண்டுப் பூர்த்தி (02-03-1920).

அவரை அந்தப் பெயரில் அபிமானிகள் அறிய மாட்டீர்கள். தலாத்து ஓயா கே. கணேஷ் என்றால்தான் புரிவீர்கள், அதுவும் மூப்பினர்!

இருபது அகவை இளைஞன் 'ஞானம்' தனது கண்டி வாழ்க்கையில் 2002இல் (31ஆம் இதழ்) அவரை மதித்துப் போற்றிவிட்டான், ஒரு சிறப்பிதழ் மூலமாக!

இங்கே நான் செய்ய விழைவது ஒரு துளி. ஒரேயொரு துறையை மட்டும் தொட்டு! மலையக இதயம் கண்டியை அரவணைத்து அம்பிட்டி. அங்கே ஒரு தோட்டப் பாடசாலையில் முதல் அரிச்சுவடி அதுவும் தாய் மொழி இல்லாமல் சிங்களம். பின்னர் கட்டுகஸ்தோட்டை சர்ச் அந்தோனியாரிலும் தமிழ் இல்லாமல் ஆங்கிலம்! அன்னை மொழியை அன்னையார் வீட்டில் புகட்ட இன்று ஒரு தமிழ் எழுத்தாளனை நினைக்கும் பாக்கியம் நமக்கு!

அதேகாலகட்டத்தில் அகவை பன்னிரண்டில் (1932) ஆனந்த விகடனுக்கு முன்னோடி ஆனந்த போதினியில் முதலெழுத்து! பின்நாட்களில் மணிக்கொடி, சக்தி, கலாமோகினி கிராம ஊழியன் கல்கி, மஞ்சரி, ஹனுமான், தென்றல் எனத் தமிழகத்தில் தடம்பதித்துவிட்டு தலாத் ஓயா ஓடையில் நீச்சலடிக்கத் துவங்கிய மனிதர். இருபத்து ஓராம் அகவையில் (1946) 'பாரதி' சஞ்சிகையை வெளியிட தன் பெயரில் இருந்த இல்லத்தை விற்றவர்! அன்றைய பெரும் அரசியல்வாதி பீட்டர் கெனமன் என்ற மாமனிதனின் வீட்டு அறையையே அலுவலகமாக்கி அதிசயப்படவைத்தார்.

அவை பெரும் பெரும் இலக்கிய வரலாறுகள் இங்கோ ஒரு பக்கப் பத்தி எழுத்தில் பதிய இயலாதவை. ஒன்றையே ஒன்றை - ஏற்கனவே குறிப்பிட்டது போல - ஒரேயொரு துறையை மட்டும் தொட்டு!

அது பிற மொழிப்படைப்புகளின் தமிழ் வடிவங்கள். மொழியாக்கங்கள். அவற்றில் அவரது ஆளுமை துல்லியமாகப் பளிச்சிட்டுப்போனது.

அன்றைய ஒப்பற்ற மணிக்கொடியில் முதல் மொழிபெயர்ப்பாக 'அதிர்ஷ்டசாலி' என்ற ஹங்கேரியச் சிறுகதை

தத்தமங்கலம் க.கணேசன் என்ற பெயரில். தொடர்ந்து கல்கியிலும் மஞ்சரியிலும் பங்களிப்புகள்! அப்பொழுது அருமை அருமையான யதார்த்த கதைகளையும் கட்டுரைகளையும் வழங்கிய சில இந்திய இளைஞர்களுக்குள்ள பம்பாய் கே. ஏ அப்பாஸ் ஒரு தனித்துவ ஆளுமை. (பிற்காலத்தில் பத்தி எழுத்து ஜாம்பவான் திரைக்கதை வசனகர்த்தா, பட நெறியாளர்) இவரது நெருங்கிய நண்பராகிப் போன கணேஷ்

அவரது பல சிறுகதைகளுக்கு கல்கியிலும் மஞ்சரியிலும் தமிழ் வடிவம் வழங்கினார். (சிட்டுக்குருவிகள்! என்றொரு படைப்பு இன்னும் எனது நெஞ்சக் கூட்டுக்குள்!)

மேலும் அப்பாஸ் கதைகளின் தொகுப்பு 'குங்குமப்பூ'வாகவும், ஒரு குறுநாவல் 'அஜந்தா'வாகவும் தமிழ் வாசகர்களுக்குக் கிடைத்தன (இவ்விரண்டும் 50-60களின் பதிப்பு. புத்தளம் ஜவாத் மரைக்காயரின் பொக்கிசம்!)

அதேசமயம் 40களில் (1947) முல்க்ராஜ் ஆனந் என்பாரின் 'தீண்டத்தகாதவன்' நாவலையும் தமிழுக்கு வழங்கினார். அவ்வப்போது மஞ்சரியில் அன்னாரின் சிறுகதைகளின் தமிழ் வடிவங்களும் வந்துள்ளன. ('கைதியின் பெட்டி' என்றொரு மஞ்சரிக்கதை என் கைவசம்!) இவ்வாறு கணேஷ் அவர்களது தமிழ் வடிவப் பங்களிப்பு இவர்கள் இருவருடனும் நின்றுவிடவில்லை. லூசுன், ஹோசிமின், ஆலதாய் முகம்மதோவ், பார்பரா, குப்பிரியானோவ், என ஒரு பட்டியலையும் தருகிறது.

மொத்தமாக இருபத்திரண்டு மொழியாக்க நூல்களை வழங்கி, ஒரு தனிமனித தமிழ்வடிவ ஆளுமையாக இன்றுவரை திகழ்கிறார்.

தலாத்து ஓயா கே. கணேஷ் அவர்களுக்கு கனடா இலக்கியத் தோட்டத்தின் இயல்விருது 2003ஆம் ஆண்டில் வழங்கப்பெற்றது.

எனது நீண்டகால கலை அன்பன் அந்தனி ஜீவா 'தினகரன்' கட்டுரையொன்றில் இப்படிக்குறித்துள்ளார் 'கணேஷ் கட்டிக்காத்த பயனுள்ள பல நூல்களைக் கொண்ட அவரது நூலகம், அவர் விரும்பியதுபோல கண்டியில் ஒரு பொது நிறுவனத்தின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கண்ட கனவும் அதுவே'

கனவு நனவானதா?

❍❍❍

---

கண்டங்கள் பலதைத்தாண்டியும் கடற்பரப்புகள் பலதாவியும்
கொண்டகொள்கையில் விலகிடாத கொரோணா - உயிரை
கோடிக்கணக்கில் குறிவைத்து குவலயத்தை சூழ்ந்தின்று
நாடிவருகிறது விரைவாய் நகர்ந்து

கொள்ளையிடுவதற்கு கூட்டமாய்வருகின்ற கோவிட் 19
வெள்ளையோ கறுப்பென்றோ வித்தியாசமில்லாமல் - வீடு
தேடிவந்தெம் உயிர்திருட்டைத் தெரிந்திட்ட இவ்வுலகு
மூடிடுமோ கதவை முயன்று




வைத்தியர் செவிலியர் வயதினில் முதிர்ந்தவரிடம் திருடட
பைத்தியம் பிடித்து பிதற்றிடும் பாரினிலின்று - பாதுகாப்பு
வறுமையால் மனிதஇனம் வற்றிப்போகும் நிலையினிலும்
பொறுமையிற் புரிகிறது போர்

பணத்தாலும் பகட்டாலும் பல்வசதிதனைப் பெற்றவர்கள்
பிணக்குவியலைக்கண்டு பிதற்றும்நிலையில் - மனிதத்தை
மதித்திடாத மானிடம் மரிப்பின் எண்ணிக்கையில் மருண்டு
துதிக்கிறது இறையை தொழுது

ஆடிவரை தொடர்ந்திடுமோ ஐப்பசிவரைக்கும் படர்ந்திடுமோ
தேடிவரும் வைரசின் திக்கெதுவும் தெரிந்திடுமோ - ஓடியே
ஒளிந்திட இடமின்றி உலகமது தத்தளிக்கும் நிலையில்
விழித்திடுமோ மருத்துவம் விரைந்து

மூடியகதவுகள் முகமூடித்தரிப்புகள் முழுவடைப்பைபார்த்து
ஓடியே போய்விடுமோ உலகினை விட்டகன்று - இன்றேல்
அழிக்கும் காலம் அண்மித்து வருவதனை மருத்துவம்
தெளிக்குமோ திகதி தெரிந்து

குறித்திட்ட இலக்காய் உயிர்கொள்ளையில் நீ விலகிடேல்
பறித்திடும் மனிதபாதுகாப்பரண்கள் பரந்து - நிலத்தினில்
எதிர்ப்புசக்தி பலவாய் உருவாகி ஏற்றங்கள் பெறுகையில்
உதிர்ப்பினால் போவாய் உறைந்து

பூமியைச்சமப்படுத்தல் என்ற புதியபொறுப்பாய்ப் புறப்பட்டு
சாமியை மறந்தவர்க்கு சாற்றுவது உனதிலக்கோ - நிகழும்
நில்லாத உயிர்க்கொள்ளைதனை நிறுத்திடாது போவாயாகில்
செல்வாய் மருத்துவச் சிறை

அம்பலவன் புவனேந்திரன்
(ஜேர்மனி)



# இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் எட்டு நாவல்களின் ஆய்வு - டாக்டர் த . பிரியா

போரின் விளைவால் புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்களின் வரிசையில் இலங்கைத் தமிழர்களாகப் பலர் உண்டு. அதில் ஏற்கனவே எழுத்தாளராகப் புலம்பெயர்ந்தவர்களும், புலம்பெயர்ந்த பின்பு எழுத்தாளர்களானவர்களும் அடக்கம்.

இவர்களில் ஒற்றைக் கைவிரல்களில் எண்ணக் கூடியவர்களே புலம்பெயர்ந்த இலக்கியம் என்று சிந்தித்துப் படைப்பவர்கள். மற்றையோர் கண்டங்கள் கடந்திருந்து, கால் நூற்றாண்டுகள் மேல் பாரிஸ், லண்டன், ரொரண்ரோ என வாழ்ந்த போதிலும் ஊர் நினைவுகளை மீட்டுகிறார்கள்


அது அவர்களது தவறல்ல. ஊர் நினைவுகள் ஒரு எலும்பில் புகுந்த சன்னம் போன்றது. இன்னும் அழுத்தமாகச் சொன்னால் அடிமை கொள்ளும் போதைபோன்றது. விலகுவது சுலபமல்ல. நண்பர் ***ஷோபாசக்தி*** நேர்மையாக அதை சமீபத்திய செவ்வியில் ஒப்புக்கொண்டார். பலர் அதை ஏற்றுக்கொள்ளாமல் புலம்பெயர்ந்தவர்கள் என்ற லேபலுக்குள் இருந்து பால்யகால நினைவுகளையும் இலங்கையில் நீடித்த போர்பற்றியும் எழுதுகிறார்கள். நான்கூட ***அசோகனின் வைத்தியசாலை, உனையே மயல்கொண்டேன்*** முதலான அவுஸ்திரேலியாவின் வாழ்வு சார்ந்த நாவல் களை எழுதிவிட்டு மீண்டும் ***கானல்தேசம்*** என்ற போர்க்கால நாவலை எழுதினேன்.

போதையெனச் சொன்னேன் அல்லவா?

இந்த நிலையில் நாம் இங்கிலாந்தில் வதியும் **இராஜேஸ்வரி பலசுப்பிரமணிய**த்தை மட்டுமே புலம்பெயர்ந்த இலக்கியத்தைப் படைப்பவராகச் சொல்லமுடியும். போரின மணம் வீசாத காலத்தில் இங்கிலாந்து சென்றவர். அங்கு இங்கிலாந்தவர்களோடு வேலைசெய்து, அவர்கள் மத்தியில் வாழ்ந்ததால் அவரது மனதில் அங்குள்ளவை கருப்பொருளாக வருகிறது. முக்கியமாக அவரது சிறுகதைகளின் ஊடாக அவரை தமிழில் எழுதும் இங்கிலாந்தவர் என்றே அடையாளம் காணமுடியும். அவர் மனதில் அக்கரைப்பற்றிலிருந்து வரும் தொலைபேசி அழைப்புகளைவிட மற்றவை விலகிவிட்டது. அவரது கதைமாந்தர்களாக ஆங்கிலேயர் மற்றும் தென்னாசியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களைச் சித்திரிக்கிறார். இதற்கு அவரது மானிடவியல் கல்வியும் வைத்தியசாலையிலும் வெளியிலும் மருத்துவத் தாதியாக கடமைபுரிந்த அனுபவமும் கைபிடித்துச் செல்கிறது.


பெரும்பாலான இலக்கியங்கள் ஏதோ ஒரு அனுபவத்தின் மூலமாகவே பெறப்படுகிறது. கடவுள்கூட தான்பார்த்த, நடந்த மண்ணிலிருந்தே ஆதாமை உருவாக்கியதாக பழைய வேதாகமம் சொல்கிறது. எல்லாம்வல்ல கடவுளுக்கும்கூட கற்பனையிலிருந்து ஆதாமை உருவாக்க முடியவில்லை. சாதாரண படைப்பாளி என்ன செய்வது?

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் ***ஒரு கோடைவிடுமுறை, உலகமெங்கும் வியாபாரிகள், தேம்ஸ் நதிக்கரையில், பனிபெய்யும் இரவுகள், வசந்தம் வந்துபோய்விட்டது, தில்லையாற்றங் கரையில், அவனும் சில வருடங்களும், நாளைய மனிதர்கள்*** முதலான எட்டு நாவல்களையும் தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் ***பிரியா*** புலம்பெயர்ந்தோரின் வாழ்வியல் சிக்கல் என்ற தலைப்பில் இலக்கியத் திறனாய்வுக்கு எடுத்துக்கொண்டு அதன்மூலம் தனது டாக்டர் பட்டத்தை பெற்றுள்ளார். இந்த ஆய்வுக்கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. உண்மையில் இந்த விடயம் புலம்பெயர்ந்தவர்களுக்கு



**நடேசன்**

**ஊர் நினைவுகள் ஒரு எலும்பில் புகுந்த சன்னம் போன்றது. இன்னும் அழுத்தமாகச் சொன்னால் அடிமை கொள்ளும் போதைபோன்றது. விலகுவது சுலபமல்ல. இந்த நிலையில் நாம் இங்கிலாந்தில் வதியும் இராஜேஸ்வரி பலசுப்பிரமணியத்தை மட்டுமே புலம்பெயர்ந்த இலக்கியத்தைப் படைப்பவராகச் சொல்லமுடியும். – நடேசன்**



மட்டுமல்ல, இலங்கை இந்தியாவிலும் முக்கிய செய்தி.

இந்த ஆய்வு தனியாக இராஜேஸ்வரி பலசுப்பிரமணியத்தின் நாவல்களை மட்டு மல்லாது மேலும் பலவிடயங்கள் ஊடே பயணிக்கிறது. ஈழத்து தமிழ் நாவல்கள், அவைகள் தீண்டிய கருப்பொருட்கள் மற்றும் எழுதியவர்களூடாக பார்க்கப்படுகிறது. ***செங்கை ஆழியான், கணேசலிங்கன்*** மற்றும் ***டானியல்*** ஆகியோரது நாவல்களை உரைகல் லாகப் பார்த்து, எழுத்தாளர்கள் ***நிலக்கிளி பாலமனோகரன், கோகிலா மகேந்திரன்*** ஆகியோ ரது படைப்புகளோடு ஒப்பிடுகிறது.

வாழ்வியல் சிக்கல் என வரும்பொழுது, பெண்கள் பிரதான பாத்திரங்களாக இடம் பெறுகிறார்கள். புலம்பெயரும் தென்னா சியப் பெண்கள் எப்படி இங்கிலாந்தில் வாழ விரும்புகிறார்கள். ஆனால், அவர் களது விருப்பங்கள் எப்படி ஆண்களால் மறுக்கப்படுகிறது என்பது ஆய்வு செய்யப் படுகிறது. திருமணம், இளம் பெண்களை இன்பமயமான அடுத்தகட்ட வாழ்வுமுறைக்குக் கொண்டு செல்லாது, ஆண்களால் கை விலங்கு மாட்டி சிறைபிடிக்கும் ஒரு சடங்காகி விடுகிறது என்பது இந்த நாவல்கள் வழியே வெளிப்படுவதாகவும் டாக்டர் பிரியா பதிவிடுகிறார்.

இலங்கை அரசியல் பிரச்சினை, மொழிப் போராட்டம், அதன் பின்பான ஆயுதப்போராட்ட விடயங்கள், அதன் விளைவான உயிரிழப்புகள், பாலியல் வன்முறைகள், உடைமைகளை அழித்தல் மற்றும் மலையக மக்களது நிலைகள் இந்தநாவல்களில் தெளிவாகப் பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

புலப்பெயர்வால் இளைய தலைமுறையில் ஏற்படும் சிந்தனை, செயல் மாற்றங்கள் பேசுபொருளாகவும் உள்ளது .

கடந்த கால்நூற்றாண்டில் தமிழ்ச்சமூகம், ஆங்கில சமூகம், அத்துடன் உலக சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பதிவுசெய்த நாவல் களாக இவை இருப்பதாகக் குறிப்பிடப் படுகிறது.

இராஜேஸ்வரியின் நாவல்கள்பற்றிய ஆய்வு 200 பக்கங்களுக்கு மேற்பட்ட புத்தகமாக தமிழில் டாக்டர் பிரியாவால் வெளி யிடப்பட்டுள்ளது. அதேபோன்று இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் சிறுகதைகளும் ஆய்வு செய்யப்படவேண்டும் என்பதுடன் இலங்கை இந்தியப் பல்கலைக்கழகங்களில் பெண்ணியம் என்ற கல்வித்துறை முக்கியமான பல்கலைக்கழகங்களில் இடப்பெற்று, அங்கு இவைகள் பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டுமெனவும் தெரிவிக்கின்றேன்.

இளவயதில் திருமணம், பெற்றோர்களால் பேசப்படும் திருமணம், சொந்தத்தில் மண முடித்தல், பெண்களுக்கு குறைந்த கல்வி எனப் பலவிடயங்களால் பெண்களைப் பாரவண்டிகளை இழுப்பவர்களாக்கியுள்ளது தமிழ்ச்சமூகம். சாதிப் பிரிவினை மற்றும் கறள் பிடித்த மதங்களின் துணையால் தென் ஆசிய சமூகமே பெண்கள் விடயத்தில் மிகவும் கீழ்நிலையில் உள்ளது என்பதை எல்லாப் புள்ளிவிபரங்களும் சொல்கின்றன.

மேற்குறிப்பிட்ட விலங்குகள் எளிதில் உடைக்க முடியாதவை என்பது உண்மை. ஆனாலும், இரும்பு விலங்குகளைக் குறைந்த பட்சமாகத் தளர்த்தி, அந்தக் கைகளில் இரத்த ஓட்டத்தையாவது அதிகரிக்கச் செய்ய இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் எழுத் துக்கள் உதவுமென்பது எனது கணிப்பு. அவரது நாவல்களை ஆய்வுசெய்த டாக்டர் பிரியாவிற்கும், அதை அங்கீகரித்த பாரதியார் பல்கலைக்கழகத்திற்கும் ஒரு தென்னாசியனாக மட்டுமல்ல, ஒரு மகனாக - கணவனாக- ஒரு பெண்ணின் தந்தையாக நன்றிகளைத் தெரிவிப்பது எனது கடமையாகும்.

❍❍❍

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## ஆளுக்கு ஒரு நீதி

நமது நாட்டு அரசியலில் ஆளுக்கு ஒரு நீதி என்பது, எழுதப்படாத ஒரு சட்டமாகவே ஆகிவிட்டது. பொதுவாகவே நமது நாட்டில் வடக்கு - கிழக்குக்கு ஒரு நீதி. தென்னிலங்கைக்கு ஒரு நீதி. பெரும்பான்மையினருக்கு ஒரு நீதி. சிறுபான்மையினருக்கு ஒரு நீதி. அரசு சார்பானவர்களுக்கு ஒரு நீதி. அரசை எதிர்ப் பவர்களுக்கு ஒரு நீதி. படையினருக்கு ஒரு நீதி. பொதுமக்களுக்கு ஒரு நீதி. பௌத்த தர்மத்தை வளர்ப்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஒரு நாட்டின் அரசியலில் இத்தனை நீதிகள்!

அண்மையில் வடக்கு - கிழக்கில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றபோது, பலத்த கெடு பிடிகள் இடம்பெற்றன. ஆனால், தெற் கில் வேறு ஒரு விழா நடைபெற்றபோது, எக்கச்சக்கமான மரியாதை. கொரோனாவின் ஆதிக்கம் நிலவுகின்ற நிலையில், பொதுமக்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கின்றவர்களே, 'ஊருக்குத்தான் உபதேசம். எனக்கல்லடி' என்ற தோரணையில் நடந்துகொண்டுள்ளமையையும் பலரால் அவதானிக்க முடிந்தது. 'குருக்கள் ஏதோ செய்தால் குற்றமில்லை' என்ற பழமொழி இவர்களுக்காகத்தான் ஆக்கப்பட்டது போலும்!

அண்மையில் நடைபெற்ற தேவையற்ற ஒரு விழாவில் பேசிய முக்கியஸ்தர் ஒருவர், உலக ஜனநாயக மரபுகளை எல்லாம் மறந்து, தான்தோன்றித்தனமாக வாயில் வந்ததை எல்லாம் உளறிக்கொட்டினார். ஜனநாயக மரபுகளை மதிக்கும் மக்களுக்கு அவை நாராசம் போல் இருந்தன. ஆனால், நாட்டில் தர்மத்தை வளர்க்கவேண்டிய ஒரு சாரார், குறிப்பிட்ட வார்த்தைகளைப் பேசிய முக்கியஸ்தரைப் புகழ் வதற்குச் சொற்களஞ்சியத்தில் வார்த்தைகளே இல்லை என்று புளுகி மகிழ்ந்தமையை என்னென்பது? விஷயம் அறிந்தவர்களுக்கு, வீரமாமுனிவரின் பரமார்த்த குருவும் சீடர்களும் கதை ஞாபகத்துக்கு வராமல் போகாது.

புதிய ஆட்சி நாட்டில் ஏற்பட்டது தான் தாமதம், மளமளவென்று குடியியல் சார்ந்த சேவைகளில் ஓய்வுபெற்ற படை அதி காரிகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். எதிலும் ஒரு நியாயம், நியதி என்பவை கிடையாது. இராணுவச் சார்பு கொண்ட சர்வாதிகாரப் போக்கு ஒன்று மெதுமெதுவாக உருவாகிவருவதனை அவதானிக்க முடிகிறது. இவை பற்றி எல்லாம் ஆட்சியாளர்களுக்குக் கை கால் பிடிப்பவர்கள் கண்டுகொள்வதில்லை. அத்தகையவர்கள் ஆட்சியாளர்கள் வாயிலாகத் தங்கள் கைகளில் ஏதும் சுவறுமா என்பதைப் பற்றி மட்டும்தான் அக்கறைப்படுவார்கள். போலித் தேசியவாதத்தில் மயங்கிக்கிடக்கும் பெரும்பாலான பெரும்பான்மை இன மக்களும் காலம் கடந்து தான் இவை பற்றி உணர்ந்து கொள்வார்கள்.

ஆளுக்கு ஒரு நீதி என்பது, அண்மையில் மலையகத்திலும் வெளிப்படையாகிவிட்டது. ஒன்றுக்குமே போதாத ஐயாயிரம் ரூபா நிவாரண நிதி வழங்குவதில்கூட, மலையகத்தில் பாரபட்சம் காட்டப்பட்டுவருவதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. எல்லாவற்றிலும் போலவே ஐயாயிரம் ரூபா நிவாரண நிதி விடயத்திலும் அரசியல் விளையாடுகிறது. வழமையாகவே வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கும் பெருந்தோட்டத் தொழி லாளர்கள், இந்த நிவாரண நிதி விடயத்திலும் வஞ்சிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்த இலட்சணத்தில், யூன் மாதத்தில் இருந்து ஐயாயிரம் ரூபா நிவாரண நிதி வழங்கப் படமாட்டாது என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு வேறு மலையக மக்களின் வயிற்றில் அடிக்கிறது. அரசைச் சார்ந்தொழுகும் மலையக அரசியல்வாதிகளுக்கு, அரசு மலை போலவும், மக்களின் துன்பம் மடு போலவும் தெரிகின்றன. மலையக மக்கள் தங்கள் வேதனைகளை எல்லாம் பொதுத்தேர்தலில் பிரதிபலிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

## வேஷங்கள் பலவிதம்!

பொதுத்தேர்தல் (இதை எழுதும் வரை) எப்போது நடக்கும் என்று தெரியாது. ஆனால், நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் தேர்தல் போராட்டத்துக்காகக் கச்சை கட்டத் தொடங்கிவிட்டன. தமிழ்மக்கள் மத்தியில் யார் பெரியவர் என்பதைக் காட்சிப்படுத்தும் முயற்சிகளில் அரசியல்வாதிகள் ஈடுபட்டு உழைக்கின்றனர். அதன் விளைவாக, அரசின் முக்கியஸ்தர் ஒருவர் கூட்டிய நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கான சந்திப்பில், பிற கட்சிகள் எவையும் கலந்துகொள்ளாத நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் 'தமிழ்மக்களின் நலன் கருதிக்' கலந்துகொண்டது. ஒரே நாளில் ஒருமுறை அல்ல, இருமுறை கூட்டமைப்பு அரசின் முக்கியஸ்தர் ஒருவரைச் சந்தித்துப் பேசியது. இப்படி இவர்கள் ஆலாய்ப் பறந்து பறந்து பேசியதால், என்றும் இல்லாதவாறு தமிழ்மக்களுக்கு ஒரு விடிவுகாலம் பிறக்கப் போகிறது, புதுயுகம் உதிக்கப்போகிறது என்று பொதுமக்கள் நம்பினார்கள். என்ன இருந்தாலும் கூட்டமைப்பு கூட்டமைப்புத் தான். அவர்களுக்குத் தமிழ்மக்கள் தான் உயிர். மற்றதெல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல என்று விஷயம் தெரியாமல் ஆதரவாளர்கள் ஆனந்தத்தில் மூழ்கினார்கள். ஆனால், கொரோனா வைரஸ் நாட்டில் ஏற்படுத்திய முடங்கல் நிலையால் பாதிக்கப்பட்ட கூட்டமைப்பினருக்கு, இச்சந்திப்பு ஒரு நல்ல பொழுதுபோக்காக அமைந்ததைப் பொதுமக்கள் அறியார். அதேவேளை, தங்கள் கனவிலும், நினைவிலும் தமிழ்மக்கள் தான் எப்போதும் காட்சியளிக்கிறார்கள் என்று காட்டிக்கொள்வதற்கும் இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தமை கூட்டமைப்புக் காரர்களுக்குத்தான் வெளிச்சம். அதேவேளை, மற்றவர்களைவிடத் தாம்தான் நல்லபிள்ளைகள் என்று அரசுக்கும் காட்டிக்கொள்ளும் அரிய சந்தர்ப்பத்தையும் கூட்டமைப்பினர் நழுவ விடுவார்களா?

அவர்கள் பேசியவை எல்லாம், அவர்களே முன்னரும் பேசிப்பேசிப் புளித்த பழைய விடயங்கள்தான். கொரோனா தொடர்பாக அவர்கள் பேசியவைதான் புதிய விடயங்கள். ஆட்சியாளர்களும் தாங்கள் ஜனநாயக வாதிகள், எதையும் பொறுமையாகக் கேட்டுக்கொள்பவர்கள் என்று தமிழ்மக்களுக்குக் காட்டிக்கொள்வதில் அலாதிப் பிரியம் கொண்டவர்கள். அதேவேளை, தாம் தமிழ் மக்களுக்கு எதையும் செய்வதில்லை என்று சிங்கள மக்களுக்குக் காட்டிக்கொள்வதில் புளகாங்கிதம் அடைபவர்கள். கூட்டமைப்பினர் கடந்த ஆட்சிக்காலத்தில், அப்போதைய அரசின் தூணாக விளங்கியவர்கள். அவர்கள் ஆதரவை விலக்கியிருந்தால், அப்போதைய அரசு தொப்பென்று வீழ்ந்திருக்கும். அத்தகைய பலம் பொருந்திய நிலையில் இருந்து கொண்டு, தமிழ்மக்களுக்காக எதுவும் செய்யாமல், இப்போதைய அரசிடம் பிச்சை கேட்டுக்கொண்டிருப்பதில் என்ன இலாபம்?

பின்னர், கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் அரசியல் கைதிகள் தொடர்பான பட்டியல் ஒன்றுடன் அரசின் முக்கியஸ்தர் ஒருவரைச் சந்தித்தார். உண்மையில் அது ஒரு நல்ல விடயம். ஆனால், காலம் கடந்தது. அதை அறிந்த அரசு சார்புத் தமிழ் அரசியல்வாதி ஒருவர், எங்கே கூட்டமைப்புக்கு நல்ல பெயர் கிட்டிவிடுமோ என்று அங்கலாய்த்து, தாமும் அரசியல் கைதிகள் தொடர்பாக ஒரு பட்டியலை அரசின் முக்கியஸ்தர் ஒருவரிடம் கையளித்து, தமது அரசியல் மனச்சிக்கலைத் தவிர்த்துக்கொண்டார். தமிழ்மக்களின் அரசியல் விடயங்களில் தமக்கும் போதிய அக்கறை இருக்கிறது என்று காட்டிக்கொள்ள, அவருக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பமாக இது அமைந்தது. தமிழ்மக்களுக்காக இவர்கள் எல்லோரும் என்னமாய் உழைக்கிறார்கள்?

இலங்கையின் கிழக்கைப் பொறுத்த வரையில், தமிழ்மக்களின் இருப்பு, வரவரக் கேள்விக்குறியாகவே இருந்துவருகிறது. கடந்த கிழக்குமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக, அதன்மீது கடும் விமர்சனங்கள் உள்ளன. ஆரம்பகாலத்தில் தமிழரசுக்கட்சிக்கும், பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் காலங்காலமாக வாக்களித்துவந்த பெரும் பாலான கிழக்குமாகாணத் தமிழ்மக்கள், தற்போது அக்கட்சி தொடர்பாக விரக்தி அடைந்த நிலையில் காணப்படுகின்றனர். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், அவர்களது துன்பங்களையும், பிரச்சினை களையும், வேதனைகளையும் சட்டை

செய்யாத நிலையே காணப்படுகிறது. கடந்த காலத்தில் கனவான்கள் ஒப்பந்தம் மூலம், தனக்குரிய அரசுரிமையையே கூட்டமைப்பு கைநழுவவிட்டமை பற்றி, அதன்மீது தணியாத கோபத்தில் கிழக்குமாகாணத் தமிழ்மக்கள் உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை, கிழக்கு மாகாணத் தமிழ் மக்களைவிட, அதற்குத் தனது அரசியல்மட்டக் கனவான்களின் நட்புவட்டம் முக்கியமானது. அதனால், கூட்டமைப்பு இம்முறை பொதுத்தேர்தலில் கிழக்குமாகாணத் தமிழ்மக்களின் ஆதரவைப் பெறுவது கடினமாகவே இருக்கப்போகிறது. வடக்கை மையமாகக் கொண்ட அரச சார்பற்ற பிற தமிழ்க் கட்சிகள், கிழக்குத் தமிழ்மக்களின் பிரச்சினைகளிலும் கூடிய அக்கறை காட்டவேண்டும். கிழக்குத் தமிழ்மக்களை வெறும் வாக்குவங்கிகளாக மாத்திரம் பார்க்கும் நிலை மாற்றப்படவேண்டும். இல்லையேல், கிழக்குத் தமிழ்மக்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில், தங்கள் வாழ்வியல் இருப்பை நிலைநிறுத்தக்கூடிய புதிய அரசியல் வழியை நாடினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

---

## கொரோனாவை நினைத்தபடி

*கொரோனாவை நினைத்த படி*
*நடந்து போகிறான்*
*ஒரு வழிப்போக்கன்*

*பாதை எங்கனும்*
*சப்தமில்லா நிசப்தம்.*

*அவனுக்கோ*
*சட்டைப்பைக்குள் கனக்கிறது*
*புறாக்களின் வாழ்க்கையை*
*பார்த்த சலிப்பு...*



*குர் குர் சப்தங்கள்...*
*பகிர்ந்தமரும் மாடங்களில்*
*சல்லாப உரையாடல்கள்...*
*இளமையின் வழுவழுப்பில்*
*வழுக்கி விழும் அழகுகள்...*
*குறு குறு பார்வைகள்...*
*எதிர்க்கத் தெரியாத*
*அவைகளின் குணாம்சம்...*
*மனிதரோடு உறவாடி*
*பயமற்றுப் போன அன்னியோன்யம்...*

*கணவன் மனைவியென*
*பகிர்ந்துண்ட வாழ்வு...*
*முட்டையிட்டு குஞ்சு பொரித்து*
*பேறாக்கிய பெருமை...*
*தாயாகும் தந்தைமை...*
*தந்தையாகும் தாய்மை..*

*சகலதுக்கும் சகலருக்கும்*
*உரியதாகுமன்றோ*
*இந்த உலகு....*

*எனினும்,*
*எச்சம் எஞ்சும் மாடங்களை*
*சுத்தம் செய்யப் பஞ்சிப்பட்டு*
*அவைகளைக் கொல்லுமொரு*
*நஞ்சுக்கிண்ணம்!*

*தந்திரமாய் நஞ்சு வைத்து*
*கொல்லும் அந்தக் கைகளுக்கு*
*தெரிந்திருக்கக் கூடுமோ?*
*குஞ்சுகள் இன்னும்*
*இரைகளுக்குக் காத்திருப்பது குறித்து....*
*மாலை தேடி வரப் போகும்*
*ஜோடிப்புறா பெறப்போகும்*
*ஏமாற்றம் குறித்து....*
*மனித சகவாசத்தை*
*அவைகள் எவ்வளவு உண்மையென*
*நம்பின என்பது குறித்து...*
*அவைகளுக்கென்றும்*
*ஒரு வாழ்வு இருந்தது குறித்து....*
*இன்னும் இன்னும்..*
*...........*



*இப்போதெல்லாம் மாடங்களில்*
*சத்தமே இல்லாத நிசப்தம்.*
*பாதை எங்கனும் காணும்*
*சத்தமில்லா நிசப்தம் போல....*

*சகலதுக்கும் சகலருக்கும்*
*உரியதாகுமன்றோ*
*இந்த உலகு....*

*அவனுக்கோ*
*சட்டைப்பைக்குள் கனக்கிறது*
*புறாக்களின் வாழ்க்கையைப்*
*பார்த்த சலிப்பு...*

*கொரோனாவை நினைத்த படி*
*நடந்து போகிறான்*
*ஒரு வழிப்போக்கன்.*

**யசோதா பத்மநாதன்**
(அவுஸ்திரேலியா)

# ஓர் இன்னிசை மாலை

அண்மையில் ஒருநாள் மாலைவேளையில் தொலைக்காட்சிப் பக்கம் கண்களைத் திருப்பியபோது, ராஜ் ரீ.வியில் ஒரு நல்ல நிகழ்ச்சி கண்ணில் பட்டது. பிரபல பின்னணிப் பாடகி பி. சுசீலாவின் ஐம்பது ஆண்டுகாலக் கலைச்சேவையைப் பாராட்டுமுகமாக ராஜ் ரீ.வீ முன்னர் நடத்திய நெஞ்சம் மறப்பதில்லை என்ற கலைவிழாவின் மறு ஒளிபரப்பு அது. இக்கலைவிழா நடைபெற்றுப் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. முன்னர் ஒளிபரப்பப்பட்டபோது, நான் அந்நிகழ்ச்சியைப் பார்க்க முடியவில்லை. ஆனால், காலம் கடந்தும் அந்நிகழ்ச்சியைப் பார்க்கக் கிடைத்தமை ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும்.

பழம்பெரும் பாடகர்களான அமரர்கள் ரி. எம். சௌந்தரராஜன், பி.பி. ஸ்ரீநிவாஸ் முதலியோரும் கலந்து சிறப்பித்த நிகழ்ச்சியாக அது விளங்கியது. தமிழ்த் திரையுலகுக்குக் கிடைத்த அரும்பெரும் பாடகியான சுசீலாவின் திறமைகளையும், பெருமைகளையும் விழாவில் கலந்துகொண்ட அனைவரும் சிலாகித்துப் பேசினார்கள். விழாவில் சுசீலா தனித்தும், பிறருடன் இணைந்தும் பல பாடல்களைப் பாடினார். இருபதாம் நூற்றாண்டின் ஐம்பது, அறுபது, எழுபதுகளில் இருந்த குரல் போலவே, பல ஆண்டுகள் கடந்து நிகழ்ந்த இந்நிகழ்ச்சியிலும் அவரது குரல் அப்படியே இருந்தது. சுசீலாவின் மருமகள் ஒருவரும் (சத்யா என்பதாக ஞாபகம்) அவரது பாடல்களை அவரைப் போலவே பாடி, அனைவரையும் கவர்ந்தார். விழாவில் இடம்பெற்ற நடன நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவற்றில் சுசீலாவின் பாடல்களே இடம்பெற்றமை மகிழ்ச்சியை அளித்தது. அந்நிகழ்ச்சி வெறும் பாராட்டுவிழாவாக மாத்திரம் அன்றி, சிறந்த கலைவிழாவாகவும் அமைந்தமை பாராட்டுக்குரியது.

ரி. எம். சௌந்தரராஜன் தமது மனைவியுடன் வருகை தந்து, சுசீலாவைப் பாராட்டிப் பேசினார். சௌந்தரராஜனும், சுசீலாவும் இணைந்து பாடிய பாடல்களில் ஒன்றான ‘முத்துக்களோ கண்கள்’ என்ற பாடலை இருவரும் இந்நிகழ்ச்சியிலும் சேர்ந்து பாடினார்கள். பி.பி. ஸ்ரீநிவாஸ், தாம் முன்னர் பாடிய ‘காலங்களில் அவள் வசந்தம்’ என்ற பாடலின் மெட்டில் ‘பாடும் மயில் பீ சுசீலா’ என்று தாமே இயற்றிய ஒரு பாடலையும் பாடினார். இந்நிகழ்ச்சியில் பாடிய ரி. எம். எஸ், ஸ்ரீநிவாஸ் ஆகியோரின் குரல்களில் வயதின் காரணமாக ஒருவிதத் தளர்ச்சி இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இந்நிகழ்ச்சியில் எஸ். பி. பாலசுப்பிரமணியம், கே.ஜே. ஜேசுதாஸின் மகன் விஜய் ஜேசுதாஸ், இரட்டை இசையமைப்பாளர்கள் சங்கர் - கணேஷில் ஒருவராகிய கணேஷ், பாடலாசிரியர் கங்கை அமரன் ஆகியோருடனும் இணைந்து, சுசீலா தாம் முன்னர் பாடிய பாடல்களைப் பாடினார். எஸ். பி. பாலசுப்பிரமணியம் பேசும்போது, தாம் முதன்முதலில் கன்னடத்தில் பாடியபோதும் சுசீலாவுடன் தான் பாடியதாகவும், தெலுங்கில் முதன்முதல் பாடியபோதும் அவருடன் தான் பாடியதாகவும், தமிழில் முதன்முதலில் பாடியபோதும் அவருடனேயே பாடியதாகவும் குறிப்பிட்டுத் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இன்னொரு சிறந்த பிரபல பின்னணிப் பாடகியான எஸ். ஜானகி நிகழ்வில் கலந்துகொண்டு, சுசீலாவை வாழ்த்திப் பேசினார். யாரும் கேட்டாலும் கிடைக்காத அருமையான குரல் சுசீலாவுக்குரியது. அது அவருக்குக் கிடைத்த வரம் என்று குறிப்பிட்டு, சுசீலாவை மனமாரப் பாராட்டினார். பழம்பெரும் நடிகை தேவிகா பேசும்போது, ‘சுசீலா எனக்காகப் பாடும்போது, நானே பாடுவது போல் இருக்கும். சரோஜாதேவிக்காகப் அவர் பாடும்போது, சரோஜாதேவியே பாடுவது போல இருக்கும். அப்படி அவர் யாருக்காகப் பாடினாலும், அந்த நடிகையே பாடுவது போல இருக்கும்’ என்று சுசீலாவின் திறமையை மெச்சினார். தேவிகா சுசீலா பற்றிக் குறிப்பிட்டது நூறுவீதம் உண்மை.

கவிஞர் வைரமுத்து சுசீலாவின் திறமையை, அவர் பாடிய பல பாடல்களை உதாரணம் காட்டிப் பேசினார். கதாபாத்திரங்களுக்கு ஏற்ப, விதம்விதமான பாவங்களை வெளிப்படுத்தும் சுசீலாவின் மேன்மையைச் சிறப்பாக விளக்கி, அவர் உரையாற்றினார். பலவேளைகளில் நான் பார்த்த வைரமுத்துவின் உரைகளில், இதுவே என்னை மிகவும் கவர்ந்ததாக விளங்கியது. விழாவின் நிகழ்ச்சித் தொகுப்பாளரான பீ. எச். அப்துல்ஹமீட், வழமையான தமக்கேயுரிய பாணியில் சிறப்பாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். இந்திய ராஜ் ரீ.வீயின் மகுட வாசகத்திலும் அப்துல்ஹமீட்டின் குரலே எப்போதும் ஒலிக்கிறது என்பதில், இலங்கையர் யாவருக்குமே பெருமைதான்.

❍❍❍

# கொரோனாவின் தடங்களில்...

கொடுப்பதைத் தந்திடும்
பிரபஞ்ச அமைப்பு
வேண்டியே ஆகணும்
எங்களின் பிழைப்பு...

எண்ணிப் பார்த்தால்
எல்லாம் புரியும்
செய்வினை மனிதனை
சூழ்ந்ததும் தெரியும்...

ஏனிந்த ஓட்டம்
அதிகார ஆட்டம்
பணத்திற்கும் பதவிக்கும்
அலைந்திடும் கூட்டம்...

மானிடக் குருதியில்
மகா சாம்ராஜ்ஜியங்கள்
எப்படி நிலைக்கும்
எவைதான் மிஞ்சும்...

அடுத்தவன் கதறலில்
கண்ணீரில் கண்ட
ஏக போகம்
எதுவரை போகும்...

நோயோடு போராடி
ஓயாது உழைத்த
மருத்துவர் தாதியரின்
பரிதாப மரணங்கள்...

தள்ளாத வயதிலும்
வாழ்கின்ற வயதிலும்
நோயோடு போய்விட்ட
நேச உறவுகள்...

பட்டினியால் சாகாமல்
பொருளின்றித் தவிக்காமல்
உடனுக்குடன் உதவிநின்ற
வர்த்தகப் பணியாளர்கள்...

வீட்டில் விளக்கெரிய
நாட்டின் எல்லையில்
வீதியில் காய்கின்ற
காவல் வீரர்கள்...

எந்த நிலையிலும்
தளராத மனத்துடன்
தூய்மையைக் காத்திடும்
துப்புரவுத் தொழிலாளர்...

நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்
மற்றெல்லாம் ஒருநாள்
விட்டே செல்வம்...

சொர்க்கம் தேடி
எங்கே போகிறாய்
உன்னிடம் உள்ளதை
எங்கே தேடுகிறாய்...



பணம் பணமென
பேயாய் அலைந்தாய்
பிணம் பிணமாய்
குவிந்திடக் கண்டாய்...

இனியொரு சுனாமி
ஒருபோதும் வேண்டாம்
இன்னொரு கொரோனா
எப்போதும் வேண்டாம்...

கொத்துக் கொத்தாய்
மடிந்ததும் போதும்
கண்ணீர்க் காவியங்கள்
வரைந்ததும் போதும்...

ஆபத்தான வேளையிலும்
அவசர சேவையில்
எங்களைக் காத்திடத்
தங்களைத் தந்தவர்கள்...

மண்ணின் மலர்வுக்காய்
மனங்குளிர உழைப்பவர்
காலத்தில் செய்தவை
ஞாலத்தில் பெரியவை...

மருத்துவ அறிவியல்
முழு முயற்சி
வைரசை முற்றாய்
அழித்து ஒழித்திட...

ஒன்றாய் யாவரும்
ஒத்துழைத்தாலே
உலகை விட்டே
ஓடிடும் கொரோனா...

பொந்தினுள் எலிகளாய்
எத்தனை நாளைக்கு
வெளியே வந்தால்
வெளிச்சம் தெரியும்...

இறந்த உடல்கள்
பாதை காட்டுகின்றன
இனியாவது மனிதனாய்
எழுந்து நடவுங்கள்..!

இயற்கையின் கொடையை
எடுப்போம் பகிர்வோம்
மனிதம் வென்ற
மகிழ்வினிற் திளைப்போம்..!

கொரோனாவின் தடங்களில்
இனியொரு புதுயுகம்
மலரட்டும் மலரட்டும்
மானிடம் சிரிக்கட்டும்..!

பத்மா இளங்கோவன்
(பிரான்ஸ்)

# வாசகர் பேசுகிறார்

ஞானம் 238ஆவது இதழ் சிறப்பாக வந்திருந்தாலும் திருஷ்டி கழிக்கும் விதமாக ஒரு கட்டுரை இருந்ததைக் கண்டேன். பேராசிரியர் துரை மனோகரன் அவர்களின் எழுதத்தூண்டும் எண்ணங்கள் பகுதி பற்றியதே எனது கருத்து.

அதிலும் குறிப்பாக 'நல்ல தமிழ் பேசவேண்டும்' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை அவர் நுனிப்புல் மேய்ந்தோ அல்லது பக்கம் சார்ந்தோ எழுதியதாகவே கருத வேண்டியுள்ளது.

நல்ல தமிழில் தனியார் வானொலிகள் பேசுவதில்லை என்று பொதுவாகச் சொல்லியுள்ள அவர் சூரியன் என்று நல்ல தமிழ்ப் பெயருடன் முதல்வனாக - தரப்படுத்தலில் முதலாமிடத்திலுள்ள சூரியன் வானொலி பிரதி புதன்கிழமை தோறும் முழுநாள் நிகழ்ச்சியாக 'பொற்காலப் புதன்' என்ற நிகழ்ச்சியை பேராசிரியர் கேட்டதில்லைப்போலும். முழுநாளும் நல்ல சினிமாப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து ஒலிபரப்பும் மிகப்பிரபல்லியமான நிகழ்ச்சி அது.

அதேபோல வார நாட்களில் காலை 7 மணிமுதல் 10 மணிவரை சூரியன் பணிப்பாளர் A.R.V. லோஷன் தொகுத்து வழங்கும் சூரிய ராகங்கள் நிகழ்ச்சி ஒரு அருமையான நிகழ்ச்சி. சமகாலத்தில் ஒலிபரப்பாகும் மிகச்சிறந்த சுவாரஸ்யமான நிகழ்ச்சியாகும். அரசியல், தகவல், சினிமா, இலக்கியம், விளையாட்டு என்று அனைத்தும் அடங்கியதாக நல்ல தமிழ் உச்சரிப்புடன் லோஷன் இதை வழங்கிவருவது அனைவராலும் பாராட்டப்படுகிறது.

இதைப்பற்றி துரை மனோகரன் அறியாரோ அல்லது ஒருதலைப்பட்சமாக ஒரு முடிவோடு எழுதினாரா என்று தெரியவில்லை சில குறிப்பிட்ட வானொலி நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பாளர்களையும் பற்றி மட்டுமே பாராட்டியும் மற்றையோரைப் பொதுவில் தாக்கியும் எழுதியிருப்பது வருத்தமளிக்கிறது. அத்துடன் மோசமாகச் செய்திகள் வாசிப்பவரை பெயர் குறிப்பிட்டுச் சொன்னால் அவர்கள் தமது பிழைகளைத் திருத்திக் கொள்ள உதவியாக இருக்கும். பிழையாக வாசிக்கிறார்கள் என்று பொதுவாகச் சொல்லும்போது அனைவரையும் அது பாதிக்கும். அதைவிட்டுவிட்டு சிலரைமட்டும் தனது கட்டுரையில் பேராசிரியர் சிலாகித்துள்ளார்.

சூரியன் வானொலி ஆண் செய்தி வாசிப்பாளர்கள் பற்றி சொல்லும்போதே கட்டுரையாசிரியர் நுனிப்புல் மேய்ந்தே கேட்டிருக்கிறார் என்று தெரிகிறது. செய்திகளின் தரமும் நடுநிலையும் பேணப்படுவதும் தெளிவான செய்தி வாசிப்பும் அங்கேதான் இருக்கிறது என்பது நான் உட்பட பெரும்பான்மையோரின் கருத்து.

அத்துடன் தனியார் வானொலிகளில் நல்ல தமிழைக் கேட்க முடியாமல் இருக்கிறது என்னும் போது அந்த குறித்த வானொலிகள் எவையென்று பெயரைச் சுட்டி விமர்சிக்க வேண்டும். பொதுமைப்படுத்தல் எல்லா வானொலிகளையும் குறித்துவிடும். அது நியாய மாகாது அத்தோடு நல்ல தமிழ் வேண்டி நிற்கும் பேராசிரியரும் 'ஸ்டையில்' என்பதை விட முடியாமல் இருப்பது பெரும் சோகம்.

●●● **எஸ். மோகனரூபன், கொழும்பு–04**

கட்டுரை எழுதுதல் ஒரு கலை. ஏப்ரல் ஞானம் இதழில் வெளிவந்த கட்டுரைகளில் தவத்திரு விபுலாநந்த அடிகளார் பற்றிய கோத்திரனின் கட்டுரை, யாழ்ப்பாணம் வீரமணி ஐயர் பற்றிய நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசரின் கட்டுரை என்பன அக்கருத்துக்கு வலுச்சேர்ப்பனவாய் அமைந்தன. கோத்திரன் அவர்கள், "அமேசன் போலவே எம்மிடையே இருந்த வேகமான மகாநதி" என்று விபுலாந்த அடிகளாரை அறிமுகம் செய்யும் போது எமக்கு ஏற்படும் மனவெழுச்சி, கட்டுரையின் விடயச்செறிவு, சொல்லாட்சி, வாசகரைக் கவரும் வடிவநேர்த்தி என்பன மனநிறைவைத் தருகின்றன.

"கமலமங்கையர் புனலிலாடிய" என்ற ஸப்தத்தின் தமிழ் சாகித்திய கர்த்தா வீரமணி ஐயர் அவர்கள் என்பது கார்த்திகா அம்மையாரின் கட்டுரை கூறிய பல புது விடயங்களில் ஒன்று. ஒரு மாணவியின் நெஞ்சப்பேழை பொத்தி வைத்துள்ள நினைவுகளின் இனிய சுகந்தத்தை நாமும் நுகர்ந்தோம். இன்றைய நமது உளச்சோர்வு நிலைக்கு இவை மாற்றாக அமைவன.

●●● **வசந்தி தயாபரன், கொழும்பு–06**

*மிக்க நன்றி. கொரோனாவை முறியடித்து வருகிறது ஞானம். வாழ்த்துக்கள்*

●●● **அ. முத்துலிங்கம் (கனடா)**

*ஞானம் 240ஆவது இதழ் கிடைத்தது. ஈழத்து இதழியல் வரலாற்றில மாதந் தவறாது 20 வருடங்கள் தொடர்ச்சியாக வெளிவந்து சாதனை படைத்த ஒரே ஒரு இதழ் ஞானம் மட்டும்தான். வேறு இதழ்கள் ஞானம்போல மாத ஒழுங்கில் வெளிவரவில்லை. இருபது வருடங்கள் 240 இதழ்கள். இது ஒரு பெரும் சாதனை. ஞானம் முதலாவது இதழிலிலேயே நான் கவிதை எழுதியவன். தொடர்ந்து ஞானத்துடன் பயணித்தவன். அந்த வகையில் ஞானம் சஞ்சிகை புரிந்த ஏனைய சாதனைகளும் என் நினைவில் வருகின்றன. அதிகூடிய பக்கங்களைக் கொண்ட பாரிய சிறப்பிதழ்களை - போர் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம், நேர்காணல் தொகுப்பு ஆகிய வற்றை வெளியிட்டிருப்பது இன்னுமொரு சாதனை. ஞானம் அச்சு இதழாகவும் இணைய இதழாகவும் வெளிவருவது மற்றுமொரு சாதனை. ஈழத்து தமிழ் இலக்கியச் சூழலை உலகத்தமிழ்ச் சூழலுடன் இணைத்து ஞானம் வெளிவருவது அடுத்த சாதனை. இதுவரை காலத்தில் 20 சிறுகதைப் போட்டிகளை வருடம்தோறும் நடத்தி சிறுகதை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்திருப்பது மற்று மொரு சாதனை. இப்படியாக காலத்துக்குக்காலம் சாதனை புரிந்துகொண்டே இருக்கும் ஞானம் மேலும் சாதனைகள் புரிய வாழ்த்துக்கள்.*

●●● **கவிஞர் குறிஞ்சிநாடன் கே. வெள்ளைச்சாமி**

---




**நாளிதழ்களில்**
**நாள் தோறும் செய்திகளில்**
**நாம் பார்க்கும் தொலைக்காட்சியில்**
**வாட்ஸ்ஏப்பில்,**
**பேஸ்புக்கில்,டுவிட்டரில்**
**எங்கும் எதிலும் 'கொரோனா'**
**எல்லோர் பேச்சிலும் 'கொரோனா'**
**அதனால்**
**என் கவிதையும் 'கொரோனா'**

**சீனதேசத்தில் பிறந்து**
**சர்வதேசத்தை அசத்தி**
**அச்சத்தில் ஆழ்த்தி**
**சீரழித்து சின்னாபின்னமாக்கும்**
**சர்வாதிகாரி 'கொரோனா'**

**நாயை நரியை**
**பாம்பை பன்றியை**
**எலியை வவ்வாலை**
**ஆமையை ஆந்தையையென**
**அனைத்தையும் சமைத்து**
**ரசித்து ருசித்து**
**சுவைத்து புசித்ததில் வந்த**
**வினையா 'கொரோனா'?**

**உலகையே ஆட்டிவைக்கும்**
**உன்மத்தம் பிடித்தோரையும்**
**உறக்கமின்றிஆட்டிவைக்கும்**
**உருச்சிறிய ஆட்டக்காரன் 'கொரோனா'**
**ஆட்சிவெறியில்**
**அடக்குநெறியில்**
**மடக்கிப் பிடிக்கும்**
**மமதை வெறியில்**
**நர்த்தனம் புரியும்**
**நாரீசர்களையும்**
**நடுநடுங்கவைக்கும்**
**அணுகுண்டு 'கொரோனா'**
**முகத்தை மூடும்**
**'பர்தா'வேண்டாம்**
**என்று முழங்கிய**
**மூர்க்க முட்டாள்களின்**
**முகத்தையும் மூடி**
**முழிக்க வைத்த**
**முகாந்திரம் 'கொரோனா'**

**வாருங்கள் வாருங்கள் நம் நாட்டுக்கு**
**வந்து வளம் சேருங்கள் நமக்கென்று**
**வாழ்த்தி வரவேற்ற தேசங்கள்**
**வராதீர்கள் எங்கள் நாட்டுக்கு,வந்து**
**தராதீர்கள் 'கொரோனா'வை எமக்கென்று**
**வரவுத்தடை விதிக்கவைத்த**
**வைரலான வைரஸ் 'கொரோனா'**

**சீனத் தயாரிப்புகள்**
**சீக்கிரமாய் அழிந்துவிடும் என்பார்**
**சீனத்தயாரிப்பு 'கொரோனா'**
**சீக்கிரமாய் அழிக்கிறதே உயிர்களை**
**சீரழிக்கிறதே உலகை**
**'சிக்'கென வந்த 'கொரோனா'வை**
**சீக்கிரமாய் அழிக்குமா விஞ்ஞானம்**
**சித்தம் கலங்கும் மக்களை**
**சிரிக்கவைக்குமா**
**நம் ஞானம்**

***கலாபூஷணம் சட்டத்தரணி***
***ரஷீத் எம். இம்தியாஸ்***